
# நிழல்



சோ. ராமேஸ்வரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF JAFFNA LIBRARY
2000 -5- 7 91

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிழல்

UNIVERSITY OF PERADENIYA
2000 - 5 - 31
LIBRARY

சோ. ராமேஸ்வரன்

515251

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியரின் பிறநூல்கள்

**நாவல்**

| | |
|---|---|
| ❒ யோகராணி கொழும்புக்குப் போகிறாள் | 1992 |
| ❒ இவர்களும் வாழ்கிறார்கள் | 1993 |
| ❒ இலட்சியப் பயணம் | 1994 |
| ❒ அக்கரைக்கு இக்கரைப் பச்சை | 1994 |
| ❒ மௌன ஒலங்கள் | 1995 |
| ❒ வடக்கும் தெற்கும்<br>(மக்கள் சமாதான இலக்கிய மன்றத்தினால் நடத்தப்பட்ட நாவல் போட்டியில் முதல் பரிசும், அரசகரும மொழிகள் திணைக்களம் 1996இல் நடத்திய போட்டியில் கல்வி, ஆராய்ச்சித் தொடர்புத் துறையில் மூன்றாம் பரிசும் பெற்ற நாவல்) | 1996 |
| ❒ இன்றல்ல, நாளையே கலியாணம் | 1996 |
| ❒ சத்தியங்கள் சமாதிகளாவதில்லை<br>(அரசகரும மொழிகள் திணைக்களம் 1997இல் நடத்திய போட்டியில் புத்தாக்கத் துறையில் மூன்றாம் பரிசு பெற்ற நாவல்) | 1996 |
| ❒ இந்த நாடகம் அந்த மேடையில் .......... | 1997 |

**சிறுகதைத் தொகுப்பு**

| | |
|---|---|
| ❒ சுதந்திரக் காற்று | 1994 |
| ❒ பஞ்சம் | 1995 |
| ❒ புண்ணிய பூமி | 1997 |
| ❒ நிதாஸே வா ரலி (சிங்களம்)<br>(மொழி பெயர்க்கப்பட்ட 11 சிறுகதைகளை உள்ளடக்கியது) | 1995 |
| ❒ Air of Freedom<br>(மொழி பெயர்க்கப்பட்ட 07 சிறுகதைகளை உள்ளடக்கியது) | 1996 |

**சிறுவருக்கான சிறு கதைகள்**

| | |
|---|---|
| ❒ படித்து மகிழ பயன்மிகு பத்துக் கதைகள் | 1997 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிழல்

(குறுநாவல்)

சோ. ராமேஸ்வரன்

515251

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

This book is printed through the patronage and sponsorship of the Sri Lanka National Library Services Board. It should be noted that the contents of this book do not reflect the views of the National Library Services Board.

# நிழல்

(குறுநாவல்)

ஆசிரியர் : சோ. ராமேஸ்வரன்

முதலாவது பதிப்பு : மார்ச், 1998

பதிப்புரை : ஆசிரியருக்கு

வெளியீடு : திருமதி செ. ராமேஸ்வரன்
41/2, சித்ரா ஒழுங்கை,
கொழும்பு – 05

அச்சுப்பதிப்பு : தரஞ்ஜி பிரின்ட்ஸ்,
506, ஹைலெவல் வீதி,
நாவின்ன, மஹரகம

விலை : ரூபா 60/=

# Nilal

(Novelette)

Author : S. Rameswaran

First Edition : March, 1998

Copyright by : Author

Published by : Mrs. S. Rameswaran
41/2, Chitra Lane, Colombo - 05

Printed by : Tharanjee Prints,
506, High Level Road,
Nawinna, Maharagama

Price : Rs. 60/=

**ISBN No. 955-96039-3-0**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2000-55-33 LIBRARY

## ஆசிரியர் உரை

எமது தமிழ் சமுதாயத்தில் புரையோடிக் கிடந்த தீய நோக்குடைய சில பாரம்பரிய கோட்பாடுகள் இன்னும் தொடர்கின்றன என்பதை எவருமே மறுக்க மாட்டார்கள். ஒருத்திக்கு ஒருவன், காதலித்தவனையே கணவனாக அடைய வேண்டும், காதலில் தோல்வியுற்றவள் கன்னியாகவே காலம் கழிக்க வேண்டும், கற்பிழந்தவள் திருமண வாழ்க்கைக்கு உரித்தானவள் அல்லள், விதவைகள் காலம் பூராவும் விதவைக் கோலத்தில் அழுந்த வேண்டும் போன்ற ஆண்மகனின் ஆதிக்கத்திற்குச் சார்பான தவறான எண்ணங்களுக்கு இந்தப் பாரம்பரியக் கோட்பாடுகள் வித்திட்டுவிடுகின்றன. சிலர் இதன்படியே ஒழுக வேண்டும் என்ற எண்ணத்திலும் வாழ்கிறார்கள்.

இந்தப் பாரம்பரியக் கோட்பாடுகள் நடைமுறையில் அழுத்தமாக இல்லாத போதும், அவை பெண்களின் உள்ளத்தில் காரணம் கற்பிக்க முடியாத பயத்தையும், குற்ற உணர்வையும் ஏற்படுத்தி, அவர்களின் வாழ்க்கையை ஒரு கேள்விக்குறி நிலையில் வைத்துவிடுகிறது. இவ்வாறான நிலையில் – மன அமைதியை இழந்த நிலையில் இன்ப, துன்பங்களைப் பிரித்தறிய முடியாது தவித்து, தமது வாழ்க்கையை இருளுக்குள் தாழிட்டு வைத்திருக்கும் பெண்கள் தான் எத்தனை! எத்தனை!! அவர்கள் வாழ்வில் தான் எத்தனை துன்பங்கள்! துயரங்கள்!! நாமும் வாழ்கிறோம் என்ற நிலையில் – மனதை ஒரு நிலைப்படுத்த முடியாமல், ஆசைகள், கற்பனைகள், உணர்வுகள் என்ற வார்த்தைகளின் அர்த்தங்களைப் புரியாமல் அழுத்தமற்ற, மேலெழுந்த வாரியான வாழ்க்கையை – நாமும் வாழ்கிறோம் என்ற ரீதியில் – மேற் கொள்கிறார்கள்.

இவ்வாறு நடைப்பிணமாகப் பெண்கள் வாழும் ஒரு நிலை நிலவும் அதே வேளை, இவ்வாறான ஒரு நிலைக்கு மனத் தைரியத்துடன் முகம் கொடுத்து, வாழ்ந்து காட்டுகிறேன் என்று வாழும் பெண்களும் இல்லாமல் இல்லை. சமூகத்துடன் பின்னிப்பிணைந்துள்ள, பாரம்பரிய கோட்பாடு களுக்குள் சிக்கியுள்ள கட்டுப்பாடுகளுக்கு எதிராக நீச்சல் அடித்து, புதிய, அல்லது தனித்த வாழ்க்கையை – அதுவும் ஒரு மனத் திருப்தியுடன், மலர்ச்சியை அரவணைத்தவண்ணம் மேற்கொள்ளும் பெண்களும் நம்மில் இன்று வாழ்ந்து உதாரஸ்திரிகளாக உலாவுகின்றனர். அவர்கள் வாழ்வில் பூரணத்துவம் அடங்கி யுள்ளது. பெருமிதத்துடன் வாழ்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கே எனது சுபோதினி சமூகத்தின் அநாகரீகப் பார்வைக்கு உள்ளாகி விடுகிறாள். அவளுக்குச் சமூகம் தண்டனை வழங்க எத்தனிக் கின்றது. ஆனால், அவள் அத் தண்டனையை ஏற்றுக் கொள்ள மறுக்கிறாள். அதுக்கு எதிராக வாழ்ந்து காட்டுகிறேன் என்ற முடிவுக்கு வருகிறாள்.

வாழ்க்கையில் வெற்றியீட்டுவதும், தோல்வியடைவதும் வாழ்வின் ஒரு நியதியாகும். தோல்வியிலும் வெற்றியை ஈட்டலாம் என்பது எனது அபிப்பிராயமாகும். இதை ஆதாரமாக வைத்துக் கதையை நகர்த்தியுள்ளேன்.

எனது இக் கதையின் கருப்பொருளையிட்டு, என்னுடன் பணிபுரியும் பெண்களுடன் விவாதித்தேன். அவர்களுடன் கலந்தாய்ந்தேன். அவர்கள் சிலரின் கருத்துக்கள் எனது கருத்துக்களுக்கு முரண்பட்டிருந்தன. ஆனால், எனது மனதில் ஆழப்பதிந்திருந்த கருத்துக்களையே சுபோதினியில் செலுத்தி இருக்கிறேன்.

இது கற்பனையாக இருக்கலாம். ஆனால், நிறைய யதார்த்தம் கலந்திருக் கின்றது. தவறாக முடிவு எடுக்கும் ஒரு சிலரின் கோணலான எண்ணங்களை நிமிர்த்த முயன்றிருக் கிறேன். வாசித்துப் பாருங்களேன்.

**சோ. ராமேஸ்வரன்**
*41/2 சித்ரா ஒழுங்கை*
*கொழும்பு 05*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# (1)

ஆகாயத்திற்கு திடீரென அவசரம் வந்துவிட்டது. மேகங்கள் யாவும் சாம்பலாகி, கருகிவிட்டன.

சூடான காற்று உருகிவிட்டது. குளிர்காற்று தன் உணர்ச்சியைத் தாராளமாக வெளிப்படுத்தியது.

தென்னை மரங்களின் 'சலசல'ப்புக்குள் ஆக்ரோஷம் ஊடுருவி விட்டது. ஓலைகள் பேயாட்டம் போட்டன.

இடி முழங்கியது, மின்னல் ஒன்று வெட்டியது.

'மழை வரப் போகுது போல....' சுபோதினி மனதினுள் 'முணு, முணு'க்கிறாள்.

அவளுள் ஆழமற்ற 'பர, பர'ப்பு நுழைகிறது.

பார்வையைப் பத்திரிகையில் இருந்து எடுத்து, முன்னால் பரம்பி இருந்த சிறுவர்கள் மீது விசுறுகிறாள். அவர்கள் கால நிலையின் மாற்றத்தினால் ஏற்படப் போகும் விளைவை எண்ணிப் பார்க்காமல், தமது விளையாட்டுக்களைத் தொடர்கிறார்கள். அவர்களிடம் தான் எத்தனை சந்தோஷம்....! தாம் அனாதைகள் என்ற நினைப்பின்றி – உற்சாகத்துடன் விளையாட்டுக்களில் ஈடுபட்டிருக்கின்றார்கள். ஓடிப்பிடித்து விளையாடுவதும், கெந்திப்பிடித்து விளையாடுவதும்.... பலூன்களை ஊதுவதும்....

மூன்று நாட்களுக்கு முன் வெளிநாட்டைச் சேர்ந்த ஒரு நடுத்தர வயதுத் தம்பதி வந்து ஓர் அழகான குழந்தையை – அது அனாதை தான் – தத்து எடுக்க முற்பட...... அங்கிருந்த அனாதைப் பிள்ளைகள் யாவும் அச் செயலைத் தடுத்துவிட்டனர்.

"அக்கா, அவையள் ஈசனை வெளிநாட்டுக்காரருக்கு விக்கப் பார்க்கினம்" என்று ஒருத்தி – பதினாறு வயதுக்குள் அடக்கம் – சுபோதினியிடம் முறையிட்டாள்.

'மெடம்' என எல்லோராலும் கௌரவத்துடன் அழைக்கப்படும் மீனாட்சியம்மாளிடம் சென்று ஈசனை மீட்கும் பணியை எல்லா அனாதைச் சிறார்களுமே சுபோதினியின் தலையில் சுமத்திவிட்டனர்.

தயக்கத்துடன், ஆனால் தெளிந்த, உறுதிபாய்ந்த உள்ளத்துடன் 'மெடத்தை' நாடினாள் சுபோதினி.

மீனாட்சியம்மாளுடன் நிறையவே வாக்குவாதப்பட்டாள். இறுதியாக சுபோதினியின் வார்த்தைகளுக்கு அவள் கட்டுப்பட்டாள்.

ஈசன் – மூன்று வயது இருக்கலாம் – காப்பாற்றப்பட்டான்.

சிறார்கள் யாவரும் ஓடிவந்து சுபோதினியைக் கட்டி அணைத்து....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரவு இதையெல்லாம் எண்ணி சுபோதினி ஆனந்தக் கண்ணீர் சொரிந்தாள்.

கொடிய யுத்தம் ஆயிரக்கணக்கான சிறார்களை அனாதைகளாக்கி விட்டது. அந்த துரதிர்ஷ்டசாலிகள் மத்தியில் முப்பது சிறார்கள் அதிர்ஷ்டசாலிகளாக – விவேகானந்தா அனாதை ஆசிரமத்தில் – அன்பு உள்ளங்களின் பராமரிப்பில் அடைக்கலம் புகுந்திருந்தார்கள்.

ஈசன் தான் வயதில் குறைந்தவன். அங்கு கொண்டு வரப்பட்ட போது, மூன்று மாதக் குழந்தை. பெற்றோர் மூதூரில் ஒரு 'ஷெல்' லடியில் மரணித்து விட்டார்கள். சிறிய தாய் – திருமணமாகாதவள் – ஈசனை மார்போடு அணைத்தாள். ஆனால், தாலாட்டி, சீராட்டி வளர்க்கும் பக்குவம் அவளுக்குத் தெரிந்திருக்கவில்லை. பணமும் இருக்கவில்லை. அகதி முகாமில் வளர்ப்பதற்கான வசதியும் இருக்கவில்லை.

அரசாங்கச் சார்பற்ற தாபனம் ஒன்றின் பிரதிநிதிகள் நிவாரணம் வழங்கச் சென்ற போது ஈசனின் அழுகை அவர்களின் மனதைக் கரைக்கின்றது. ஒரு பிரதிநிதி – அறுபது வயதில் பேரப்பிள்ளையை கண்டவள் – மனம் பொறுக்க முடியாமல் குழந்தையை நோக்கி கைகளை நீட்டினாள். குழந்தை புன்னகைக்கிறது.

அவர்கள் யாவரும் கொழும்பு திரும்பும் போது, அப் பெண்மணியின் மடியில் குழந்தை கிடக்கிறது.

அவள் அதை விவேகானந்தா அனாதை ஆசிரமத்தில் ஒப்படைக்கும் போது, "அந்த சிவனே என்னட்டை இந்தக் குழந்தையை ஒப்படைத்திருக்கிறார். ஈசன் எண்டு பெயர் வையுங்கோ" என்கிறாள்.

இது ஈசனின் முகவுரை

சுபோதினி பத்திரிகையில் கண்ணோட்டத்தைச் செலுத்தி இருந்தாள்.

செய்திகளை வாசிக்க முற்படுகையில் சில துளி ஈரம் அவளை அர்ச்சிக்கின்றது.

"மழை.....மழை....."

சிறார்கள் யாவரும் வானத்தைப் பார்த்து முகம் மலர்கிறார்கள். ஒருவன் வாயைத் திறந்து மழைத் துளியை ஏந்த..... 'கல, கல' வென நகைப் பொலி அங்கு சிதறுகின்றது.

"எல்லோரும் உள்ளை போங்கோ....." சுபோதினி அதட்ட ஒருவரும் அசையவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஊம், போங்கோ......"

"சுபோ அக்கா, நல்ல மழை....." சிறுமி ஒருத்தி வெள்ளையாகச் சிரிக்கிறாள்.

"எல்லோரும் மழையில நனையுறியள். இக்கனம் காய்ச்சல் தான் வரப் போகுது. 'பிளீஸ் கோ ஃபுரம் ஹியர்'....."

சில சிறுமிகள் சுபோதினியின் அதட்டலைச் செவிசாய்த்து, ஆசிரமத்தின் மண்டபத்திற்குச் சென்றார்கள். வயது வந்த பெண் பிள்ளைகளும் அவர்களைப் பின் தொடர்ந்தனர்.

"கிரி, பாபு, ராஜா, வசந்தன்..... எல்லாரும் உள்ளே போகலாம். தடி எடுக்கிறதோ?"

சுபோதினியின் மிரட்டலுக்கு எல்லோரும் மிரண்டு, உள்ளே போய் விட்டனர்.

ஆனால், அந்த மழைத் தூறலை சுபோதினி பொருட்படுத்தவில்லை. நனைகிறோமே என்ற நினைப்பைத் தூரத்தில் வைத்திருந்தாள்.

மண்டபத்தில் குழுமி நின்றவர்கள் அங்கு தமது விளையாட்டை – போதிய இடவசதி இல்லாதபடியால் அரைகுறையாகத் தொடர்ந்தனர். ஒரே சத்தம். மண்டபம் அதிர்ந்தது.

மீனாட்சியம்மாள் தனது பருத்த சரீரத்தைத் தூக்க முடியாமல் வந்தாள்.

"உஸ்..... 'மெடம்.....மெடம்'......"

மீனாட்சியம்மாள் சிறுவர்களுக்குள் அடங்கி நின்றாள்.

ஓரிருவரைத் தவிர, எல்லோருமே தம்மை மறந்திருந்தனர். ஆடுவதும், ஓடுவதும்.....

"பிள்ளையள்..... உங்கட, உங்கட அறையளுக்குப் போய் உடுப்பை மாத்திப் போட்டு படிக்கத் தொடங்குங்கோ." மீனாட்சியம்மாள் கீழே குனிந்து ஈசனை வாரி எடுத்தாள்.

ஈசன் திமிறினான். "விளையாட விடுங்கோ....."

"போதும்டா. நீ படிக்கத் தேவையில்லை. என்ர அறைக்கு வா."

சிறார்கள் யாவரும் கலைந்து விட்டனர்.

மீனாட்சியம்மாள் விழிகளை அலைக்கழித்தபடி நடந்தாள். அவள் மேனியில் ஈசன் சுகமாக வீற்றிருந்தான்.

மழைத் தூறல் நின்றுவிட்டது.

மேகங்களும் வெளுறிவிட்டன.

சுபோதினி அசையவில்லை.

இருள் மெல்ல, மெல்ல தன் போர்வையை வளைத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுபோதினியின் பார்வை நிலவில் முற்றுப்புள்ளி அடைந்திருந்தது.

"அக்கா....."

நிரோஷா கைகளைப் பிசைந்தவண்ணம் நிற்கிறாள்.

"என்ன நிரோ...?"

"அக்கா, உங்களை பார்க்கக்கிள்ளை எனக்கு துக்கம் வாறது....."

சுபோதினி மெலிதாகப் புன்னகைத்தாள். "துக்கமா? என்னை பார்க்கக்கிள்ளை துக்கம் வருதா?"

"ஓம் அக்கா. உங்கட முகத்தை பார்க்கக்கிள்ளை நீங்கள் 'எதையோ' இழந்து, தவிக்கிறீங்க எண்டு தெரியுது."

சுபோதினி பதில் கூறாமல் நிலவில் கண்களைப் பதிக்கிறாள்.

"அக்கா, நான் சொல்லுறது சரியா?"

சுபோதினி தன் பார்வையைத் தாழ்த்தினாள். நிரோஷாவின் முகத்தை நோக்குகிறாள். பதினாறு வயதில் தத்தளிக்கும் அந்தப் பிஞ்சின் முகத்தில் தவிப்பு தத்தளிப்பதை அவதானிக்கிறாள்.

"நிரோ....." சுபோதினியிடம் இருந்து பெருமூச்சொன்று கிளம்புகிறது. "இந்த ஆசிரமத்தில இருக்கிற பிள்ளையளிலை நீர் தான் கொஞ்சம் துடினம். உம்மைக் காணக்கிள்ளை என்ர மனதில இருக்கிற துக்கங்களை, வெக்கங்களை எல்லாம் வெளியிட வேணும் எண்டு துடிக்கிறனான். ஆனால்....." சுபோதினி தலை குனிகிறாள்.

நிரோஷா அவள் நாடியில் கைவைத்து, அவள் தலையை உயர்த்தினாள். "நீங்கள் எங்களைப் போல அனாதை இல்லை. உங்களுக்கு அப்பா, அம்மா, சகோதரங்கள் எல்லாம் இருக்கினம்..... அப்படித் தானே?"

'ஆம்' என சுபோதினி தலையாட்டினாள்.

"அப்படி எண்டால் உங்கட வாழ்க்கையில நடக்கக்கூடாதது..... காதல் தோல்வி..... இல்லாட்டி..... அதை என்னெண்டு சொல்லுறது எண்டே தெரிய இல்லை....."

சுபோதினியின் கண்கள் பனித்தன.

"காதல் தோல்வி ஒண்டு. கற்பை இழந்தது இன்னொண்டு. சினிமாவில வாற மாதிரி ஒரு தடவையிலையே வயித்தில பிள்ளை வளர்ந்தது மற்றொண்டு. இந்த மூண்டும் என்னை இந்த ஆசிரமத்துக்குள்ளை தள்ளிவிட்டுது."

"பொம்பளையளுக்கு ஏன் தான் கற்பு எண்ட ஒண்டைப் படைச்சிருக்கிறாங்களோ.....? அதால நாங்கள் படுறபாடு."

"அந்த ஒண்டை இழக்கிறதால எல்லாத்தையும் இழக்கிற மாதிரி எங்கட சமுதாயம் மாறிவிட்டதை நினைக்கக்கிள்ளை தான் துக்கமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்குது."

"அக்கா, உங்களுக்கு என்ன நடந்தது? விளக்கமாகச் சொல்லுங்கோவன்."

"கட்டாயம் சொல்ல வேணுமோ?"

"இது உங்கட 'பேர்சனல் மெட்டர்' தான். எனக்கு சொன்னால் உங்கட மனதில இருக்கிற பாரம் குறைஞ்ச மாதிரி இருக்கும் தானே?"

சுபோதினி புன்னகை ஒன்றை விரிவாக வெளியிட்டாள். பின் நிரோஷாவின் கன்னத்தில் மெல்லக் கிள்ளினாள். "என்ர கதையைக் கேட்க அவ்வளவு ஆசை போல....."

நிரோஷா வெகுளியாகப் பற்கள் தெரியச் சிரித்தாள்.

சுபோதினியின் நினைவு நான்கு வருடங்களுக்கு அப்பால் பறக்கிறது.

## (2)

ரயில் ஒன்று நிறைய இரைச்சலை விசிறியவண்ணம் பறந்தது.

சுபோதினி நித்திரையில் இருந்து எழுந்து விட்டாள். சோம்பலும் முறித்துவிட்டாள். ஆனால், கட்டிலில் இருந்து எழத் தயக்கம் காட்டி இருந்தாள்.

வானொலியில் செய்திக்கான இசை கர்ண கடூரமாகக் கேட்க, அவளுள் எரிச்சல். ஒரே தாவில் பாய்ந்து சென்று, வானொலியின் ஒலி வேகத்தை கட்டுப்படுத்த முயல..... வானொலி அருகே வேலாயுதம் நிற்க..... "அப்பா" என்று கூவியபடி நடைக்குக் கட்டுப்பாடு விதிக்க, தந்தையுடன் மோதி விடுகிறாள்.

"மொக்கு..... மொக்கு......" வேலாயுதம் கத்துகிறார்.

சுபோதினி கனைத்தபடியே சமையலறைக்குள் நுழைய, "இண்டைக்கு முதல் முதலாக வேலைக்குப் போகிறாய். கொஞ்சம் கெதிப்பண்ணி ஒழும்பத் தெரியாதோ?" என தாய் மங்களம் மகளின் முகத்தைப் பார்க்காமலேயே கேட்கிறாள்.

"வேலை? எட்டரைக்கு நின்றால் போதும் தானே?"

"குளிச்சு, வெளிக்கிட்டு, சாப்பிட்டு 'பஸ்' பிடிச்சுப் போறதெண்டால்...... ஐஞ்சு மணிக்கு ஒழும்பினால் தான் எட்டரைக்காவது போகலாம் எண்டு அப்பா சொல்லுறார்."

"அப்பாவுக்கு எல்லாம் தான் தெரியும். ஒரு 'குவிக் பாத்', ஒரு 'குவிக் டிரஸ்ஸிங்'. நிண்டு கொண்டு ஒரு விழுங்கல். அதுக்குப் பிறகு வீட்டில இருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு பாய்ச்சல். நசிஞ்சு, வேர்த்து ஒழுக 'பஸ்'சுக்குள்ள நுழைஞ்சால் எட்டரைக்குள்ள 'ஒபிஸுக் குள்ளை' காலை வைச்சிடலாம்." சுபோதினியின் கண்கள் நாலாபுறமும் சுழல்கின்றன.

"கோப்பியா? பல்லை மினுக்கிட்டு வா. தாறன்."

"பல்லு? நேத்தைக்கு இரவே மினுக்கிட்டன். 'ஸோ', அது நல்ல 'கிளீன்'. கோப்பியைத் தாங்கோ. குளிக்கக்கிள்ளை 'சோப்' போடுவன் தானே? அப்ப பல்லையும் மினுக்கிடுறன்."

"'நோ ஐ வோண்ட் கிவ்'. போய் பல்லை மினுக்கிட்டு வா. நல்ல பழக்கத்தைப் பழகு. தலைப்பிள்ளை. மற்றவையளுக்கு நீ தான் வழிகாட்டி. சுரேஷ் ஐஞ்சு மணிக்கே ஒழும்பி, பல்லு மினுக்கி, முகம் கழுவி, கோப்பி குடிச்சிட்டு படிக்கிறான். தர்ஷி நாலு மணிக்கே ஒழும்பி....."

"என்னைத் தவிர எல்லாரையும் புளுகிறதில 'யு கெட் எ திரில்'."

"'யெஸ்', அதுகள் 'டிசிபிளின்' தெரிஞ்சதுகள். நீ...... நீ......"

"'ஷட் அப்' அம்மா." சுபோதினி சிரிக்கிறாள். "எனக்கு கோப்பியும் வேண்டாம். மண்ணாங்கட்டியும் வேண்டாம்." அவள் திரும்ப, கதவு வாசல் அருகில், வேலாயுதம் கர்ணகடூர பார்வையுடன் நிற்கிறார்.

சுபோதினி நாக்கைப் பற்களால் கடித்தபடி அங்கிருந்து அகல முற்பட தந்தையின் முகத்தில் கோபம் தத்தளிப்பதைக் கண்டு, "'சொரி' அப்பா 'சொரி' ...... உங்கட 'வைப்பை' ஏசிவிட்டேனோ?" என்று கேட்டபடி தந்தையைக் கடந்து சென்றாள்

. "எல்லா வீட்டிலையும் கடைசிப் பிள்ளை தான் செல்லமாக வளரும். எங்கடை வீட்டில மூத்த பிள்ளை தான் செல்லமாக வளருது." வேலாயுதத்தின் குரலில் சீற்றம் மலிந்திருந்தது.

"பொறுப்பு வந்தால் 'சீரியஸாகி' விடுவாள்." மங்களேஸ்வரி மகளுக்கு பரிந்து பேசினாள்.

"நீர் தான் அவளுக்கு செல்லம் குடுக்கிறீர்."

"உண்மை தான். ஆறு, ஏழு வருசத்திற்குப் பிறகு பிறந்த பிள்ளை......"

வேலாயுதம் செய்தியின் மிச்சசொச்சங்களைக் கேட்க விரைந்தார்.

சினிமாப் பாடல் ஒன்றைச் சுபோதினி 'ஹம்மிங்' செய்கிறாள். முகத்தை நிலைக் கண்ணாடியில் பார்க்கிறாள். 'பவுடர்' எடுத்து நெற்றியில் பூசி, அதில் வழிந்திருந்த வழுவழுப்பைப் போக்குகிறாள்.

புன்னகைத்துப் பார்க்கிறாள். மலர்ச்சி இருக்கிறது தான். பற்களைக் காட்டிச் சிரிக்கிறாள். பற்கள் பளிச்சிடுகின்றன. மகிழ்ச்சி அரவணைக்கின்றது.

'ஹாண்ட் பாக்' கை தோளில் கொளுவுகிறாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அக்கா......" மகிழ்ச்சியில் கூவுகிறாள் தர்ஷிகா.

"என்ன......?" சுபோதினி ராகம் இழுக்கிறாள்.

"அழகே உன்னை ஆராதிக்கிறேன்" என்றபடி தமக்கையை தர்ஷிகா கட்டி அணைக்க, "சீ......விடடி. சாரி' கசங்கப் போகுது" என்று சுபோதினி திமிருகிறாள்.

தர்ஷிகா தன் பிடியைத் தளர்த்துகிறாள். தமக்கையைப் பெருமை படர நோக்குகிறாள். "அக்கா, நீ நல்ல வடிவு. உனக்கு வாற மாப்பிள்ளை பாடு கொண்டாட்டம் தான்."

"சீ...... படிக்கிற பிள்ளை கதைக்கிற கதையா இது?"

"அக்கா......"

"என்னடி?"

"எங்கட வகுப்பில இருக்கிற தொண்ணூறு வீத 'கேர்ள்ஸுக்கு போய் பிரெண்ட்ஸ்' இருக்குது எண்டு உனக்குத் தெரியுமா? நான் இப்பவும் பால் குடி 'பபா' இல்லை. உனக்கு வாற மாப்பிள்ளையைப் பற்றி இல்லை, எனக்கு வாற மாப்பிள்ளையைப் பற்றிக் கூட கதைக்க எனக்கு பக்குவம் இருக்குது."

"இப்ப எல்லாரும் தான் கெட்டுப் போயிட்டினம்."

"உலகம் மாறுது. அதுக்கேத்த மாதிரி நாங்களும் மாற வேணும். நாங்கள் பழைய பஞ்சாங்கம் இல்லை."

"உனக்கு எத்தனை 'போய் பிரெண்ட்ஸ்' இருக்கிறாங்க?"

"ஒருத்தனும் இல்ல. படிக்கிற வயசில படிக்க வேணும் எண்ட ஒரு 'பொலிஸி'யை வைச்சிருக்கிறன். 'டியூஷனுக்கு' போகக் கிள்ளை எத்தனை 'போய்ஸ்' பின்னால வந்திருப்பாங்க? எல்லாரையும் முறைச்சுப் பார்த்திடுவன்."

"'குட், குட்'...... உனக்கு இந்த பதினெட்டு வயசில பக்குவம் வந்திட்டுது போல......"

"நீ என்ன மாதிரி? அப்பான்ர செருப்பைத் தேய்க்காத மாதிரி ஆரையாவது...... 'லவ்'...... பண்ணுறியா?"

சுபோதினியின் கண்கள் 'படபட'த்தன. தங்கையிடம் என்ன பதில் கூறுவது? உண்மையைக் கக்குவதா? வேண்டாம். இப்போதைக்கு அதை மறைப்பதே சிறந்தது என நினைக்கிறாள்.

"'நோ. லவ்' வைப் பற்றி இன்னும் நினைக்க இல்ல. 'பட் லவ்' வில எனக்கு நம்பிக்கை இருக்குது."

"'ஸோ, புரபோஸல்'ல உனக்கு நம்பிக்கை இல்லையோ?"

"எனக்குரியவரை நானே 'செலக்ட்' பண்ண வேணும் எண்டு விரும்புறன்."

"'குட்'."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தர்ஷிகா வெளியேறுகிறாள்.

சுபோதினியின் மனதினில் பிரதீப்பின் முகம் படிமமாகப் படிகின்றது.

மங்களேஸ்வரி 'பரபர'த்தாள்.

"சுபோ......நேரம் வந்திட்டுது......ஏழு நாப்பத்தைஞ்சு......"

வேலாயுதம் 'ஹோலில்' குறுக்கும், நெடுக்குமாக நடைபயின்றார்.

"கத்தாதேங்கோ......வாறன்."

"காலமை துடக்கம் என்ன செய்யுறாளாம்? எத்தனை தரம் கண்ணாடியில முகத்தைப் பார்த்திருப்பாள்? இவளால நானும் இண்டைக்கு 'லேட்' தான்." வேலாயுதம் சினத்தை வெளிப்படுத்தினார்.

"அப்பா, உங்களுக்கு 'லேட்' எண்டால் நீங்கள் போங்கோ. எனக்கு தனியாகப் போகத் தெரியும்." சுபோதினி 'ஹோலுக்கு' வந்து விடுகிறாள்.

வேலாயுதம் ஒரு முறை மகளை முழுமையாக மேய்கிறார். அவர் கண்களுக்குள் புதுமையான ஆச்சரியம் புகுந்து விடுகிறது. மகளின் அழகு – 'இது என் மகளா' என அவரையே திணற வைக்கின்றது.

"வா......வா......போவம்." வேலாயுதம் அவசரப்படுகிறார்.

"இண்டைக்கு மட்டும் அப்பாவோட போ. நாளைக்கு நீ தனியாகப் போகலாம்."

"அம்மா போயிட்டு வாறன்."

"இஞ்ச மாதிரி 'ஒஃபிஸிலையும் ஜோக்' அடிக்காதை. 'சீரியஸாக' இரு......"

நடந்தவள், தாயைத் திரும்பிப் பார்க்கிறாள். நாக்கை நீட்டி பழிப்புக் காட்டுகிறாள்.

மங்களேஸ்வரியின் முகத்தில் கோபமும், துயரமும் போட்டியிடுகின்றன.

'பஸ்'கள் சனத்தை நிறைய வாரி அள்ளிக் கொண்டு ஊர்ந்தன. வேலாயுதம் நிறையவே முணுமுணுத்தார். அவர் நெற்றியில் வியர்வைத் துளிகள். மகளைப் பார்த்து மனமும் பொருமினார்.

ஒரு 'பஸ்'சின் படிக்கட்டைக் கூட இவர்களால் காண முடியவில்லை. இந்த சனம் எல்லாம் எங்கு அள்ளுப்பட்டுக் கொண்டு போகிறது என்ற ஒரு நினைப்பும் வேலாயுதத்தினுள் நடனமாடியது.

சுபோதினிக்கு எல்லாமே சுவாரஷ்யமாக இருந்தது. 'பஸ்' தூரப்போய் நிற்பதும், ஆட்கள் 'பஸ்'ஸை நோக்கி ஓடுவதும், ஒன்றிரண்டு பேர் ஏற முன் 'பஸ்' சீறுவதும்...........



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிக்கடி சேலையை சரி செய்து கொண்டு, கண்களை இலக்கின்றி சுழல விடுகின்றாள்.

வேலாயுதம் பொறுமையை இழக்கிறார்.

'ஓட்டோ ரிக்ஷோ' ஒன்று வர, வேலாயுதம் நிறுத்துகிறார்.

"ஏறு."

சுபோதினி ஏற, 'ஓட்டோ ரிக்ஷோ'வைத் தாண்டியபடி 'மோட்டார் சைக்கிள்' ஒன்று செல்ல, அவளுள் மகிழ்ச்சி பூக்கிறது.

பிரதீப் அதில் செல்கிறான்.

'இந்த அப்பா இல்லை எண்டால், பிரதீப்போட போயிருக்கலாம்........'

அவள் சிந்தனையை வேலாயுதம் கொய்கிறார். "ஏறன். காலைமையே கனவு காணுறியா?"

'வேலாயுதம் நீர் என்ர கோபத்தைக் கிளறாதையும்' சுபோதினி மனதினுள் தகப்பனை நிறையவே அர்ச்சிக்கிறாள்.

## (3)

தொண்டையை இரண்டாவது தடவையாகச் செருமினான் நிர்மலன்.

சுபோதினி புன்னகையை இதழில் இருந்து அகற்றவில்லை.

"'ஸோ, ஏ.எல்'லோட படிப்பை விட்டுட்டு 'கம்பியூட்டர் சயன்ஸ்' படிச்சீரா?" நிர்மலன் அந்த நிறுவனத்தின் பிரதம கணக்காளர். கண்களில் குறும்பைத் தக்க வைத்திருந்தான்.

"'யெஸ் சேர்.' ஒரு 'பீ' கூட கிடைச்சிருந்தால் 'யூனிவேர் ஸிட்டிக்கு என்ரர்' பண்ணி இருப்பன். அதிர்ஷ்டம் கொஞ்சம் தூர விலகி விட்டுது."

நிர்மலன் கவர்ச்சியாகச் சிரித்தான். "அதால அதிர்ஷ்டம் எங்களைத் தழுவி விட்டுதோ?" சிரிப்புக்குள் வார்த்தையைப் புகுத்தி விட்டான்.

"நான் இஞ்ச வேலை செய்யுறதால உங்களுக்கு அதிர்ஷ்டமா? அவள் கண்களில் மலர்ச்சியான 'படபடப்பு'."

"'யெஸ்', நீர் லட்சுமிகரமாக இருக்கிறீர். இந்த மாதிரி ஒரு 'ஒஃபிஸுக்கு' ஒரு லட்சுமியைத் தான் தேடிக் கொண்டிருந்தன். உம்மை விட 'க்குவாலிஃபைட்டாக' ஆக்கள் வந்திருந்தும், நான் உம்மை 'செலக்ட்' பண்ணினன்."

சுபோதினி பற்களைக் காட்டிச் சிரித்தாள். அவள் முழு உடம்பும் ஒருமுறை சிலிர்த்தெழும்பியது.

"எங்க படிச்சீர்?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொன்னாள்.

"சொந்த ஊர்?"

"பருத்தித்துறை. அதாவது புலோலி மேற்கு, ஆனால், கொழும்பில 'செட்டில்' பண்ணிவிட்டம். 'எயிட்டி த்ரி டிரபிள்ஸ்ஸுக்கு' பிறகு ரெண்டு வருஷம் ஊரில இருந்தம். அந்தளவில தான் ஊரைப் பற்றி எனக்குத் தெரியும்."

அவளது விண்ணப்பப் படிவம் அவன் முன்பாக மேசையில் வீற்றிருந்தது. அதை ஒரு கண்ணோட்டம் செலுத்தியவன், "ஓ! வெள்ளவத்தையில பொன்சேகா 'ரோட்டில' இருக்கிறீர். சொந்த வீடா" எனக் கேட்கிறான்.

"இல்லை. வாடகை வீடு."

"அப்பா எங்க 'வேர்க்' பண்ணுறார்?"

"'இன்கம்டக்ஸ் டிப்பார்ட்மெண்ட்'."

"என்ன வேலை?"

"சீஃப் கிளார்க்."

"குடும்பத்தில எத்தனை பேர்?"

"ஒரு தங்கச்சி. ஒரு தம்பி."

"படிக்கிறாங்களா?"

"'யெஸ் சேர்'."

"ஏன் 'வேர்க்' பண்ண வேணுமெண்டு நினைச்சீர்?"

"காசு உழைக்கத்தான். அப்பான்ர சம்பளத்தை விலைவாசி இருபது நாளுக்குள்ள விழுங்கிவிடும். பத்து நாளைக்கு ஒரே பெருமூச்சுத்தான். அப்பாவும், அம்மாவும் சண்டை பிடிக்கிறதைப் பார்க்க என்னால பொறுக்க முடிய இல்லை. 'ஸோ', வேலைக்கு வந்தன்." சுபோதினி கபடமில்லாமல் சிரிக்கிறாள்.

நிர்மலன் தனது சிரிப்பையும் அவள் சிரிப்புக்குள் நுழைக்கிறான்.

பிற்பகல் மூன்று மணி போல் சுபோதினிக்கு ஒரு தொலைபேசி அழைப்பு.

'ரிஸீவரைக்' காதில் பொருத்துகிறாள்.

"'ஹலோ'........."

பிரதீப்பின் குரல். "'ஹலோ'" என உச்சாகத்துடன் கூவுகிறாள் சுபோதினி. ஆறு ஜோடிக் கண்கள் அவள் முகத்தில் படிய, நாக்கைப் பற்களால் கடித்தாள்.

"எப்படி புது வேலை? புது 'ஓஃபிஸ்'?"

"'ஃபைன். நோ புரப்ளம்'."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"'ஈவினிங் சந்திப்பமா'?"

"என்னத்துக்கு?"

"கதைக்கத் தான்."

"அப்பா கூட்டிக் கொண்டு போக வருவார்."

"தனியாக வீட்டை வருவன் எண்டு அப்பாவுக்கு ஒரு 'கோல்' குடுமன்."

"பார்ப்பம்."

"பார்ப்பம் இல்லை. உடன 'கோல்' குடுத்துச் சொல்லும். உம்மை 'ஈவினிங்' நான் 'பிக்' பண்ண வருவன்."

"'நோ' பிரதீப், இஞ்ச வராதீங்க."

"அப்படி எண்டால் 'கோல் ஃபேசில' நிற்பன். அங்கை வாரும்."

நிர்மலனின் தலை தெரிகிறது. சுபோதினிக்கு மனதினில் உதறல் எடுக்கிறது. 'ரிஸீவரை' அப்படியே கீழே வைத்து விடுகிறாள்.

நிர்மலன் அவள் அருகில் வந்தான். அவளை ஒரு சின்ன அலசல். அவள் மேனி கூனிக் குறுகியது. புன்னகை ஒன்றைத் தாராளமாகப் பரவ விட்டபடி சென்று விடுகிறான். அவள் மனதில் ஒரு சின்னச் சபிப்பு.

**மா**லை, தன் கடமையை முடிக்கத் தயாராகியது.

'கோல்ஃபேஸ்' கடற்கரையில் சனக்கூட்டம் அவ்வளவாக இல்லை. வார நாட்களில் ஒன்று அது.

சுபோதினி முகத்தில் தவிப்பு. சீமெந்து வாங்கில் அமர்ந் திருக்கிறாள். அவள் கண்கள் நாலா புறமும் சுழல்கிறது. பிரதீப்பைக் கண்களுக்குள் வரவழைக்க முடியவில்லை. அவளுக்குக் கோபமாக இருக்கிறது. வேதனையும் எட்டிப் பார்க்க முயல்கிறது. இரு அநாகரிகத் தோற்றமுடையோர் அவளை விழுங்கியபடி செல்ல, பயமும் சேருகின்றது.

"'ஹலோ மை டியர் சுபோ டார்லிங்'" என்றபடி பிரதீப் வருகிறான்.

சுபோதினி திரும்பிப் பார்க்கிறாள். பிரதீப் புன்னகையுடன் நிற்கிறான்.

"'யூ...... யூ...... யூ......' என்னோடை கதைக்காதீங்க. 'ஐ யாம் அங்கிரி வித் யூ'." அவள் சீறுகிறாள்.

"'வெரி சொரி' சுபோ...... 'ஏர்ஜன்ட் மீட்டிங்' ஒண்டை 'எம்.டி. பிக்ஸ்' பண்ணிட்டார். இப்ப ஐஞ்சு நிமிஷத்துக்கு முந்தித்தான் 'மீட்டிங்' முடிஞ்சுது. 'சிக்ஸ்ரி மைல் ஸ்பீட்டில' வந்தன்." பிரதீப் பெருமூச்சைத் தாராளமாக வெளியிடுகிறான்.

"'நோ சொரி ஃபோர் யு'."

அவள் முன்பாக வருகிறான் பிரதீப். அவள் கரத்தை எடுத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெஞ்சில் வைத்து, "சொரி சொல்லி விட்டேனே. 'எக்ஸ்கியூஸ்' பண்ண வேண்டியது உம்மட கடமை" என்றவன் பற்களைக் காட்டிச் சிரிக்கிறான்.

அவன் சிரிப்பு அவள் கோபத்தையும், வேதனையையும் கரைத்து விடுகிறது. அவளும் அவனைப் போலவே சிரித்து விடுகிறாள்.

அவள் அருகில் அவன் அமர்ந்து விடுகிறான்.

"'ஸோ', நீர் இப்ப ஒரு 'ஜொப்' செய்யுறீர். கைநிறையக் காசு உழைக்கப் போறீர். காசு கிடைச்ச பிறகு இந்த பிரதீப்பை மறந்து விடுவீரோ?"

"'நோ'. நான் என்ன பச்சோந்தி எண்டு நினைச்சீங்களா?"

"அப்ப என்னைக் கலியாணம் கட்டுறது எண்டுதான் நினைக்கிறீரா?"

"நினைக்க இல்லை, முடிவே எடுத்திருக்கிறன், பிரதீப்"

"அப்ப எப்ப கலியாணத்தை வைப்பம்?"

"என்ன அவசரம்?"

"ரண்டு வருஷமாக 'லவ்' பண்ணினது போதும் எண்டு நினைக்கிறன்."

"'இன்னும் ஒரு வருஷத்துக்கு லவ்' பண்ணுவம். கலியாணம் முடிக்க முந்தி, கொஞ்சக் காசை சேமிச்சு வைச்சிருக்க வேணும் எண்டு நினைக்கிறன்."

"ஓ!"

இருவரின் பேச்சினுள் மௌனம் தலையிட்டது.

"நாளைக்கு காலமை உம்மை 'பிக் அப்' பண்ணட்டுமா?" பிரதீப் ஆவலுடன் கேட்கிறான்.

"வேண்டாம் பிரதீப்...... கொஞ்ச நாளைக்கு நான் 'பஸ்சிலையே' 'ஒஃபிஸுக்குப்' போறன். 'ஒஃபிஸில' கொஞ்சமாவது மரியாதையோட இருந்தால் தான் நல்லது எண்டு நினைக்கிறன்."

"'ஓ.கே'. உம்மட இஷ்டம்."

இருள் தனது கடமையைப் பொறுப்பேற்றது. இருவரும் மனமின்றி எழுந்தனர்.

**வீ**டு இரண்டு பட்டது.

வானொலி 1950ம் ஆண்டுகளின் பிரசித்தப் பாடல் ஒன்றை உச்சஸ்தொனியில் பரப்பியது. மங்களேஸ்வரி உரலில் சம்பல் இடித்துக் கொண்டிருந்தாள். தர்ஷிகாவும், சுரேஷும் வாக்குவாதத்தில் ஈடுபட்டிருந்தனர். 'மொக்கா', 'மடையா', நாயே', 'கழுதை' போன்ற வார்த்தைகள் தாராளமாக உபயோகிக்கப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டின் இரைச்சல் சுபோதினியை எரிச்சலுடன் வரவேற்றது. மனதினுள் வீட்டில் இருந்த யாவரையும் திட்டித் தீர்த்தபடி உள்ளே சென்றவள், வானொலியை நிறுத்தினாள்.

வேலாயுதம் அறையில் இருந்து வெளியே வந்து பார்க்க, வானொலியின் அருகே சுபோதினி கோபத்துடன் நிற்கிறாள். அவர் அறைக்குள் தன்னை இழுத்து விட்டார்.

தர்ஷிகாவிடம் செல்கிறாள் சுபோதினி. அவளைக் கண்ட தர்ஷிகா வாயை மூடிவிடுகிறாள். ஆனால், சுரேஷ் தனது வசையைத் தொடர்கிறான்.

"சுரேஷ்......" சுபோதினி சத்தத்துடன் அதட்டுகிறாள்.

சுரேஷ் தமக்கையை நோக்க, சுபோதினியின் முகத்தில் கோபம் தாராளமாகவே வட்டமிட்டிருந்தது.

"படிக்கிற நேரத்தில என்னடா செய்யுறாய்......?"

"சின்ன அக்கா என்ர கதைப் புத்தகத்தை எடுத்துப் போட்டு தாறா இல்லை."

"கதைப்புத்தகம்? படிக்கிற உனக்கு என்னத்துக்கு கதைப் புத்தகம்?"

"சும்மா தான்......"

"நீ இந்த 'டிசம்பரில ஓ. எல்.' சோதனை எடுக்கிறாய். சோதனை முடிய மட்டும் அல்லோ, வீட்டுக்கு கதைப் புத்தகம் கொண்டு வரக் கூடாது எண்டு சொன்னனான்?"

சுரேஷ் ஒன்றும் கூறவில்லை.

சுபோதினியின் பார்வை தர்ஷிகா மீது படர்ந்தது. "நீ வளர்ந்தது தான் மிச்சம். அறிவு இன்னும் வளர இல்லை. இன்னும் ரண்டு மாசத்தில உனக்கு சோதனை. அதுக்குப் படிக்காமல்...... எங்கை கதைப் புத்தகம்?"

"என்னட்டை இல்லை." தர்ஷிகா சொல்கிறாள்.

"எங்கடா?" சுரேஷை சுபோதினி மிரட்டுகிறாள்.

முதுகுப் புறத்தில் இருந்து கதைப் புத்தகத்தை எடுத்து தமக்கையிடம் நீட்டினான் சுரேஷ்.

சுபோதினி கதைப் புத்தகத்தின் தலைப்பை வாசித்து விட்டு, "ஆசையா, காதலா...... நல்ல கதைப் புத்தகம் தான் வாசிக்கிறியள்...... ஆசையா, காதலா...... இனி கதைப் புத்தகம் கொண்டு வந்தால் தெரியும்......" என்றவள் அதை மேசையில் வைத்து விட்டு தகப்பனின் அறைக்குள் சென்றாள்.

வேலாயுதம் தலை மயிருக்கு 'டை' பூசிக் கொண்டிருந்தார்.

"அப்பா......"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலாயுதம் தன் முன்னால் இருந்த கண்ணாடியில் சுபோதினியை நோக்குகிறார்.

"அதுகளுக்குத்தான் அறிவு இல்லை எண்டால், உங்களுக்கு எங்க போச்சுது?"

வேலாயுதம் ஒன்றும் கூறாமல் தனது கருமத்தைத் தொடர்ந்தார். முகம் அளவுக்கு மீறிய சுருக்கத்தைக் கொண்டிருந்தது.

"எத்தனை தரம் படிக்கிற நேரங்களில 'ரேடியோ'வை போட வேண்டாம் எண்டு சொல்லி இருக்கிறன்? நீங்கள் உங்கட பாட்டில 'ரேடியோ'வைப் பெலத்துப் போட்டு விட்டு இஞ்ச நிக்கிறியள். அதுகள் ஒண்டும் படிக்காமல், சண்டை பிடிக்குதுகள். கொஞ்சமாவது பொறுப்பு இல்லாமல்......"

வேலாயுதம் திரும்பி மகளைப் பார்க்கிறார். கண்களில் கோபம் கொப்பளிக்கிறது.

"நீ உன்ர வேலையைப் பார்......" அவர் உறுமுகிறார்.

சுபோதினி தகப்பனைச் சுட்டெரிப்பது போல பார்க்க, அவர் திரும்பி விடுகிறார்.

சுபோதினி அங்கிருந்து அகன்று, தனது அறைக்குச் செல்லும் போது அவள் மனதில் எரிச்சல் நிறைந்திருந்தது.

## (4)

சுபோதினியைத் தேடி பிரதீப் அலுவலகத்திற்கே வந்து விட்டான்.

"ஏன் வந்தீங்க?" என சுபோதினி 'படபடத்தாள்'.

"ஏன் வரக்கூடாது எண்டு ஏதாவது 'ரூல்ஸ்' இருக்குதா?" பிரதீப்பின் முகத்தில் குறும்பு நெளிந்து, வளைந்திருந்தது.

"நான் இந்த 'ஓஃபிஸுக்கு' வந்து இப்பதான் ஒரு கிழமையாகுது. என்னைப் பற்றி என்ன நினைப்பினம்?"

"என்னத்தை நினைக்க இருக்குது? ஆர் எண்டு கேட்பினம். என்ர 'ஸ்வீட் ஹார்ட்' எண்டு சொல்லுமன்."

"'ஸ்வீட் ஹார்ட்'?" அவள் கலவரத்துடன் புன்னகைக்கிறாள். "பிரதீப், பிளீஸ் இஞ்ச இருந்து போங்க. நான் உங்களை 'ஈவினிங் மீட்' பண்ணுறன்."

"எங்கை?"

"நீங்க சொல்லுற இடத்தில."

"மரியா 'ஹொட்டேல்ல' ஒரு 'ரூம் புக்' பண்ணுறன். அங்கை வாறீரா?"

"'யூ......யூ......யூ......'"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கோபத்திலையும் நீர் வடிவு தான்."

பிரதீப் சென்று விட்டான்.

சில வினாடிகள் வரை சுபோதினியால் இயல்பு நிலைக்குத் திரும்ப முடியவில்லை.

"ஆர் ஆள்? 'வெரி ஸ்மாட் ஃபெலோ'" எனக் கேட்டபடி சுசிலா வந்தாள்.

"என்ர 'ஃபிரெண்ட்'."

"'லவ்' பண்ணுறீரா?"

சுபோதினி 'ஆம்' எனத் தலையாட்டுகிறாள்.

"'யூ ஆர் எ வெரி லக்கி கேர்ள்.'"

சுபோதினியின் முகத்தில் படிந்திருந்த கலவரம் மறைந்து, மலர்ச்சி குடியேறுகிறது.

"என்ன செய்யுறார்?" குறுக்கு விசாரணையில் சுசிலா.

"'எக்ஸ்போர்ட் கொம்பனியில எக்ஸிகியூட்டிவ்'வாக இருக்கிறார்."

"பெயர் என்ன?"

"பிரதீப்."

"முழுப் பெயர்?"

"பிரதீப் தேவசகாயம்."

"'கிறிஸ்டியனா?'"

"ஓமோம்."

"நீர் 'ஹிந்து' தானே?"

"ஓமோம்."

சுசிலா நமுட்டுச் சிரிப்புடன் சென்று விட்டாள்.

சுபோதினி தனது ஆசனத்திற்குச் சென்று வேலையைத் தொடர்ந்தாள். 'கம்பியூட்டரை ஒன்' பண்ண, 'பியூன்' கந்தசாமி வந்து அவள் முன் பக்குவமாக நின்றான். "நிர்மலன் சேர் உங்களை வரட்டாம்" என்று கூறிவிட்டு, அவன் செல்கிறான்.

பிரதீப்புடன் பேசிக் கொண்டிருந்ததை நிர்மலன் கண்டு விட்டாரா?

அதைப் பற்றி விசாரிக்கத் தான் கூப்பிடுகிறாரா? 'பதைபதை'க்கும் நெஞ்சுடன் நிர்மலனின் அறைக்குள் நுழைகிறாள்.

"வாரும் சுபோ" என நிர்மலன் வரவேற்கிறான்.

அவன் முன்பாக அவள் பணிவுடன் நிற்கிறாள்.

"இரும்."

"பரவாயில்லை."

"'நோ. சிட் டவுன்'."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுபோதினி அமர்கிறாள்.

"எப்படி எங்கட 'ஓஃபிஸ்'? உமக்கு பிடிச்சுதா?" எனக் கேட்கிறான் நிர்மலன்.

"'யெஸ் சேர்.'"

"என்ன மாதிரி?"

"எல்லாரும் நல்ல வடிவாகக் கதைக்கினம். ஒரு 'ஹோம்லி' சூழ்நிலை நிலவுது."

"நீர் பொம்பளை தானே? அதுதான் எல்லாரும் வடிவாகக் கதைக்கினம்."

சுபோதினி பெரிதாகப் புன்னகைத்து, அவன் கூற்றை தலையினால் ஆமோதிக்கிறாள்.

"இஞ்ச சேர்ந்து எத்தனை நாளாகுது."

"ஒரு கிழமையாகுது."

"உமக்கு எவ்வளவு சம்பளம் போட்டிருக்கிறம்?"

"மூவாயிரத்து ஐநூறு சொச்சம்."

"காணுமா?"

"காணாது தான்."

"எவ்வளவு எதிர்பார்க்கிறீர்?"

"பத்தாயிரம் தந்தாலும் எடுப்பன்."

"பத்தாயிரம்? ஐயாயிரம் தாற மாதிரி 'ரெக்மன்ட்' பண்ணட்டோ?"

"'வேண்டாம் 'சேர்'."

"ஏன்?"

"எனக்கு நீங்கள் சம்பளத்தைக் கூட்டப் போய் பிரச்சனை வரும். மற்ற ஆக்கள் போர்க்கொடி உயர்த்தினால்......?"

"அந்த மாதிரியான 'ஓஃபிஸ்' இது இல்லை. அப்படி ஆரும் போர்க் கொடி உயர்த்தினால், எனக்கு என்ன செய்யுறது எண்டு தெரியும்."

"'நோ சேர்'. பிழையான முடிவை எடுக்க வேண்டாம்."

"அப்படியா?"

"'யெஸ் சேர்'."

"'ஓகே' உம்மட விருப்பம். காசு வேண்டாம் எண்டால் நான் என்ன செய்யுறது."

"காசு வேணும் தான். ஆனால், இப்படியான ஒரு சம்பள உயர்வை நான் விரும்ப இல்லை. மற்ற ஆக்கள் என்னிலை எரிச்சல், பொறாமை கொள்ளக்கூடாது." சுபோதினி கனிவுடன் புன்னகைத்தாள்.

நிர்மலன் ஒன்றும் கூறவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலாயுதம் திருட்டு முழியுடன் சுபோதினியின் முன் நின்றிருந்தார். தலையை இரண்டு, மூன்று தடவைகள் சொறிந்தார்.

இதைப் பார்த்த சுபோதினிக்கு சிரிப்பு பீறிட்டது. சற்றுப் பலமாகச் சிரித்தாள்.

"என்னப்பா விசயம்? தலையைக் கண்டபாட்டுக்குச் சொறியுறியள்?"

"சுபோ, உன்னோடை ஒரு விசயம் கதைக்க வேணும்."

"நீங்கள் என்ன கதைக்கப் போறீங்க எண்டு தெரியும். காசு கேட்கப் போறீங்க. அப்படித்தானே?"

"ஓமோம்."

"எவ்வளவு?"

"ஆயிரம் ரூவா அளவில."

"ஆயிரம்?"

"ஓமோம். சில்லறைக் கடன் கொஞ்சம் இருக்குது. அதை அடைக்க வேணும்."

"ஏன் கடன் எடுத்தீங்க?"

"'சிகரெட்', வெத்திலைக்கெண்டு காசு காணாமல் போக, கடன் எடுத்தன்."

"கடன் எடுத்து, 'சிகரெட்' குடிக்க வேணுமோ?"

வேலாயுதம் மீண்டும் தலையைச் சொறிந்தார்.

"சரி, சம்பளம் எடுத்தவுடன ஆயிரம் தாறன். இனியும் கடன் எடுக்காதேங்கோ."

"அப்படி எண்டால் நீ ஒவ்வொரு மாசமும் எனக்கு ஐநூறு ரூவாய் 'அலவன்ஸ்' தரவேணும்."

சுபோதினி தகப்பனைச் சுட்டெரிப்பது போல் பார்த்தாள். சில வினாடிகள் தான். அவள் முகம் மலர்ந்தது. "சரி தாறன். 'சிகரெட்டை' நல்லா குடிச்சிட்டு இரவையில இருமுங்கோ...... கொஞ்சம் பொறுப்பாக நடக்கப் பாருங்கோ...... உங்கடை கெட்ட பழக்கத்தை சுரேஷ் பழகினாலும், பழகுவான். எண்டபடியால......"

வேலாயுதம் அங்கிருந்து அகன்றுவிடவே, சுபோதினி பேசுவதை நிறுத்தி விடுகிறாள்.

## (5)

இரவு திடீரென சுபோதினிக்கு விழிப்பு ஏற்பட்டு விடுகிறது. கண் திறந்தவள் சுற்றும் முற்றும் பார்த்தாள். தர்ஷிகா தன்னை மறந்தவளாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலங்கோல நிலையில் படுத்திருப்பது மங்கிய வெளிச்சத்தில் தெரிகிறது.

சுபோதினி எழுகிறாள். தங்கையின் 'நைட்டியை' சரி செய்கிறாள். அவளுக்குத் தாகமாக இருக்கிறது. மேசையின் மீது கிடந்த போத்தல் நீரை ஒரு 'கிளாசில்' ஊற்றிக் குடிக்கிறாள். வியர்வை நெற்றியில் துளிர்விடுகிறது. கையினால் துடைத்து விட்டு படுக்க முற்பட, முன் அறையில் இருந்து தகப்பனும், தாயும் பேசுவது துல்லியமாகக் கேட்கிறது. காதைக் கூர்மையாக்கி அவர்கள் பேசுவதைக் கிரகிக்க முற்படுகிறாள்.

"நீங்கள் கல்லுப் பிள்ளையார் மாதிரி இருக்கிறியள். அவளுக்கு இப்ப இருபத்தினாலு வயசாகுது" என்கிறாள் மங்களேஸ்வரி.

"தெரியும். அதுக்கு நான் என்ன செய்யுறது?" என வேலாயுதம் கேட்கிறார்.

"அவளை எங்கையாவது கட்டி வைக்க வேணும். அந்த நோக்கம் உங்களுக்கு இருக்குதோ?"

"இருக்குது, இருக்குது. நட்ட நடு ராத்திரியில தொண தொணக்காதையும். இப்பத் தானே அவள் வேலை செய்யத் துடங்கி இருக்கிறாள்? வேலை செய்யுற பொம்பளை எண்டால் பெடியள் வருவாங்கள். சீதனமும் அவ்வளவு கேட்க மாட்டாங்கள்."

"உங்கட மருமோன் விமலனை கேட்டுப் பார்ப்பமே?"

"விமலன் வேண்டாம். சுபோ விரும்ப மாட்டாள். அவன் குடிகாரன். வேலையிலையும் ஒழுங்கு இல்லை. இத்தனைக்கும் எத்தனை வேலை செய்திருப்பான்?"

"என்ர பக்கத்திலை அவளுக்குத் தோதான மாப்பிளையள் இல்லை. எங்கையாவது பிறத்தியில தான் பார்க்க வேணும்."

பெற்றோரின் சம்பாஷணையைச் செவிமடுத்த சுபோதினியின் உள்ளம் துடித்தது. நேரே அவர்களிடம் சென்று 'அப்பா, அம்மா எனக்கு நீங்கள் மாப்பிள்ளை பார்க்கத் தேவையில்லை. எனக்கு தோதானவரை நான் எப்பவோ தெரிவு செய்து விட்டன்' என்று சொல்ல வேண்டும் என்ற துடிப்பு அவளுள் பெருகியது. ஆனால், சில வினாடிக்குள் அத் துடிப்பு அணைந்தது.

'யாரை நீ தெரிவு செய்திருக்கிறாய்?' என்று இருவரில் ஒருவர் கேட்கலாம்.

பிரதீப் என்று சொல்லலாம்.

'எங்கட சாதியா, சமயமா' என்று கேட்டால்......?

'சாதி தெரியாது' என்று சொல்லலாம். ஆனால், 'அவர் ஒரு கிறிஸ்டியன்' என்ற உண்மையை மறைக்க முடியாது. சொல்லித்தான் ஆக வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகப்பன் சைவ ஆசாரங்களில் மூழ்கியவர். ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் தவறாமல் கோயிலுக்குச் சென்று வழிபட்டுவிட்டு, நெற்றி முழுவதும் திருநீற்றை பட்டையாகப் பூசிக் கொண்டு வருபவர்.

தாயும் அவருக்கு குறைந்தவள் அல்லள். அவளும் சைவ ஆசாரங்களைத் தவறாமல் கடைப்பிடிப்பவள். வெள்ளிக் கிழமைகளில் காலையில் விரதம் அனுட்டிப்பாள். மாலை வேளை களில் கணவனுடன் அவளும் கோயிலுக்குப் போய் மனமுருக வழிபடுவாள். புனித தினங்களில் விரதமும் இருப்பாள்.

இருவருமே அவளது காதலுக்குச் சாவுமணி அடிப்பார்கள். அது நிச்சயம்.

அப்படி என்றால் பிரதீப்பை கைப் பிடிப்பது சிதைந்த கனவாகத்தான் முற்றுப் பெறுமா?

'இல்லை'. அவள் உள்ளம் கத்தியது.

'நான் அவரை எப்படியும் கைபிடிச்சே தீருவன். ஒண்டில் அப்பா, அம்மான்ர மனதை மாத்துவன். இல்லை எண்டால்......' அவள் மேலும் சிந்திக்கவில்லை.

தங்கை பரிதாபமாகப் பார்ப்பது போல் ஓர் உணர்வு உட்புகுந்து விடுகிறது.

'அக்கா, நீ எதையாவது ஏடா கூடமாகச் செய்தால், அது என்ர வாழ்க்கையையே பாழ்படுத்தி விடும்' என்று அவள் சொல்வது போல......

சுபோதினியின் மனதினில் ஓர் அரைகுறைத் தர்க்கம் இடம் பெற்றது. அந்தத் தர்க்கத்தில் உஷ்ணம் இருந்தது. ஆக்ரோஷமும் இருந்தது. ஆனால், பயம், மிரட்டல் என்று எதிர்மறையான கருத்துக்கள் பிரவேசிக்க 'சே' என அலுத்தபடி கட்டிலில் விழுந்தாள்.

வேலாயுதமும், மங்களேஸ்வரியும் தொடர்ந்து பேசிய போதும், அவள் அதைக் கிரகிக்க முற்படவில்லை.

'கம்பியூட்டரில் புரோகிராம்' ஒன்றைச் சரி செய்து கொண்டிருந்தாள் சுபோதினி.

அவள் அக் காரியாலயத்தில் சேர்ந்து ஒரு மாதமாகி விட்டது. முதல் மாதச் சம்பளத்தை காசாளர் நீட்டிய போது அப்படியே கண்களில் ஒற்றி எடுத்தாள்.

அவளைப் பொறுத்தளவில் அவளுக்கு அந்த அலுவலகத்தில் பெரும்பாலானோரைப் பிடித்திருந்தது. எல்லோரும் அவளுடன் அன்புடன் பேசினார்கள். பண்புடன் பழகினார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறிஸ்டி தான் எந்நேரமும் அவளைச் சீண்டுவான். அவளை அளவுக்கு மீறி நையாண்டி செய்வான். சுபோதினியும் விட்டுக் கொடுக்காமல் பதிலுக்கு ஏதாவதுகூறி, அவனை மட்டம் தட்டி விடுவாள். அவர்களின் 'யுத்தத்தினால்' சில வேளைகளில் சிரிப்பும் எதிரொலிக்கும்.

நிர்மலன் அவளுடன் உரிமையுடன், அவள் தன்னுடையவள் என்ற தோரணையில் பேசினான். பழகினான். அவளுடன் அவன் ஒரு நெருக்கமான உறவை வைப்பதை அவளால் உணர முடிந்தது.

"'ஹலோ' சுபோ" என்றபடி கிறிஸ்டி வந்தான்.

"'யெஸ்' கிறிஸ்டி?" 'கம்பியூட்டர் மொனிட்டரில்' இருந்து பார்வையை எடுக்காமல் சுபோதினி கேட்டாள்.

"நீர் என்னைப் பற்றி என்ன நினைக்கிறீர்?" அவன் கேட்டபடி, அவளுக்கு அருகில் கிடந்த நாற்காலியில் அமர்ந்தான்.

"நீங்கள் ஒரு 'ஜோவியல் டைப்'."

"'யெஸ் ஐ ஆம் எ ஜோவியல் டைப்'." கிறிஸ்டி சிரித்தான்.

"நீங்கள் அடிக்கிற 'ஜோக்ஸில' அரைவாசி அறுவை."

"'யெஸ்'. சில பொம்பிளையளுக்கு என்ர 'ஜோக்ஸ்' விளங்கிறதில்லை. அடிக்குறிப்போடை 'ஜோக்ஸ்' சொன்னால் தான் விளங்குது."

"எனக்கு அடிக்குறிப்புத் தேவையில்லை. உங்கட அறுவையை கிரகிக்கிற புத்தி இருக்குது" என சுபோதினி சிரிக்கிறாள்.

கிறிஸ்டியும் சிரிக்கிறான்.

"கிறிஸ்டி, இந்த விசயத்திலை இன்னொண்டையும் சொல்ல விரும்புறன்"

"என்ன?"

"நீங்கள் ஒரு 'ஜோவியல் டைப்' தான். ஆனால், உங்கட அடி மனதில என்ன ஒளிஞ்சு இருக்குது எண்டும் எனக்குத் தெரியும்."

சுபோதினி இப்படி கூறியதும் கிறிஸ்டி கலவரமடைகிறான். "நீ..... நீ....... நீர் என்ன சொல்லுறீர்."

"உங்களுக்கு பொம்பளையள் எண்டால் ஒரு 'வீக்னஸ்' இருக்குது. அதாவது அவையளை அடைய வேணும் எண்டு ஒரு வெறி உங்களுக்குள்ள ஒழிஞ்சு கிடக்குது."

கிறிஸ்டியின் முகம் கறுத்துவிட்டது. சுபோதினியின் முகத்தைப் பார்த்தபடி இருந்தவன், தலை குனிகிறான்.

"என்ன கிறிஸ்டி நான் சொல்லுறது சரி தானே?" என சுபோதினி 'மொனிட்டரில்' இருந்து பார்வையை எடுத்து, அவன்மீது செலுத்தியவண்ணம் கேட்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"'யெஸ்' சுபோ. நீர் சொல்லுறது சரி."

"பார்த்தீங்களா? நான் எவ்வளவு கெட்டிக்காரி எண்டு" என்று சிரித்தவள், அவனைக் கூர்மையாக நோக்கினாள். "கிறிஸ்டி, ஏன் இப்படி வெறி உங்களுக்கு வருது......"

கிறிஸ்டி பெருமூச்சொன்றை வெளிவிடுகிறான்.

"சொல்லுங்க கிறிஸ்டி."

"சுபோ, உமக்கு என்னைப் பற்றி இன்னும் என்ன தெரியும்?"

"நீங்கள் இஞ்ச 'அசிஸ்டென்ட் எக்கவுண்டனாக' இருக்கிறீங்க. பம்பலப்பிட்டியில இருக்கிறீங்க."

"நான் கலியாணம் முடிச்சிட்டனா, இல்லையா எண்டு தெரியுமா?"

"தெரியாது."

"எல்லாரையும் போல நானும் கலியாணம் முடிச்சன். ஆனால், கலியாண வாழ்க்கை சரிவர இல்லை."

"என்ன சொல்லுறீங்க கிறிஸ்டி?"

"பற்றீஷியாவுக்கு 'செக்ஸில' அவ்வளவு விருப்பம் இல்லை. அதால நிறைய பிரச்சனை வந்து, அவள் என்னையே விட்டுட்டுப் போயிட்டாள். அதால என்ர ஆசையை வெளியில அடக்க முயற்சிக்கிறன். அதுதான் என்ர 'வீக்னஸ்'."

"'பட்', அது பிழை."

"எனக்குத் தெரியும்."

"தெரிஞ்சும்?"

"வேறை வழி தெரிய இல்லை."

"ஒண்டில் பற்றீஷியாவின்ர மனதை மாற்றி வாழப் பாருங்க. இல்லாட்டால் அவவை 'டைவோஸ்' செய்திட்டு, ஒரு புது வாழ்க்கையை 'ட்ரை' பண்ணிப் பாருங்க. 'யூர் ஆர் எ யங் மேன்.' நீங்க வாழ வேணும்."

"'டைவோஸ்'? அது பாவம் எண்டு நினைக்கிறன்."

"மற்ற 'கேர்ள்ஸிட்டை' உங்கட ஆசையை அடைய நினைக்கிறது பாவம் இல்லையா? சொல்லுறன் எண்டு கோவியாதேங்கோ, உங்கட சிற்றின்பத்துக்காக ஏன் மற்ற 'கேர்ள்ஸின்ர' உணர்ச்சியை உதாசீனம் செய்யுறீங்க."

கிறிஸ்டி ஒன்றும் கூறவில்லை. சுபோதினியை உணர்ச்சியற்ற நிலையில் பார்த்தபடி இருந்தான்.

நிர்மலன் தனது அறையில் இருந்து வெளியேற, கிறிஸ்டி அங்கிருந்து அகன்று விட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (6)

'காஸ் குக்கரில்' பாலை வைத்து விட்டு பழைய பாடல் ஒன்றை மங்களேஸ்வரி 'ஹம்மிங்' செய்து கொண்டிருந்தாள்.

தர்ஷிகாவும், சுரேஸூம் 'ஹோலில்' இருந்தபடி படிப்பில் கவனம் செலுத்தியிருந்தனர். வேலாயுதம் முன் விறாந்தையில் அமர்ந்திருந்தார். புகையில் இன்பம் கண்டவண்ணம் பத்திரிகைகளில் மூழ்கியிருந்தார்.

சுபோதினி சமையலறைக்குச் சென்றாள். தாய் அவளைக் கவனிக்கவில்லை. பால் பொங்குகிறதா எனப் பார்த்தபடி நின்றிருந்தாள்.

"அம்மா......" சுபோதினி தயங்கிய குரலில் அழைத்தாள்.

தாய் இவளை நோக்குகிறாள்.

"அம்மா, உங்களோட ஒரு விசயம் பேச பேணும்."

"என்ன?"

"என்ர கலியாணத்தைப் பற்றி......"

"நேத்தைக்கு இரவும் அப்பாவோடை இதைப் பற்றித் தான் கதைச்சனான். நீ என்ன சொல்லப் போறாய்?"

சுபோதினி ஒரு கணமும் தயங்கவில்லை. "நான் ஒருத்தரை விரும்புறன்."

"சா!"

"ஓம் அம்மா. அதைப் பற்றித்தான்......"

"என்னத்தைக் கதைக்கப் போறாய்?"

"அவரைக் கலியாணம் முடிக்கிறதைப் பற்றி......"

"ஆர் பொடியன்?

"என்ர 'ஃபிரெண்ட்' டின்ரை தமையன்."

"ஆர் 'ஃபிரெண்ட்'?"

"தேவராணி."

"அவள் 'கிறிஸ்டியன்' ஆச்சுதே!"

"ஓமோம்."

"நாங்கள் 'ஹிந்து'. உனக்குத் தெரியும் தானே?"

"தெ.... தெ.... தெரியும்...."

"தெரிஞ்சும்?"

"விரும்பிட்டன் அம்மா......"

"அப்பாவைப் பற்றித்தானே உனக்குத் தெரியும்?"

"விரும்பிட்டன் அம்மா......"

"அவரை மறக்க ஏலாதா?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY LIBRARY
16-8-2000


"வி.....வி..... விரும்பிட்டன்"

"அப்பாட்டை போய் கேளு. அவர் ஓம் எண்டால் என்னட்டை வா."

"அப்பா......?" சுபோதினி தாயைச் சலனத்துடன் நோக்கினாள். "நீங்கள் ஓம் எண்டாலும், அப்பா......"

மங்களேஸ்வரி பாலை இறக்கினாள். குழம்புச் சட்டியை அடுப்பில் வைத்தாள்.

"அப்பாவை, என்னைப் பற்றி எல்லாம் தெரிஞ்சும்...... நீ இந்த குடும்பத்துக்கு மூத்தனி. மற்ற ஆக்களுக்கு முன்னுதாரணமாக நடக்க வேணும்."

"அப்படித்தான் நடக்கிறன்."

"அப்ப இதிலை.....?"

"பிரதீப் நல்லவர். வலிய வந்து கேட்டார். அதால விரும்பிட்டன்."

"விரும்ப முந்தி என்னட்டை ஒரு சொல் கேட்டிருக்கலாமே?"

"இது 'புரபோசல்' இல்லை. 'லவ்'."

சுபோதினி இப்படிக் கூறியதும், மங்களேஸ்வரிக்கு கோபம் முளைத்து விட்டது.

"வாயைப் பொத்து......"

சுபோதினியின் முகம் சுருங்கி விட்டது. தாயுடன் மேலும் பேசுவதைத் தவிர்த்தவளாக அங்கிருந்து அகன்றாள்.

தனது அறைக்குச் சென்றாள். கட்டிலில் சரிந்தாள். சில நிமிடங்கள் வரை யோசனைகள் தான் அவளை ஆக்கிரமித்திருந்தன.

"பிரதீப், எப்படியும் நாளைக்கு அப்பா, அம்மாவோடை இதைப் பற்றி கதைச்சு, நாளண்டைக்கு ஒரு மறுமொழி சொல்றன்" என்று முதல் நாள் மாலை தான் சுபோதினி வாக்குறுதி அளித்திருந்தாள்.

"தற்செயலாக உம்மட 'பேரன்ட்ஸ்' சிவப்புக் கொடி காட்டினால்......?"

பிரதீப் வார்த்தைகளை நிறுத்த, "சிவப்புக் கொடி தான் காட்டுவினம். ஆனால், அவையின்ர மனதை மாத்த வேணும்" என்கிறாள் சுபோதினி.

"என்ன மாதிரி?"

"முதல்ல தயவாகக் கேட்டுப் பார்க்கிறது. ஏலாது எண்டால் மிரட்டுறது."

"மிரட்டுறது?"

"யெஸ், 'பெர்மிஷன்' தராட்டால் உங்களையே மறந்திடப் போறன் எண்டு மிரட்டுவன்."

"உம்மட மிரட்டலுக்கு அவையள் பயப்படாட்டால்......?"

"அவையளை மறக்கிறது எண்ட முடிவுக்கு வருவன்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உம்மைப் பெத்து வளர்த்து, ஆளாக்கிய அவையளுக்குத் துரோகம் செய்யுறதா?"

"அப்படி எண்டால் எங்கடை தொடர்பை மறந்திடச் சொல்லுறீங்களா?"

"இல்லை...... இல்லை.....'பட்'....."

"சொல்லுங்க பிரதீப்......"

"அவையின்ர ஆசீர்வாதத்தோடை நடந்தால் தான் நல்லது எண்டு நினைக்கிறன். எங்கட கலியாணத்துக்கு என்ர 'பேரன்ட்ஸ்' நிக்கிற மாதிரி, உம்மட 'பேரன்ட்ஸும்' நிக்க வேணும் எண்டு நினைக்கிறன்."

"'பெர்மிஷன்' தராட்டால், நான் என்ன செய்யுறது பிரதீப்?"

"நான் கேட்டுப் பார்க்கிறன்."

சுபோதினியின் முதல் முயற்சி தோல்வியில் முடிவடைந்து விட்டது. மங்களேஸ்வரியின் பதில் வெட்டு ஒன்று, துண்டு இரண்டு என்பது போல் விளங்கியது.

தந்தையிடம் கேட்டுப் பார்ப்போமா என எண்ணினாள். தாயின் பதிலை விட அவரது பதில் ஆக்ரோஷமாக விளங்கும். வீணாக ஏன் அவரது கோபத்துக்கு ஆளாக வேண்டும்.?

இதில் முடிவு எடுக்கும் பொறுப்பை பிரதீப்பிடம் விடுவது தான் சரி என்று அவளுக்குப் பட்டது.

'பஸ்' தரிப்பிடத்தில் சுபோதினி நிற்கிறாள். அலுவலகத்தில் இருந்து அவளுடன் ஒன்றாக வந்த சுசிலாவும், நர்மதாவும் அவர்களுக்குரிய 'பஸ்' வரவே போய் விட்டார்கள்.

'கோல்பேசுக்குப்' போக வேண்டிய 'பஸ்'சுக்காகச் சுபோதினி காத்திருந்தாள்.

மாலை ஆறு மணிபோல் அங்கு வைத்து பிரதீப்பைச் சந்திப்பதற்காக ஏற்கனவே ஏற்பாடாகி இருந்தது.

அச் சமயத்தில் 'காரொன்று' அவள் முன்பாக வந்து நின்றது. சாரதி ஆசனத்தில் அமர்ந்திருந்தவனை சுபோதினி நோக்க, நிர்மலன் அமர்ந்திருந்தான். புன்னகையுடன் கண்களால் ஏறும்படி பணிக்கிறான்.

இவள் முடியாது, 'நீங்க போங்க' என கண்களால் விடை பகருகின்றாள்.

"'கமான்' சுபோ. ஏறும்."

"'நோ சேர்' .....நீங்க போங்க. நான் 'பஸ்'சிலை போறன்.

"சுபோ......நேரத்தை வீணாக்காதீர். கெதியில ஏறும்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுபோதினிக்கு வேறு வழி இருக்கவில்லை. அருகில் நின்றவர்களும் ஒரு தினுசாகப் பார்க்க, காரில் ஏறிவிடுகிறாள்.

'கார்' புறப்படுகிறது.

"எங்க போறீர்? வீட்டுக்கா? இல்லாட்டால்......?" நிர்மலன் கேட்கிறான்.

'அது ஏன் உங்களுக்கு' எனக் கேட்க வேண்டும் போல அவளுக்கு இருந்தது. ஆனால், அதன் எதிரொலி சில மறுதலையான சம்பவங்களுக்கு வித்திடலாம் என எண்ணி யவளாக, "வீட்டுக்குத் தான்" என்கிறாள்.

"வெள்ளவத்தையில இறக்கி விட்டால் போதும் தானே?"

"ஓமோம்."

"வெள்ளவத்தையில பொன்சேகா 'றோட்'டிலை தானே இருக்கிறீர்?

"'யெஸ் சேர்'......"

"சொந்த வீடா?"

"இல்லை. சொந்தக்காரர் ஒருவரின்ர வீடு. அவையள் கனடாவுக்கு போகக்கிள்ளை வீட்டை எங்களுக்கு வாடகைக்கு தந்திட்டு போயிருக்கினம்."

"பெரிய வீடோ?"

"சின்ன வீடுதான். ஆனால், மூண்டு படுக்கை அறை இருக்குது."

"வாடகை எவ்வளவு?"

"கொஞ்சம் குறைவு தான்."

பேச்சு தடைப்பட்டது.

"நீர் தானே உங்கட வீட்டுக்கு மூத்த பிள்ளை?"

"ஓமோம்."

"நீர் தானே முதல்ல கலியாணம் கட்ட வேணும்?"

அவள் ஒன்றும் கூறவில்லை. பார்வையை வேறு பக்கம் திருப்பினாள்.

"எனக்கு அப்பா இல்லை. அம்மா இல்லை. அக்கான்ர நிழலில தான் வாழ்றன். அக்கா நாலைஞ்சு 'புரபோசல்' கொண்டு வந்தா. ஆனால், நான் எல்லாத்தையும் வேண்டாம் எண்டு சொல்லிட்டன். ஒண்டுமே எனக்கு பிடிக்க இல்லை. ஒரு லட்சுமிகரமான பொம்பளையைத் தான் தேடுறன்" என்ற நிர்மலன் கடைக் கண்ணால் சுபோதினியை நோக்கினான்.

அவள் தனக்கு ஒன்றுமே கேட்கவில்லை என்ற தோரணையில் அமர்ந்திருந்தாள். நிர்மலனின் பேச்சில் அடங்கியிருந்த உள்ளார்ந்த அர்த்தத்தை அவளால் இலகுவில் புரிந்து கொள்ளக் கூடியதாக இருந்தது.

கார் காலிமுகத் திடலை நெருங்கியது. மைதானத்தில் பிரதீப் நிற்கிறானா என அவள் பார்க்கிறாள். அவனைக் காணவில்லை. நிர்மலனிடம் ஏதாவது சாக்குப் போக்கு கூறிவிட்டு இறங்குவோமா என நினைத்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
515251

ஆனால், வீட்டுக்கு போவதாக ஏற்கனவே கூறியிருந்தமையினால் அவன் தன்னைப் பற்றி தவறாக நினைக்க சந்தர்ப்பம் ஏற்படும் என்று எண்ணியவளாக, மன எழுச்சியை அடக்கியபடி அமர்ந்திருந்தாள்.

கார் கொள்ளுப்பிட்டியை அடைந்தது.

"சுபோ, டுப்ளிக்கேஷன் 'ரோட்'டிலை ஒரு நல்ல 'ஹொட்டேலைத்' திறந்திருக்கிறாங்கள். அங்கை போய் ஏதாவது 'சொப்ட் டிரிங்' குடிச்சிட்டுப் போவமா?" என நிர்மலன் கேட்கிறான்.

நிர்மலனின் உள்நோக்கத்தின் ஆழத்தைச் சுபோதினி புரிந்து விடுகிறாள். உடனேயே, "'நோ சேர்', நான் வீட்டை போகவேணும். 'பேரண்ட்ஸோட' ஒரு 'விசிட்டிங்' போக வேணும்" என அவசரத்துடன் சொல்கிறாள்.

"'ஸோ', என்னோட ஒரு 'ஸொப்ட் டிரிங்க்' குடிக்க உமக்கு விருப்பமில்லை. அப்படித்தானே 'மிஸ்' சுபோதினி வேலாயுதம்?"

அவன் கேட்டவிதம், அவளை உலுக்கிவிட்டது. அவன் வார்த்தைகளில் சினமும், கேலியும் மலிந்திருப்பதை உணர்ந்தாள். ஆனாலும், அவன் எண்ணத்தை ஈடேற்ற அவள் தயாராக இருக்கவில்லை.

"'நோ சேர்', இண்டைக்கு நான் வெள்ளன போகவேணும்."

"இண்டைக்குத்தானே? நாளைக்கு இல்லைத்தானே?"

"நாளைக்கு......" சுபோதினிக்குப் பேச்சு நின்று விடுகிறது.

"நாளைக்கு நாங்கள் ரண்டு பேரும் அந்த 'ஹொட்டேலுக்குப்' போறம்."

வெள்ளவத்தைச் சந்தியில் இறங்கிய போது சுபோதினியைக் கோபம், எரிச்சல், சினம் என்று பல்வகை உணர்ச் சிகள் பீடித்திருந்தன.

## (7)

'மோட்டார் சைக்கிள்' நிற்கும் ஓசை கேட்க, சுபோதினி ஜன்னலினூடாக வெளியே பார்வையை ஓடவிடுகிறாள்.

பிரதீப் 'மோட்டார் சைக்கிளில்' இருந்து இறங்குகிறான். 'ஹெல்மட்டைக்' கழற்றியவன், வீட்டைக் கண்களால் மேய்கிறான். பின் படியேறி உள்ளே வருகிறான்.

சுபோதினியின் இதய ஓட்டம் விரைகிறது. ஜன்னல் கம்பிகளையே பிடித்தபடி, அசையாமல் நிற்கிறாள்.

"நானே உம்மடை அப்பாவோடை கதைக்கிறன். நீர் ஒண்டுக்கும் பயப்படாதையும். நீர் வெளியே வரவும் தேவையில்லை" என மாலையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொலைபேசி மூலமாகப் பிரதீப் கூறியிருந்தான்.

விறாந்தையில் அமர்ந்திருந்த வேலாயுதம் தன் முன்னால் நிற்கும் பிரதீப்பை நோக்க, அவன் புன்னகைக்கிறான்.

"நான் பிரதீப். உங்களோடை கொஞ்சம் பேச வேணும்" என்ற பீடிகையுடன் பிரதீப் பேச்சைத் தொடங்குகிறான்.

"பிரதீப்?"

"'யெஸ்', பிரதீப் தேவசகாயம்."

"என்ன விசயமாக என்னோடை பேச வேணும்?"

பிரதீப் பதில் கூற முற்பட, அங்கு மங்களேஸ்வரி தோன்றுகிறாள். கணவரை நோக்கி, "இவர் சுபோவை விரும்புறாராம். அதைப் பற்றிக் கதைக்கத்தான் இஞ்ச வந்திருக்கிறார்" என விளக்கமளிக்கிறாள்.

இதைக் கேட்டு வேலாயுதத்தின் முகம் கறுத்து விடுகிறது. "'லவ்'வோ?" என அதிர்ச்சியுடன் கேட்கிறார்.

"ஓமாக்கும்."

"சுபோவும் விரும்புறாளா?"

"அப்படித்தான் சொன்னவள்."

"உமக்கும் சொன்னவளோ?"

"சாடை மாடையாகச் சொன்னவள்."

"நீர் எனக்குச் சொல்ல இல்லையே."

"சொல்ற மாதிரி இல்லாததால, சொல்ல இல்லை."

"விளக்கமாச் சொல்லுமன்."

"இவர் 'கிறிஸ்டியன்'. இஞ்ச வருமே தேவராணி...... அதின்ர அண்ணன்."

"அப்படியா,? தம்பி என்ன செய்வம்? நாங்கள் 'ஹிண்டூஸ்' அதுவும் 'ஸ்ரோங் ஹிண்டூஸ்'." வேலாயுதம் ஆறுதலாகச் சொல்லுகிறார்".

"தெரியும் 'அங்கிள்'" என்கிறான் பிரதீப்.

"அது தெரிஞ்சும்......?"

"விரும்பிட்டம். காதலுக்கு சாதி, சமயம், மொழி, இனம் இல்லை எண்டு சொல்லுகினம்."

"எண்டாப் போலை?"

"ஒருவரை ஒருவர் விரும்புறம்."

"தம்பி, உண்மையைச் சொல்லுறதெண்டால், எனக்கு இதிலை துளியளவும் விருப்பம் இல்லை. நீர் சுபோவை மறந்திடும்."

"நான் மறக்கிறதுக்காக சுபோவை 'லவ்' பண்ண இல்லை."

"என்னைப் பொறுத்தளவில நீர் சுபோவை மறந்திட வேணும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனென்டால் நாங்கள் உங்கட 'லவ்வுக்கு பெர்மிஷன்' தரமாட்டம்."

"'நோ அங்கிள் பெர்மிஷன்' தரத்தான் வேணும். உண்மையான 'லவ்'வை குழிதோண்டிப் புதைத்திடாதேங்கோ."

"'நோ! நோ'!"

"'அங்கிள்', நீங்கள் இப்படி செய்யுறதால, நீங்கள் உங்கடை மகளின்ரை வாழ்க்கையை குழப்பப் போறீங்க."

"என்ன மாதிரி?"

"நாங்கள் ரண்டு பேரும் ரண்டு வருசமாக 'லவ்' பண்ணுறம். என்னை மறந்து சுபோ எப்படி வேறொருத்தனை கலியாணம் செய்வா?"

"அது எங்கடை 'புரொப்ளம்'."

இவ்வளவு உரையாடல்களையும் அறையில் இருந்தபடி கேட்டுக் கொண்டிருந்த சுபோதினிக்கு, மனம் பொறுக்க முடியவில்லை. அறையில் இருந்து வீச்சுடன் வெளிப்பட்டாள்.

"அப்பா, பிரதீப் சொல்லுறது உண்மை. என்ர வாழ்க்கையைக் குழப்பிப் போடாதேங்கோ" எனக் கத்தினாள் சுபோதினி.

"பிரதீப் 'கிறிஸ்டியன்'. நாங்கள் 'ஹிண்டுஸ்'. அது தெரிஞ்சும் ஏன்ரி 'லவ்' பண்ணினாய்?" குரலை உயர்த்தியபடி மங்களேஸ்வரி கேட்டாள்.

"'கிறிஸ்டியன்' எண்டாப் போல அவர் மனுசன் இல்லையோ?"

சுபோதினி இப்படி கேட்டதும் மங்களேஸ்வரி உடனடியாகப் பதில் கூற முடியாது தடுமாறினாள். "மனுசன் தான். ஆனால், 'கிறிஸ்டியன்' எண்டால் எதிர் காலத்தில உனக்கு நிறைய பிரச்சனை வரும்."

"என்ன மாதிரியான பிரச்சனை?"

"பிள்ளையளை எந்த மதத்தில வளர்க்கப் போறீங்க?"

"அதுகளை பிள்ளையள் முடிவு செய்யட்டும்."

"நீங்கள் தான் அதை முடிவு செய்ய வேணும்."

"வாழ்க்கையில மதம் ஒரு சின்னதொரு பங்கைத்தான் செலுத்துது. எண்டபடியால அதைப் பற்றி பிள்ளையள் முடிவு செய்யுறதில பிழை இல்லை. நாங்கள் முடிவு செய்ய வேணும் எண்டில்லை." சுபோதினி ஆக்ரோஷத்துடன் சொன்னாள்.

"மதம் தான் ஒருத்தனை நல்வழிப்படுத்துது."

"உண்மைதான். கிறிஸ்தவ மதமும் சரி, இந்து மதமும் சரி நல்லதைத்தான் போதிக்குது. இரண்டு மதத்தினதும் தத்துவங்கள் பெரிதும் பொதுவானவை. வழிபாட்டு முறை தான் வித்தியாசம்."

வேலாயுதம் தொண்டையைச் செருமினார். "அப்பிடி எண்டால் இந்து மதத்தை மறந்திட்டு 'கிறிஸ்டியனாக' மாறுறது எண்டு முடிவு எடுத்திட்டியா?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஏன் நான் மதத்தை மாத்த வேணும்? ரண்டு பேருமே ரண்டு மதத்தை பின்பற்றுறதால பிரச்சனை இருக்காது. ரண்டு வித்தியாசமான கொள்கை இருக்கிற புருஷனும், பெஞ்சாதியும் சந்தோஷமாக வாழ இல்லையா?"

சுபோதினி கூறிவிட்டு தகப்பனையும், தாயையும் ஆவலுடன் நோக்கினாள்.

"வாழுகினம் தான். ஆனால், நிறைய பிரச்சனையளோட வாழுகினம்."

"வாழ்க்கை எண்டால் பிரச்சனை இருக்கத்தான் செய்யும். சிலருக்குப் பிரச்சனை குறைவாக இருக்கும். வேறு சிலருக்கு பிரச்சனை அறவே இருக்காது. வாழ்க்கை எண்டால் அது ரோசாப் பூக்கள் நிரம்பிய கட்டில் இல்லை."

சுபோதினி இவ்வாறு கூறியதும் வேலாயுதம் தன் மனைவியை நோக்கினார். மங்களேஸ்வரியின் முகத்தில் நிறைய உணர்ச்சிகள் மறைந்திருந்தன.

'கம்பியூட்டர்' முன்னால் அமர்ந்திருந்த சுபோதினிக்கு 'கீ போர்ட்டில்' விரல்களைப் பதிக்க முடியவில்லை. முதல் நாள் இரவில் இருந்து அவள் உள்ளத்தில் சந்தோஷம் தடம் புரண்டது.

பிரதீப்பைக் கரம் பற்ற அவளது பெற்றோர் அனுமதி வழங்கிவிட்டனர்.

அவனை மறந்து விடும்படி எத்தனை தடவைகள் அவர்கள் கேட்டிருப்பார்கள்? அவள் முடியாது என்ற பதிலில் உறுதியாக இருந்தாள். அவர்கள் வாதம் புரிந்த போதெல்லாம், அவள் எதிர்வாதம் புரிந்தாள். பிரதீப்பும் தன் பக்க நியாயத்தை எடுத்துரைத்தான். இறுதியில் வேலாயுதம் அவர்களுக்கு ஆதரவாக முடிவு எடுத்தார்.

"உங்கட 'லவ்'வை நான் உடைக்க விரும்ப இல்லை. நீங்கள் ரண்டு பேரும் பக்குவப்பட்ட ஆக்கள். நல்லது எது, கெட்டது எது எண்டு உங்களுக்குத் தெரியும். 'பேரண்ட்ஸ்' எண்ட முறையில நாங்க சொல்ல வேண்டியதை சொல்லி விட்டம்" என இறுதியாக வேலாயுதம் 'தளதள'த்த குரலில் சொல்ல, சுபோதினி அவர் முன்னால் முழந்தாளிட்டாள். அவர் இரு கைகளையும் ஆதரவாகப் பற்றினாள். "அப்பா, நீங்கள் எதற்கும் கவலைப் படாதீங்க. நாங்கள் ரண்டு பேரும் சந்தோஷமாக வாழ்வம்" என்றவளின் கண்கள் கலங்கின.

"'அங்கிள்', விடலைப் பருவத்து உணர்ச்சியால உந்தப்பட்டு உங்கடை மகளை நான் 'லவ்' பண்ண இல்லை. அவவின்ர ஒவ்வொரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடவடிக்கையையும் உன்னிப்பாக கவனிச்சு விட்டுத்தான் நான் ஒரு முடிவுக்கு வந்தன்" என்று பிரதீப் சொன்னான்.

"சுபோ மூத்தவள் தான். ஆனால், இளையவள் போல நடக்கிறாள். செல்லம் மெத்திப் பேச்சுது. நீங்கதான்......" மங்களேஸ்வரி புன்னகையுடன் வார்த்தைகளை அரைகுறையில் நிறுத்தினாள்.

பிரதீப் மலர்ச்சியுடன் சிரித்தானே தவிர, ஒன்றுமே கூறவில்லை.

இரவு முழுவதும் சுபோதினி மகிழ்ச்சியில் திளைத்தாள்.

அதிகாலையில் எழுந்தவள் ஒவ்வொரு காரியத்தையும் சுறுசுறுப்பாகச் செய்தாள்.

"இப்பவே பொறுப்பு வந்திட்டுது போல......" என தாய் நமுட்டுச் சிரிப்புடன் சொன்னாள்.

"அக்கா இண்டைக்குத்தான் இவ்வளவு வெள்ளன ஒழும்பினதைக் கண்டனான்" என்றாள் தர்ஷிகா.

அலுவலகத்துக்கு வந்தவுடன் தனது மனதுக்குள் புதைந்து கிடக்கும் சந்தோஷச் செய்தியைச் சுசிலாவிடம் சொல்ல வேண்டும் என்ற துடிப்பு சுபோதினிக்கு ஏற்பட்டது. ஆனால், சுசிலா 'பிஸியாக' இருக்கவே, தருணத்தை நோக்கிய வண்ணம் அமர்ந்திருந்தாள்.

நிர்மலன் அவளைத் தேடி வந்தான்.

"'ஈவினிங்' ஏதாவது 'புரோகிராம்' இருக்குதா?" எனக் கேட்டான்.

"நிறைய இருக்குது."

"என்ன 'புரோகிராம்'?"

"'டின்னருக்காக' அம்மாவுக்கு உதவி செய்ய வேணும். 'ப்ரிஜ்ஜை கிளீன்' பண்ண வேணும். என்ர உடுப்புக்களை 'அயன்' பண்ண வேணும்."

"இதுவா 'புரோகிராம்'? அதுக்கு முந்தி என்ர 'புரோகிராமுக்கு' வரமுடியுமா?"

"'நோ சேர்'. அண்டைக்கு உங்களோடை 'டுப்ளிகேஷன் இன்'னுக்கு வந்து நேரம் கழிச்சு வீட்டை போனதால அம்மா என்னை நல்லா ஏசினா" என்று சுபோதினி பொய் சொன்னாள்.

"இண்டைக்கு உம்மை வீட்டில 'ட்ரொப்' பண்ணுறன். அப்படியெண்டால் 'லேட்'டாகாது."

"வேண்டாம் 'சேர்'. அப்பா இதை எல்லாம் விரும்பமாட்டார். அவர் ஒரு 'ஒத்தடொக்ஸ் டைப்'."

நிர்மலன் ஏமாற்றத்துடன் போய் விட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# (8)

மழை பலமாகப் பெய்யத் தொடங்கியது.

விவேகானந்தா அனாதை ஆசிரம சாரதா மண்டபத்தின் முன்றலில் அமர்ந்திருந்த சுபோதினியும், நிரோஷாவும் அங்கிருந்து அகன்று, உள்ளே சென்றனர்.

"'க்ளைமெக்ஸ்' வர முந்தியே உங்கடை கதையை இந்த மழை நிற்பாட்டி விட்டுதே" என்று நிரோஷா வருந்தினாள்.

"என்ர வாழ்க்கையில நடந்து போன கொஞ்சம் சம்பவங்களைச் சொல்லிட்டன். மிச்சத்தை பேந்து சொல்லுறன்" என்கிறாள் சுபோதினி.

"அக்கா, உங்கட அறைக்கு வாறன். மிச்சத்தைச் சொல்லுங்கோ."

"'நோ', நீர் இனி 'ஸ்டடி ரூமுக்கு' போக வேணும். இல்லாட்டி 'மெடம்' உம்மையும், என்னையும் கண்டபடி ஏசுவா. உமக்குத் தானே அவவைப் பற்றித் தெரியும்?"

நிரோஷா கெஞ்சலுடன் சுபோதினியை நோக்கினாள். "அக்கா, 'அட்லீஸ்ட்' உங்கட காதல் தோல்வி எப்படி ஏற்பட்டுது எண்டாவது சொல்லுங்களேன்."

சுபோதினியின் முகத்தில் சோகம் படிந்தது. "அதைச் சொல்லுறது எண்டால் நிறைய சம்பவங்களைச் சொல்ல வேணும். அதுக்கு இப்ப நேரம் காணாது" என்று கூறும் போதே மீனாட்சியம்மாளின் தலைக் கறுப்பு தெரிந்தது.

"'மெடம்' வாறா......" சுபோதினி சொல்லி வாய் மூட முன், நிரோஷா அங்கிருந்து அகன்று விடுகிறாள்.

மீனாட்சியம்மாள் நேரே சுபோதினியிடம் வந்தாள். கனிவாகப் புன்னகைத்தாள்.

"சுபோ, நீர் இந்த ஆசிரமத்துக்கு வந்து எத்தனை வருசமாகுது?" என மீனாட்சியம்மாள் கேட்கிறாள்.

"நாலு வருசமாகுது."

"இந்த நாலு வருசத்தில செய்யாததை நீர் செய்ய வேணும்."

"நான்?"

"'யெஸ். சோஷல் சேர்விஸ் மினிஸ்டர்' அடுத்த மாசம் இஞ்ச வாறார். நாங்கள் ஒரு கலைவிழா நடத்தப் போறம். அதுக்கு அவர் தான் 'சீஃப் கெஸ்ட்'."

"அப்படியா? நல்லது. என்னென்ன 'புரோகிராம்' வைக்கப் போறதாக உத்தேசம்?"

"வழமை போல 'டான்ஸ்', பேச்சுப் போட்டி, சமயப் போட்டியோட இந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறை நாடகமும் வைக்கலாம் எண்டு முடிவு எடுத்திருக்கிறம். நாடகம் இன ஒற்றுமையை மையமாகக் கொண்டிருந்தால் நல்லது எண்ட அபிப்பிராயம் நிலவுது."

"நாடகம் தானே புது 'அயிட்டம்'? ஒரு நாடகத்தை எழுதித் தாறன்."

"முந்தி எழுதி இருக்கிறீரோ?"

"ஓ...... 'ஸ்கூல் டேயிஸில' ஒன்டிரண்டு நாடகம் எழுதி இருக்கிறன்."

"அப்ப இப்பவே எழுதத் தொடங்கும். எழுதிப்போட்டு, எனக்கு ஒருக்கால் காட்டிப் போட்டு, பிள்ளையளைப் பழக்கும்."

"சரி" என்று சுபோதினி சொல்ல, மீனாட்சியம்மாள் அங்கிருந்து அகன்று தனது அலுவலக அறைக்குச் சென்றாள்.

அறைக் கதவைச் சாத்திய மீனாட்சியம்மாளின் கண்கள் சுவரில் கொளுவி இருந்த படத்திற்குத் தாவியது. மூன்று வருடங்களுக்கு முன் – அந்த ஆசிரமத்தின் வெள்ளி விழாவின் போது அவளும், சுபோதினியும், அனாதைப் பிள்ளைகளும் ஒன்றாக நின்று எடுத்த படம் அது. சுபோதினியின் தோளில் ஒரு குழந்தை வீற்றிருந்தது. அந்தக் குழந்தை அவளுடையது. அந்த ஆசிரமத்திற்கு அவள் வந்த பின்னர் பிறந்தது.

'சுபோ........' மீனாட்சியம்மாள் பெருமூச்செறிந்தாள்.

இரவு ஒன்பது மணி கடந்து விட்டது. மீனாட்சியம்மாள் இரவு ஆகாரத்தின் பின் 'பல்கனியில்' நின்று சுற்றும் முற்றும் இலக்கின்றி பார்வையை ஓடவிடுகிறாள்.

மழை தூறல் போடுகிறது. அதைப் பொருட்படுத்தாமல் அவள் நிற்கிறாள். சில வினாடிக்குள் மழை ஆக்ரோஷத்துடன் பெய்ய, அவள் தனது அறைக்குச் சென்றுவிடுகிறாள். அங்கிருந்த ஜன்னல் வழியாக அவள் பார்வையை மீண்டும் வெளியில் விடுகிறாள். சில நிமிஷங்கள் நிற்கிறாள். இரு தடவைகள் கொட்டாவி விட்டவள், படுக்கைக்குப் போக முற்பட, அவள் பார்வைக்குள் வீதியில் மழையில் நனைந்தவண்ணம் வந்த ஓர் இளம் பெண் சிக்குகிறாள்.

முதலில் அசுவாரஷ்யத்துடன் அவளை நோக்குகிறாள். ஆனால், அவ்விளம் பெண் கீழே சரிந்து விழுவதைக் கண்டவள் துணுக்குற்றாள். அவ்விளம் பெண் சேற்றுக்குள் கிடப்பது தெரிய, மீனாட்சியம்மாள் 'பர, பர'க்கிறாள். உடனடியாக அவள் கீழே சென்று வில்சன் என்ற 'செக்கியூரிட்டி கார்ட்'டுடன் ஆசிரமத்தின் 'கேட்'டைத் திறந்தபடி வெளியே செல்கிறாள்.

இளம் பெண் சேற்றில் மயங்கிய நிலையில் கிடக்கிறாள். அவள் நெற்றியில் இருந்து இரத்தம் வழிந்து கொண்டிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வில்சன் தூக்கு" என்ற மீனாட்சியம்மாள், அப் பெண்ணின் தோள் மூட்டில் பிடிக்க, வில்சன் அவள் இரு கால்களையும் பிடித்தான். அதன் பின்னர் அவளை இருவரும் தூக்கிக் கொண்டு ஆசிரமத்திற்குக் கொண்டு சென்றனர். அங்கிருந்து மீனாட்சியம்மாளின் அறைக்குக் கொண்டு செல்ல, இளம் பெண்ணுக்கு விழிப்பு ஏற்பட்டு விடுகிறது.

மீனாட்சியம்மாள் இளம் பெண்ணைப் பார்த்துப் புன்னகைத்தாள். இளம் பெண் பதிலுக்குப் புன்னகைத்தாள்.

"தங்கச்சி, நீர் ஆர்? உமக்கு என்ன நடந்தது?" என மீனாட்சியம்மாள் வாஞ்சையுடன் கேட்டாள்.

இளம் பெண் சுற்ற வரப் பார்த்தாள். "இது விவேகானந்தா ஆசிரமம் தானே?"

"ஓமோம்."

"அடைக்கலம் தேடி வந்திருக்கிறன்."

மீனாட்சியம்மாள் அவளை அளப்பது போலப் பார்த்தாள். "நாங்கள் அனாதைகளுக்குத்தான் அதுவும் பதினெட்டு வயசுக்குள்ளை இருக்கிறவையளுக்குத் தான் அடைக்கலம் குடுக்கிறம்."

"என்ர வயித்தில வளர்ற பிள்ளையும் அனாதையாகி, இஞ்ச வாறதை நிற்பாட்டுறதெண்டால், நீங்கள் எனக்கு அடைக்கலம் தரத்தான் வேணும்."

"நீர் என்ன சொல்லுறீர்?" எனக் கேட்ட மீனாட்சியம்மாள் அவ்விளம் பெண் நடுங்கிக் கொண்டிருப்பதைக் கண்டு, "உமக்கு அடைக்கலம் தாறதா, இல்லையா எண்டு பிறகு பார்ப்பம். இப்ப நீர் இந்த நிலையில இஞ்ச நிக்கிறதைப் பார்த்துக் கொண்டு என்னால இருக்க முடியாது" என்றவள், உடனே தனது அலுமாரியைத் திறந்து துவாய் ஒன்றை எடுத்து இளம் பெண்ணிடம் நீட்டினாள். "பக்கத்தில 'பாத்ரூம்' இருக்குது. உம்மட மேலை கழுவி விட்டு, இந்த அலுமாரிக்குள்ள இருக்கிற உமக்கு அளவான சட்டை ஒண்டைப் போட்டுக் கொண்டு வெளியில வாரும்" என்கிறாள்.

இளம் பெண் 'பாத்ரூமுக்குள்' நுழைய, அறையில் இருந்து மீனாட்சியம்மாள் வெளியேறினாள்.

சொற்ப வேளைக்குள் இளம் பெண் மீனாட்சியம்மாளின் அளவான 'கிமோனா' ஒன்றை அணிந்தபடி வெளியே வந்தாள்.

இளம் பெண்ணை மீனாட்சியம்மாள் அளப்பது போலப் பார்க்கிறாள். அவளின் அழகைச் சுவாரஷ்யத்துடன் நோக்கியவள், "உம்மட பெயரென்ன?" எனக் கேட்கிறாள்.

"சுபோதினி......"

"உமக்கு நிறைய வடிவு இருக்குது. அது உமக்கு ஆபத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படுத்தி இருக்க வேணும் எண்டு நினைக்கிறன்."

"வடிவு இல்லை. நான் ஒரு பொம்பளை எண்டபடியால ஆபத்தை விலைக்கு வாங்கிவிட்டன்."

"அப்படி எண்டால் உம்மட வாழ்க்கையில நடக்கக் கூடாதது ஏதோ நடந்து விட்டுது. அது என்ன? இது உம்மட 'பேர்சனல்' விசயமாக இருக்கலாம். நீர் என்னை உம்மட அம்மாவாக நினைச்சுச் சொல்லும்."

"அந்த கெட்ட 'ராஸ்கல்' என்ர வாழ்க்கையை கெடுத்து விட்டான்." சுபோதினியின் முகம் விகாரமடைகிறது. அதில் கொலை வெறி தவிக்கின்றது.

"யார் அந்த 'ராஸ்கல்'?"

"சொல்லுறன்..... சொல்லுறன்..... எனக்கு நடந்த துர்ப்பாக்கிய நிலையைப் பற்றி உங்களிட்டை சொல்லுறன். அப்பத் தான் நான் ஏன் இஞ்ச வந்தன் எண்டு உங்களுக்குத் தெரியும்."

சுபோதினியின் மனம் இறுகுகின்றது. அவள் எண்ணம் அவளிடமிருந்து விலகுகிறது.

## (9)

சுபோதினி காரியாலயத்தில் இருந்து புறப்படத் தயாரானாள்.

கிறிஸ்டி அவளிடம் வருகிறான். "சுபோ...... வீட்டை போகப் போறீரா?" என அன்புடன் கேட்கிறான்.

"'யா'....." என்கிறாள் சுபோதினி.

"'மிஸ்டர்' நிர்மலன் ஒரு அவசர வேலையைத் தந்திருக்கிறார், நாளைக்கு 'மோர்னிங்' அவருக்கு 'ரிசல்ட்ஸ்' வேணுமாம். நீர் ஒரு இரண்டு மணித்தியாலம் நிண்டீர் எண்டால் 'கொம்பியூட்டரிலையே' வேலையை முடிச்சிடலாம்."

"'நோ' கிறிஸ்டி, நான் போக வேணும். நாளைக்கு 'மோர்னிங்' செய்து தாறன்."

"'நோ' சுபோ. மிஸ்டர் நிர்மலனுக்கு நாளைக்கு 'மோர்னிங் நைன்'னுக்கு ஒரு 'கொன்பரன்ஸ்' இருக்குது. அதுக்கு 'ரிசல்ட்ஸை' கொண்டு போக வேணுமாம்."

"வேறை ஆரையும் கொண்டு செய்யுங்களேன்."

"இந்த 'கொம்பனியில' இந்தவேலையை நீர் தான் செய்ய முடியும். 'பிளீஸ்', எனக்காக 'ரு அவர்ஸ்' நில்லுமன். 'மிஸ்டர்' நிர்மலனிட்ட சொல்லி 'ட்ரான்ஸ்போட்' எடுத்துத் தாறன்."

கிறிஸ்டியின் முகத்தில் நிறைய கெஞ்சல்தனம் தெரிகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சரி. ஆனால், இனி மேல இப்படி வேலை செய்து தர மாட்டன். எல்லாத்தையும் 'ஒஃபிஸ் அவர்ஸிலேயே' செய்து முடிக்கப் பாருங்க."

"'தாங்கியூ சுபோ.'"

தோளில் கொளுவி இருந்த 'ஹாண்ட் பாக்' கை மேசையின் மேல் வைத்துவிட்டு, ஒரு கொட்டாவியுடன் 'கம்பியூட்டரின்' முன் சுபோதினி அமர்ந்தாள்.

கிறிஸ்டி ஒரு 'ஃபைல்' கட்டை அவள் முன்பாக போட்டுவிட்டு, அவள் அருகில் அமர்ந்தான்.

நேரம் தன் பாட்டில் நகர்ந்தது. ஆறு மணியாகிறது. இருள் பரவியது. சுபோதினி வேலையில் மும்முரமாக ஈடுபட்டிருந்தாள்.

"'ஓ.கே. நான் போயிற்று வாறன். நாளைக்கு 'மோர்னிங்' என்ர மேசையில 'ஃபைல்' இருக்கும் எண்டு நினைக்கிறன்" என்றபடி நிர்மலன் வந்தான்.

"'யெஸ் சேர்'" என்று கிறிஸ்டி குழைந்தான்.

"சுபோ, நான் வாறன். 'ட்ரான்ஸ்போர்ட்' ஒழுங்கு செய்திருக்கிறன். வீட்டுக்கு முன்னாலேயே இறங்கும்" என்றபடி நிர்மலன் சென்றுவிட்டான்.

ஆறரையாகியது.

"சுபோ, நீர் வேலையை செய்யும். நான் ஒருக்கால் வெளியில போயிட்டு வாறன்" என்ற கிறிஸ்டி எழுந்தான்.

சுபோதினி சோம்பல் முறித்தாள். "எத்தனை மணிக்கு வருவீங்க?"

"அரை மணித்தியாலத்திலை வருவன்."

கிறிஸ்டி போய்விட்டான்.

'பியோன்' கந்தசாமி தேநீரை வைத்துவிட்டுப் போனான்.

சுபோதினி தேநீரைப் பருகினாள். தனது ஆசனத்தில் இருந்து எழுந்தாள். அங்கும், இங்குமாக சிறிது நேரம் நடந்தாள்.

மீண்டும் 'கம்பியூட்டரில்' அமர முற்பட, 'டெலிபோன்' மணி அலறுகிறது. 'ரிஸீவரை' எடுத்து காதில் பொருத்தினாள்.

மறுபுறத்தில் பிரதீப் "'ஹலோ'" என்று கத்துகிறான்.

"என்ன பிரதீப்? ஏன் கத்துறீங்க?" எனக் கேட்டுச் சுபோதினி சிரிக்கிறாள்.

"இப்ப எத்தனை மணி?"

"ஆறு முப்பத்தைஞ்சு."

"'ஒஃபிஸிலை' என்ன செய்யுறீர்?"

"'மிஸ்டர்' நிர்மலன்ர அவசர வேலை ஒண்டை 'கொம்பியூட்டரில ஃபீட்' பண்ணுறன். இன்னும் அரை மணித் தியாலத்தில வேலை முடிஞ்சுவிடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்டு நினைக்கிறன்."

"அப்படி எண்டால் ஏழு மணி போல 'ஓஃபிஸுக்கு' வரட்டா? அங்கை இருந்து எங்காவது போய் 'டின்னர்' எடுப்பமா?"

"'நோ' பிரதீப். என்னை வீட்டில 'ட்ரொப்' செய்யுறதுக்கு ஒழுங்கு செய்திருக்கிறாங்கள். நாளைக்கு 'ஈவினிங் மீட்' பண்ணுவமா?"

"உம்மை 'ட்ரொப்' பண்ண வேண்டாம் எண்டு சொல்லுமன். நான் வந்து 'பிக் அப்' பண்ணுறன்."

"வேண்டாம் பிரதீப். கடைசி நேரத்தில 'ட்ரான்ஸ்போர்ட்' வேண்டாம் எண்டு சொன்னால் சரி இல்லை. என்னை 'ட்ரொப்' பண்ணுறதுக்கு எண்டே ஒரு 'டிரைவரை' நிற்பாட்டி இருக்கிறாங்க. 'பிளீஸ் எக்ஸியூஸ் மீ'. நாளைக்கு 'ஈவினிங்' சந்திப்பம்" என்று சுபோதினி சொல்லும் போது, கிறிஸ்டி அங்கு வந்தான். "சரியா......... நான் வைக்கிறன்" என்று கூறியபடியே சுபோதினி தொடர்பைத் துண்டித்தாள்.

மீண்டும் தனது ஆசனத்தில் சுபோதினி அமர்ந்தாள்.

கிறிஸ்டி அமரவில்லை. சுபோதினியின் அருகில் நின்றான். அவன் நெற்றியில் நிறைய வியர்வைத் துளிகள் பரந்திருந்தன.

"எங்க போனீங்க" என்று சுபோதினி சுரத்தின்றி கேட்டாள்.

கிறிஸ்டி குற்ற உணர்வுடன் புன்னகைத்தான். "'டிரிங்க்ஸ்' எடுக்கப் போனனன்."

"'ட்ரிங்க்ஸ்?"

"'யெஸ். ஈவினிங் சிக்ஸ்' எண்டால் எனக்கு 'டிரிங்க்ஸ்' எடுக்க வேணும். இல்லாட்டால் என்னால ஒரு நிலையில இருக்க ஏலாது."

"நீங்கள் சொல்லுறது எனக்கு விளங்க இல்லை."

"பற்றீஷியா என்னை விட்டுப் போனாப் போல 'ஈவினிங்' எண்டால் ஒரு தனிமை ஒண்டு வந்து என்னை வாட்டுது. நிறைய துக்கம் வந்து கண்ணீரை வர வழைக்குது. எத்தனையோ தரம் ஒருவருக்கும் தெரியாமல் அழுதிருக்கிறன். இதை எல்லாம் மறக்கிறதுக்காக 'டிரிங்க்ஸ்' எடுத்தன். இப்ப அதுவே ஒரு பழக்க மாகி விட்டுது."

"அதால தானே பற்றீஷியாவை 'டைவோஸ்' செய்திட்டு பேந்தும் கலியாணம் கட்டும் படி அண்டைக்குச் சொன்னனான்."

"நீர் சொன்னதைப் பற்றி நான் நிறைய யோசிச்சன். நேத்தைக்கு இரவு பன்னிரண்டு மணி மட்டும் யோசிச்சன். கடைசியாக ஒரு முடிவுக்கு வந்தன்."

"என்ன முடிவு?"

"பற்றீஷியாவை 'டைவோஸ்' செய்திட்டு, இன்னொருக் கால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலியாணம் கட்டுறது."

"அது நல்ல முடிவு. ஒரு பொம்பளையோட வாழ முடியாது எண்டால் இன்னொருத்தியோட வாழலாம். ஆனால், சட்டப்படி அவளை 'டைவோஸ்' செய்திட்டு, இன்னொருத்தியைக் கலியாணம் கட்ட வேணும்."

"அந்த முடிவைத் தான் எடுத்திருக்கிறன். பற்றீஷியா வோட கதைச்சு, அவள்ர 'பெர்மிஷனோட டைவோஸ் கேஸை' போடலாம் எண்டு நினைக்கிறன்."

"'குட்'."

"நான் என்ர இரண்டாவது 'வைஃப்பை செலக்ட்' பண்ணிட்டன்."

"யார் அவள்?"

"பிறகு சொல்லுறனே......"

"இப்ப சொல்லுங்களேன்."

"நீர் தான்."

இதைக் கேட்டு சுபோதினி முதலில் ஆச்சரியமுற்றாலும், பின்னர் வாய்விட்டுச் சிரித்தாள். "கிறிஸ்டி 'ஜோக்' அடிக்கிறீங்களா?"

கிறிஸ்டியின் முகத்தில் ஒரு இறுக்கம் படிந்தது. "நான் உண்மையைத் தான் சொல்லுறன். உம்மைத் தான் விரும்புறன்."

"'பட்'......." என்றவளிடமிருந்து வார்த்தைகள் புறப்படத் தயங்கின.

"நீர் என்னை விரும்ப இல்லையா?"

"'யெஸ்'" அவள் ஈனஸ்வரத்தில் முனகினாள். தொடர்ந்து, "'யெஸ்..... யெஸ்'......." என்று முணுமுணுத்தவள், திடீரென "'யெஸ்'" என்று அடித்தொண்டையில் கத்தினாள். "'யெஸ்'....... நான் உங்களை விரும்ப இல்லை." சுபோதினியின் வார்த்தைகளில் ஆக்ரோஷம் கொப்பளித்தது.

"'நோ'" கிறிஸ்டி ஓங்காரத்துடன் கத்தினான். "'ஐ லவ் யூ' சுபோ......'ஐ லவ் யூ'......"

சுபோதினி நிலை தளும்பிவிட்டாள். கோபம் அவள் நிலையைத் தடுமாற வைத்துவிட்டது. அவள் கைகள் 'பரபர'த்தன அவன் குரல்வளையை நசுக்கி...... ஒருவாறு தன் மன எழுச்சியைக் கட்டுப்படுத்தினாள்.

"கிறிஸ்டி, 'டோன்ட் டோக் நொன்சன்ஸ்'...... நான் போறன்" என்ற சுபோதினி 'ஹான்ட் பாக்'கை எடுத்தாள்.

கிறிஸ்டி பாய்ந்து அவள் 'ஹாண்ட் பாக்'கைப் பறிக்க முற்பட்டான். சுபோதினி விடவில்லை. 'ஹாண்ட பாக்' கை அப்படியே தனது மார்புடன் சேர்த்து அணைத்தாள்.

"சுபோ, எனக்கு ஒரு முடிவு சொல்லி விட்டுத்தான் நீர் இஞ்ச இருந்து போகலாம்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்ன முடிவு? உங்களோட கதைக்க நான் தயாரில்லை. நீங்கள் இப்படி கேவலமாக நடப்பீங்க எண்டு நான் நினைக்க இல்லை. நான் வாறன்....." என்ற சுபோதினி அங்கிருந்து அகல முற்பட்டாள்.

"'நோ..... யூ ஆர் நொட் கோயிங் ஃபுரம் ஹியர்'."

"'நோ.... ஐயாம் கோயிங்'."

கிறிஸ்டி அவள் கையை 'லபக்'கென்று பிடித்தான். "'பிளீஸ்'..... நில்லும்..... நான் சொல்லுறதைக் கேளும். 'பிளீஸ்'......"

"உங்களுக்கு விசர்..... பைத்தியம். கையை விடுங்க......" சுபோதினி தன் கையை விடுவிக்க முயன்றாள்.

கிறிஸ்டி தனது பிடியை இறுக்கினான்.

"விடுறா நாயே....."

"மாட்டன். விட மாட்டன்."

அவள் திமிறினாள். அவன் பிடியிலிருந்து அவளால் விடுபட முடியவில்லை.

அவனது முகம் விகாரமடைந்தது. அதில் நிறைய சலனங்கள்.......

அவன் தன் முகத்தை அவள் முகத்திற்கு அருகில் கொண்டு சென்றான். "சுபோ, 'ஐ லவ் யூ...... ஐ லவ் யூ'......"

அவள் அபயக் குரல் கேட்டு எவருமே வரவில்லை.

கிறிஸ்டி மிருகமாகிக் கொண்டிருந்தான்.

## (10)

ஆடி அசைந்து நடந்தாள் சுபோதினி.

வாழ்க்கையில் விரக்தி அடைந்த நிலையில்.......... பெண்மையை ஒரு மிருகத்திடம் பறி கொடுத்த நிலையில் நடந்தாள்.

அவள் மனம் முற்றாக உடைந்து விட்டது.

நடந்தாள்......நடந்தாள்.......

தன்னை நினைத்து மனம் வெதும்பினாள்.

கனவு போல – 'திடுதிப்'பென அவள் எதிர்பார்க்கும் முன் அந்த பயங்கர சம்பவம் நடந்துவிட்டது. கிறிஸ்டி தன் உணர்ச்சிகளை வெறியுடன் தீர்த்து விட்டான். அவள் பலிகடாவாகிவிட்டாள்.

அவள் திமிறினாள். அவனை உதைத்தாள். தள்ளினாள். கடித்தாள். அவனின் முன்னேற்றம் தடைப்படவில்லை. அவன் தன் எண்ணத்தில் கொடூரத்தைக் கடைப்பிடித்தான்.

அவள் கத்தினாள். கதறினாள். அவள் அபயக் குரல் கேட்டு 'பியோன்' கந்தசாமி வரவில்லை. அவன் எங்கே?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலுவலகம் என்று பாராமல், எதிர்விளைவுகளைப் பற்றிச் சிந்திக்காமல் தனது இச்சையை கிறிஸ்டி பலாத்காரமாகத் தீர்த்துவிட்டான்.

அவளிடம் இருந்து விலகிய போது அவன் அவளைப் பரிதாபத்துடன் நோக்கினான்.

"'சொரி...... சொரி'......" என இரு தடவைகள் சொன்னவன், அவள் முன்னால் நின்றான்.

"சுபோ, 'ஐ லவ் யூ'...... இன்னும் 'லேட்' இல்லை. நான் உம்மை 'மரி' பண்ண 'ரெடி'. 'ஐ வோண்ட் யுவர் பெர்மிஷன்'" என்று வார்த்தைகளை அழுத்தம், திருத்தமாகச் சொன்னான்.

நிலத்தில், அலங்கோல நிலையில் கிடந்த சுபோதினிக்கு அவன் வார்த்தைகள் எரிச்சலை ஊட்டின. 'டேய் ராஸ்கல், என்ர வாழ்க்கையைக் கெடுத்துவிட்டு வாழ்வு தாறதைப் பற்றி கதைக்கிறியா?' என்று கேட்டு அவன் குரல் வளையை நசுக்கி....... அவளுள் கொலை வெறி விகாரமடைந்தது. ஆனால், அவள் உடல் நிலை, அவள் எண்ணத்தை தடுத்தது. அவனை எரித்து விடுவது போலப் பார்த்தபடி கிடந்தாள்.

"சுபோ, உம்மட மனதை மாத்தினால், நான் உம்மைக் கைப்பிடிக்கத் தயார். மனதை மாத்தப் பாரும்", என்றபடி அவன் அங்கிருந்து அகன்றான்.

சுபோதினி கஷ்டப்பட்டு எழுந்தாள். தன்னைச் சரிப்படுத்தினாள். அங்கிருந்து வெளியேறினாள். கீழே வர கந்தசாமி 'சிகரெட்' புகைத்துக் கொண்டிருந்தான். அவன் கண்கள் சிவந்திருந்தன.

சுபோதினி வீதியில் நடக்கத் தொடங்கினாள்.

இனி என்ன செய்வது?

அவள் மனதினுள் தெளிவான சிந்தனை நுழைய மறுத்தது.

அடுத்த கட்ட நடவடிக்கையாக எதைச் செய்வது என்று தெரியாமல் தத்தளித்தாள், தவித்தாள்.

வீட்டை போய் நடந்ததைப் பெற்றோரிடம் சொல்லி, பரிகாரம் காணுவதா? அல்லது நடந்ததை மறைத்துவிட்டு, வழமையான வாழ்க்கையை மேற்கொள்வதா? அல்லது..... அல்லது...... இது பற்றி பிரதீப்பிடம் சொல்வதா? அல்லது அவனிடம் மறைப்பதா?

அடுக்கடுக்காக கேள்விகள் பிறந்தன. பல கோணக் கேள்விகள். ஒன்றுடன் ஒன்று முரண்பட்ட கேள்விகள். பதில்கள் பிறந்தன. ஆனால், அவையும் ஒன்றுடன் ஒன்று முரண்பட்ட பதில்கள். ஒரு தீர்க்கமான முடிவுக்கு வர முடியாமல் அவள் திண்டாடினாள், திணறினாள்.

'பஸ்' ஒன்று வர, அதில் ஏறினாள்.

'பஸ்' 'கோல் பேஸ்' திடலைக் கடக்கின்றது. அங்கு பிரதீப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிற்கிறானா என அவள் நோட்டம் விடுகிறாள். அவன் இல்லை. திடல் வெறிச்சென்று கிடக்கின்றது. யோசனைகள் மனதை அரிக்கின்றன. மீண்டும், மீண்டும் அதே கேள்விகள். அதே பதில்கள்.

கேள்விகளை அணைக்கிறாள்.

வெள்ளவத்தைச் சந்தியில் பஸ் நிற்கும் போது, அவள் மனதில் ஓர் அரைகுறைத் தெளிவு இருந்தது.

வீட்டை அடைகிறாள்.

தர்ஷிகா முதலில் எதிர்ப்படுகிறாள். அவளை ஏறிட்டுப் பார்க்கவே சுபோதினி அஞ்சினாள். ஆனால், சுபோதினியின் முகத்தில் தெரிந்த அச்சத்தைத் தர்ஷிகா அவதானித்து விட்டாள்.

சுபோதினி தலை குனிகிறாள். தர்ஷிகாவை விலக்கியபடி, உள்ளே செல்கிறாள்.

வழியில் ஒருவரும் எதிர்ப்படவில்லை. நேரே அறைக்குள் செல்கிறாள்.

தர்ஷிகா அவளைப் பின் தொடர்ந்து, அறைக்குள் வந்து விடுகிறாள்.

சுபோதினி அவளை அவதானிக்கவில்லை. உடைகளை மாற்றத் தொடங்கினாள்.

தர்ஷிகா அவள் செய்கையைப் பார்த்தவண்ணம் நிற்கிறாள்.

"அக்கா......"

சுபோதினி தங்கையின் குரல் கேட்டு திடுக்கிட்டு விடுகிறாள்.

"உனக்கு இண்டைக்கு என்ன நடந்தது?"

"ஒ.....ஒ.....ஒண்டும் நடக்க இல்லை."

"இல்லை....... ஏதோ நடந்திருக்குது."

"ஒண்டும் நடக்க இல்லை."

"நீ பொய் சொல்லுறாய். என்னட்டை 'எதையோ' மறைக்கிறாய். அக்கா, உண்மையைச் சொல்லு."

தர்ஷிகா அன்புடன் மிரட்டியதும், சுபோதினிக்கு உண்மையை மறைப்பதற்கான தைரியம் கரைந்துவிட்டது. அவள் கண்கள் கலங்கின. கண்ணீர் வெளிப்பட்டது.

"சொல்லு, அக்கா........."

"சொல்லுறன்...... சொல்லுறன்" என்ற சுபோதினி சத்தமில்லாமல் அழுதாள்.

"அக்கா, அழாதை......" என்ற தர்ஷிகா தமக்கையின் முதுகை ஆதரவாகத் தடவிக் கொடுத்தாள்.

"தர்ஷி...... நடக்கக் கூடாதது நடந்திட்டுது."

"'ஓஃபிஸிலை' ஆரும் உன்னை ஏசினாங்களா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இல்லை...... இல்லை......... ஒரு மிருகம் என்ர........ என்ர..........அதை எப்படி சொல்லுவன்.........."

"நீ........நீ....... என்ன சொல்லுறாய்?"

"கிறிஸ்டி எண்ட ஒருவன் என்னை பலாத்காரமாக.........அ.....அ......அடைஞ்சிட்டான்."

இதைக் கேட்டு தர்ஷிகா அதிர்ந்துவிட்டாள். அக்கணமே அவள் முகம் வெளுறிவிட்டது. தமக்கையை நம்ப முடியாதவள் போலப் பார்த்தாள்.

"விளக்கமாகச் சொல்லன்."

நடந்தவற்றை அழுகைக்கிடையே கூறி முடித்தாள் சுபோதினி.

"'ராஸ்கல்'......நாய்.......மூதேசி" என தர்ஷிகா வார்த்தைகளைத் தாறுமாறாக உபயோகித்தாள். "இந்த மாதிரி ஆக்களை நடு 'ரோட்'டிலை வைச்சு தோலை உரிக்க வேணும். என்ர கையில கிடைச்சால் முதல்ல நாரி முதுகு எலும்பைத் தான் முறிப்பன். 'ராஸ்கல்'......." என்று தர்ஷிகா உஷ்ணத்துடன் வார்த்தைகளை வெளியிட்டாள்.

"சத்தம் போடாதை. அப்பா 'ஹோலில்' தான் இருக்கிறார்" என்று சுபோதினி எச்சரிக்கை செய்தாள்.

"உனக்கு நடந்ததை அப்பா, அம்மாட்டை ஒளிக்கப் போறியா?"

"அது தான் எனக்குத் தெரிய இல்லை. உங்கள் எல்லாருக்கும் ஒளிக்கிறது எண்டு தான் நினைச்சிருந்தனான். ஆனால், உனக்கு சொல்லி விட்டன். நீ தான் என்ன செய்யுறது எண்டு சொல்லன்."

"அப்பா, அம்மாட்டை சொல்லி, 'பொலிஸில்' ஒரு 'கொம்பளைண்ட்' குடுத்து, அவனை 'அரஸ்ட்' பண்ண வைக்கவேணும்."

"அதால என்ன பிரயோசனம்?"

"அந்த நாயைப் பழிக்கு பழி வாங்க வேணும். அவனுக்குத் தண்டனை குடுக்க வேணும்."

"அதால எனக்கு என்ன லாபம்?"

"குற்றம் செய்தவனுக்கு தண்டனை கிடைக்குது."

"ஆனால், அதால என்ர, உங்கட மானம். மரியாதை, கௌரவம் எல்லாம் சந்திக்கு வந்து விடும். இதை நீ விரும்பிறியா?"

"அதுக்காக ஒரு குற்றவாளியைத் தண்டிக்கக்கூடாது எண்டு சொல்லுறியா?"

"நான் அப்படி சொல்ல இல்லை. இதைப் பகிரங்கப் படுத்துவதை விட, ரகசியமாக வைச்சால் லாபம் கூட இருக்கும் எண்டு நினைக்கிறன்."

"அப்படி எண்டால் இதைப் பற்றி பிரதீப்புக்குச் சொல்லாமல் மறைக்கப் போறியா?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மறைக்க......... பிரதீப்புக்கும் மறைத்தால் என்ன?"

"அது பிழை எண்டு நினைக்கிறன். முதல்ல அவரிட்ட நடந்ததை சொல்லுறது தான் சரி. அவரின்ர முடிவுக்கு பிறகு நீ அப்பா, அம்மாட்டை சொல்லலாம்."

"எனக்குப் பயமாக இருக்குது. பிரதீப்பிட்டையும் மறைக்கிறது தான் சரி எண்டு நினைக்கிறன். எல்லாத்தையும் கேட்டுப் போட்டு என்னை ஏற்றுக் கொள்ள ஏலாது எண்டு சொன்னால்.......?"

"அப்படி எண்டால் அவருக்கு உன்னில உண்மையான அன்பு இல்லை எண்டு தான் அர்த்தம். அப்படி ஒரு நிலை ஏற்பட்டால் நீ கிறிஸ்டியை கலியாணம் கட்டலாம்."

சுபோதினி விரக்தியுடன் புன்னகைத்தாள். "அந்த மிருகத்தையா?"

"அவன் மிருகம் தான். ஆனால், அவன் உன்னை விரும்புறான். உன்னைக் குறுக்கு வழியில அடையுறதுக்குத் தான் அவன் அப்படி நடந்திருக்கிறான் எண்டு நினைக்கிறன். பிரதீப் உன்னை கைவிட்டால், அவனிட்டை போறதில எந்தப் பிழையும் இல்லை."

"தர்ஷி...... பிரதீப்பை இவ்வளவு ஆழமாக விரும்பிவிட்டு, எந்த முகத்தோடு கிறிஸ்டியோட வாழ்றது?"

"அதுக்கு ஏற்ற மாதிரி மனதைப் பக்குவப்படுத்தினால் சரி...... உங்கை எல்லா பொம்பளையளும் 'லவ்' பண்ணுற ஆக்களையோ கலியாணம் கட்டினம்? ஒருத்தனை 'லவ்' பண்ணி விட்டு, இன்னொருத்தனைக் கலியாணம் கட்டுறதில்லையா? கொஞ்ச காலத்திற்கு கஷ்டமாகத் தான் இருக்கும். ஆனால், பிறகு எல்லாம் மறந்துவிடும். இடைக்கிடை ஒரு சின்ன 'சலசலப்பு' வரும். 'சலசலப்பு' தானே? அது வரட்டும், போகட்டும்."

"எவ்வளவு 'ஈசியாக' ஒரு பெரிய விசயத்தை சின்னதாக்கி விட்டாய்?"

"நான் 'பிரக்டிக்கலாக திங்க்' பண்ணுறன். ஒருத்திக்கு ஒருவன், கற்பு இழந்தவள் சாக வேணும் எண்டு இருந்த மரபெல்லாம் செத்துவிட்டது. இப்ப வாழ்க்கை எண்டால் 'அட்ஜெஸ்ட்மெண்ட்' தான் நிறைய இடத்தைப் பிடிக்குது."

"'நோ' தர்ஷி, நான் அதை ஏற்றுக் கொள்ளமாட்டன். எதுக்கும் கொஞ்சம் யோசிச்சுப் பார்ப்பம்......"

"ஒரு மோட்டுத்தனமான முடிவை எடுக்காதை."

இப்பொழுது சுபோதினியின் முகத்தில் ஒரு தெளிவு மறைந்திருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# (11)

இரவு முழுவதும் கெட்ட கனவு காண்பதும், முழிப்பதுமாக அரைகுறையாகத் தூங்கிய சுபோதினி காலையில் தர்ஷிகா எழுப்பிய போது திடுக்கிட்டு கண் விழித்தாள்.

"அக்கா, ஆறரை மணி. ஒழும்ப இல்லையா?" என தர்ஷிகா கேட்டாள்.

"ஒழும்புவம். ரா முழுதும் நித்திரை இல்லை. ஒரே கெட்ட கனவு." சுபோதினியின் கண்கள் கலங்கின.

தர்ஷிகா கட்டிலில் அமர்ந்தாள். தமக்கையின் முகத்தை வாஞ்சையுடன் நோக்கினாள். அவள் கையைப் பற்றினாள். "அக்கா, ஒழும்பு. எதுக்கும் கவலைப்படாதை...... 'ஓஃபிஸுக்கு' போறதுக்கு 'ரெடி' பண்ணு."

"நான் எந்த முகத்தோட போறது? என்னெண்டு அங்கை வேலை செய்யுற ஆக்களில முழிக்கிறது?"

"அங்கை இருக்கிற ஆக்களுக்கு இதைப் பற்றித் தெரிய வருமா?"

"கட்டாயமாக. இந்த மாதிரி விசயத்துக்கு எல்லாம் கையும், காலும் கெதியில முளைச்சுவிடும்."

"அப்படி எண்டால் 'ஓஃபிஸையே' மறந்திடப் போறியா?"

"போகத் தான் வேணும். ஆனால், இண்டைக்கு இல்லை. சுசிலாவோட கதைச்சுப் போட்டுத் தான் போக வேணும்."

"சுசிலாவா? அது ஆர்?"

"எங்கட 'செக்ஷனில்' வேலை செய்யுறாள். என்னோட கொஞ்சம் 'குளோஸ்'."

"இதைப் பற்றி எல்லாருக்கும் தெரிஞ்சிருந்தால் என்ன செய்வாய்?"

"அதைத் தான் என்னால யோசிக்க ஏலாமல் இருக்குது."

"அக்கா, வாழ்றது எண்டு யோசிச்சிட்டாய். எண்டபடியால ஒண்டையும் யோசியாமல் வேலைக்குப் போ."

"போவன். ஆனால், இண்டைக்கு இல்லை. நாளைக்குப் போகலாம் எண்டு நினைக்கிறன்."

"சரி உன்ர இஷ்டம்."

தர்ஷிகா போய் விட்டாள்.

சுபோதினி கட்டிலில் இருந்து எழவில்லை. படுக்கையில் கிடந்தபடி யோசனையில் மூழ்கி இருந்தாள்.

அலுவலகத்தில் நடந்த ஒவ்வொரு சம்பவமும் அவள் மனதை வலம் வந்தது. கிறிஸ்டி அவளை நெருங்குகிறான். அவள் அவனைத் தள்ளுகிறாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் மண்டை சுவரில் மோதி, சிறியதொரு ஒலியை எழுப்புகிறது. மண்டையை கையினால் தடவி, இரத்தம் வடிந்திருக்கிறதா எனப் பார்க்கிறான். விரல்களில் சிறிது இரத்தம் படிந்திருக்க, அவன் கண்களுக்குள் கோபம் பாய்ந்து விடுகிறது. உறுமியபடியே அவள் மீது பாய்ந்தான்.

கடைசியாக அவள் கீழே விழுந்து விடுகிறாள். அவன் இரு கால்களையும் விரித்தபடி நிற்கிறான்.

"'பிளீஸ்' கிறிஸ்டி, என்னை ஒண்டும் செய்து போடாதேங்கோ" என அவள் கெஞ்சுகிறாள்.

"'நோ! நோ'!" அவன் குரல் அங்கு எதிரொலிக்கிறது.

அப்பொழுது தொலைபேசி மணி அடிக்கிறது.

கிறிஸ்டி அருவருப்புடன் தொலைபேசியை நோக்கினான்.

தொலைபேசி தொடர்ந்தும் அடித்தது.

கிறிஸ்டி ஒரே எட்டில் 'ரிஸீவரை' காலால் ஒரு தட்டு தட்டுகிறான். 'ரிஸீவர்' தொலைபேசியில் இருந்து துள்ளிப் பாய்ந்து கீழே தொங்குகிறது. மணி நின்றுவிடுகிறது.

"'ஹலோ'....... 'ஹலோ'......." என்று 'யாரோ' ஆணின் குரல் துல்லியமாகக் கேட்கிறது.

கிறிஸ்டி 'ரிஸீவரை' ஓங்கி உதைக்கிறான். அது துள்ளிப் போய் மேசைமீது 'டொக்' கென்று விழுகிறது.

இந்த நேர இடைவெளிக்குள் சுபோதினி கீழே இருந்து எழ முற்படுகிறாள்.

கிறிஸ்டி அவள் மீது ஆக்ரோஷத்துடன் பாய, அவள் மீண்டும் கீழே விழுந்து விடுகிறாள்.

அவள் கெஞ்சலுக்கு அர்த்தம் இல்லாமல் போய் விடுகிறது.

ஒவ்வொரு சம்பவத்தையும் நுனித்தாய்ந்த போது, கிறிஸ்டியின் அந்த கொடூரச் செயலுக்கு என்ன காரணம் என்று அறிவதற்கு அவள் முற்பட்டாள்.

அவன் பஞ்சமா பாதகமான செயலைச் செய்திருந்தாலும், அவன் அவ்வாறு நடப்பதற்கு எது தூண்டுகோலாக அமைந்தது?

அவளின் அழகா? அல்லது அவள் மீது அவனுக்குள் மறைந்திருந்த ஆசையா? அல்லது அவளைத் தீண்டி விட வேண்டும் என்ற வெறியா?

அவள் இதைப் பற்றி சிந்தித்தாள். அவன் வாழ்க்கையில் மனைவியின் அன்பினை இழந்தவன். அவள் மூலம் கிடைக்க வேண்டிய சந்தோஷத்தில் இருந்து தூர நிற்கின்றான். தனது அடிப்படை உணர்வுகளின் பசியினை அடக்குவதற்கு அல்லல்படுபவன். தனது சிற்றின்பத்திற்காக அங்க சேஷ்டைகளில் ஈடுபடுபவன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படியான ஒருவனாகச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, தனது உள்ளத்துக்குள் மறைந்திருந்த உணர்ச்சிகளுக்கு தீனி போடுகிறானா? சந்தர்ப்பம் சாதகமாக வந்தாலும் இம் மாதிரியான கொடூரச் செயலைச் செய்ய எவ்வாறு துணிந்தான்? உணர்ச்சி வெள்ளம் அவன் புத்தியை மழுங்கச் செய்திருக்கலாம். சுய உணர்வற்ற நிலையில், வெறித்தனமாகச் செயற்பட்டிருக்கலாம். ஒரு சில கணங்களுக்குள் மிருகமானவன், அதன் பின் தன் நிலையை உணரும் நிலைக்கு வந்துவிட்டான். அதன் பின் அவளுக்கு வாழ்வு தரத் தயார் என்று சொல்லி இருக்கிறான்.

அவன் செயலில் மிருகத்தனமும் இருக்கிறது. மனிதத் தன்மையும் இருக்கிறது. முன்னையதில் வெறி. பின்னையதில் விருப்பம்.

அப்படியெனில் பிரதீப்பின் பதில் எதிர்மறையானதாக விளங்கினால் கிறிஸ்டியை நாடுவதா? கிறிஸ்டியை அவள் விரும்பவில்லை. அவனை அவள் காதலிக்கவில்லை. பிரதீப்பைத் தான் அவள் காதலித்தாள். காதலித்தவன் கையேற்க மறுத்தால் கயவனை நாடலாமா?

கட்டிலில் கிடந்தபடியே சிந்தனையை உருவாக்கியும், அழித்தும் நேரத்தைக் கடத்தினாள். அவளால் கட்டிலில் இருந்து உசும்பவே மனமில்லை. வேதனை தொண்டையை அழுத்தியது. தனது வாழ்வு இவ்வளவு சீக்கிரத்திலேயே பாதாளத்தை அடைந்துவிட்டதே என்று எண்ணிய போதெல்லாம் அவள் கண்கள் கலங்கின. சே! எனப் பல தடவைகள் சூழ்கொட்டினாள்.

மங்களேஸ்வரி வந்தாள். "சுபோ, இண்டைக்கு 'ஓஃபிஸுக்கு' போக இல்லையா?"

"இல்லை அம்மா."

"ஏன்?"

"சுகமில்லை."

மகளை தாய் ஒரு முறை கண்களால் வலம் வந்தாள். "சுகமில்லையா? இல்லாட்டி.........."

உடனேயே பாய்ந்து அவளைக் கட்டி அணைத்து, 'அம்மா என்னை ஒருத்தன் கெடுத்து விட்டானே' என்று கதறி அழவேண்டும் என்ற ஓர் உத்வேகம் அவளுள் உருவகிக்கின்றது. ஆனால், தன் உணர்ச்சிகளைக் கொட்டித் தீர்த்து, தனது அடுத்த நடவடிக்கையைக் குழப்ப அவள் விரும்பவில்லை.

"சுகமில்லை தான்" என்று தாயின் கேள்விக்கு அழுத்தம் திருத்தமாகப் பதில் அளித்தாள்.

தாய் ஒரு சந்தேகப் பார்வையுடன் அங்கிருந்து அகன்றாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்பது மணியாகிய போது சுசிலாவுடன் சுபோதினி தொடர்பு கொண்டாள்.

"உமக்கு நடந்ததைப் பற்றி நான் கேள்விப்பட்டன். 'ஐ ஃபீல் சொரி ஃபோர் யூ' ....." என்று சுசிலா வருத்தம் தெரிவித்தாள்.

"சுசி.... நான் நாளைக்கு 'ஓஃபிஸுக்கு' வரலாமா?" என சுபோதினி இழுக்க, "நீர் பயப்படாமல் வாரும்" என சுசிலா தெம்பூட்டினாள்.

"இது பற்றி 'ஓஃபிஸிலை' இருக்கிற எல்லாருக்கும் தெரியுமா?"

"ஓமோம்...... நீர் கிறிஸ்டியோட போராடக்கிள்ளை நிர்மலன் 'டெலிபோன்' செய்திருக்கிறார். அதுக்கு பிறகு கேட்ட சத்தத்தைக் கொண்டு உமக்கு ஏதோ ஆபத்து ஏற்படுது எண்டு அறிஞ்சு உடன இஞ்ச வந்திருக்கிறார். ஆனால், அந்த நேரம் ஒருத்தரும் இஞ்ச இல்லாததால அவர் வீட்டை போயிட்டாராம். இண்டைக்கு வந்து கந்தசாமியை வெருட்டி இருக்கிறார். அவன் எல்லாத்தையும் கக்கிப் போட்டான்."

சுசிலாவுடன் தொலைபேசி தொடர்பை முறித்த சுபோதினி ஒரு முடிவுக்கு வந்தாள்.

## (12)

**மா**லையாகியது.

'மோட்டார் சைக்கிளின்' 'பட,பட' சத்தம் கேட்கிறது. பிரதீப் வந்திருக்கிறான் என்று சுபோதினிக்குப் புரிந்தது.

அறையில் கட்டிலில் சாய்ந்து கிடந்தவளின் இதயம் ஒரு முறை துள்ளியது. பின் அது 'பட,பட'க்கத் தொடங்கியது. அவனை நேருக்கு நேர் சந்திக்க வேண்டிய ஒரு கட்டம் வந்துவிட்டதே என எண்ணும் போது கைவிரல்கள் நடுங்கின. 'கடவுளே, கடவுளே' என மனதாரப் பிரார்த்தனை செய்தாள்.

அறையில் இருந்து வெளியே வரத் தயங்கினாள்.

'மோட்டார் சைக்கிள்' ஒலி அடங்கியது.

"வாங்க...... வாங்க......" என்று மங்களேஸ்வரி வரவேற்பது கேட்டது.

பிரதீப் விறாந்தையில் இருந்த நாற்காலியில் அமர்ந்திருக்க வேண்டும்.

"சுபோ......" என மங்களேஸ்வரி குரல் கொடுத்தாள்.

சுபோதினி அசையவில்லை.

"சுபோ......." தாய் மீண்டும் குரல் கொடுத்தாள்.

அவனை மேலும் காக்க வைக்க அவள் விரும்பவில்லை. அவள் கட்டிலில் இருந்து எழுந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சுபோவுக்கு சுகமில்லை. நீங்களே உள்ளை போய் பாருங்க" என்று தாய் கூறுவது சுபோதினிக்குக் கேட்க, அவள் உடனடியாகக் கட்டிலில் சரிந்து விடுகிறாள். கண்களை 'டக்'கென்று மூடியும் விடுகிறாள்.

பிரதீப் அறையினுள் வந்துவிடுகிறான். "சுபோ......" என்ற பிரதீப், தயக்கத்துடன் அவளை நெருங்கினான்.

சுபோதினி கண்களைத் திறந்தாள். பிரதீப் புன்னகைத்தான். பதிலுக்கு அவளும் புன்னகைத்தாள். ஆனால், அப் புன்னகையில் மலர்ச்சி அறவே இல்லை.

"சுபோ, உமக்கு என்ன? காய்ச்சலா?" என கரிசனையுடன் கேட்ட பிரதீப் கட்டிலில் அமர்ந்து, அவள் நெற்றியில் கை வைத்துப் பார்த்தான். "இல்லையே, சுட இல்லையே" என்றான்.

"காய்ச்சல் இல்லை. ஆனால், உடம்பெல்லாம் ஒரே நோவாக இருக்குது" என்கிறாள் அவள்.

"ஓ....... அப்படியோ?" என்று கேட்டுச் சிரித்த அவன், "உம்மட 'ஓஃபிஸுக்குப் போன்' பண்ணினன். நீர் வர இல்லை எண்டு சொன்னாங்கள். அது தான் வந்தன்" என்றவன் அவள் கையைப் பற்றினான்.

சுபோதினிக்கு என்ன பேசுவது என்று தெரியவில்லை. பேசாமல் அவனையே வெறிச்சுப் பார்த்தபடி இருந்தாள். ஆனால், அவள் உள்மனதினுள் போராட்டம் ஒன்று உருவாகிக் கொண்டிருந்தது. முதல் நாள் அலுவலகத்தில் நடந்த கொடூரச் செயலை அவனிடம் அன்றே சொல்வதா, இல்லையா என அவள் மனம் தர்க்கப்பட்டது. அந் நேரத்தில் அதை அவனிடம் சொல்வதற்கு ஏற்ற பக்குவத்தை அவளால் வரவழைக்க முடியவில்லை. சந்தர்ப்பம் சரிவர அமையும் போது சொல்லி, அவன் முடிவைக் கேட்போம் என்ற தீர்மானத்திற்கு வந்தாள்.

அதன் பின் சிறிது நேரம் அவளிடம் பேசிவிட்டு அவன் போய் விட்டான்.

'டியூஷன்' முடிந்து வந்த தர்ஷிகா அறைக்கு வந்து பிரதீப்பின் வரவைப் பற்றி தமக்கையுடன் அளவளாவினாள். "உனக்கு நடந்ததை அவரிட்டை சொன்னியா?" என தர்ஷிகா கேட்டாள்.

"இல்லை" என்றாள் சுபோதினி.

"ஏன்?"

"எனக்குப் பயமாக இருக்குது."

"பயப்படாமல் சொல்லு. ஒண்டில் அவர் உன்னை மன்னிப்பார். இல்லாட்டி உன்னை வேண்டாம் எண்டு சொல்லுவார். ஏதாவது ஒரு முடிவை உடனடியாக எடுத்தால் அடுத்த காயை அதற்கு ஏற்ற மாதிரி நகர்த்தலாம்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நாளைக்குப் பின்னேரம் அவரை சந்திச்சு ஒரு முடிவைக் கேட்கிறேனே."

இருட்டும் போது சுபோதினியைத் தேடி நிர்மலன் வீடு வந்தான்.

அவனை விறாந்தையில் வைத்து சுபோதினி வரவேற்று, அங்கு அமர வைக்கிறாள்.

"ஏன் இண்டைக்கு 'ஓஃபிஸுக்கு' வர இல்லை" என அவன் கேட்க, அவள் பதில் கூறாமல் நின்றாள்.

"எனக்கு உண்மையான காரணம் தெரியும்" என்று நிர்மலன் கூற, சுபோதினி தலை குனிகிறாள்.

"சுபோ, நீர் கிறிஸ்டியோட போராட்டம் நடத்தக்கிள்ளை 'டெலிபோன்' பண்ணினன். ஆனால், 'ரிஸீவர்' எடுக்கப்பட்டு, கீழே வைக்கப்பட்டு விட்டது. அதுக்குப் பிறகு நீர் போட்ட கூச்சல் எல்லாம் எனக்கு கேட்டுது. உடன நான் 'ஓஃபிஸுக்கு' வந்தன். ஆனால், ஒருத்தரும் இல்லாததால வீட்டை போயிட்டன். இண்டைக்கு காலமை கந்தசாமியை வெருட்ட, அவன் எல்லா உண்மையையும் கக்கி விட்டான்."

சுசிலா ஏற்கனவே கூறியிருந்ததை நிர்மலன் ஒப்புவித்தான்.

அவனே தொடர்ந்தும் பேசினான். "கிறிஸ்டி இண்டைக்கு வர இல்லை. அவன் 'ஓஃபிஸுக்கு' குடுத்திருக்கிற 'அட்ரஸை' எடுத்துக் கொண்டு அவன்ர அறைக்குப் போனன். ஆனால், அவன் ஒரு வருசத்திற்கு முந்தியே அந்த அறையை விட்டுப் போயிட்டதாக சொன்னாங்கள்."

"கிறிஸ்டி இப்படி நடப்பார் எண்டு நான் துளியளவும் நினைக்க இல்லை. எத்தனை தரம் கெஞ்சி இருப்பன்......" என்றவளின் கண்கள் கலங்கின.

"அழாதையும். இதுக்கு நான் பரிகாரம் காண்றன்....... நாளைக்கு 'ஓஃபிஸுக்கு' வாரும். இதைப் பற்றி கதைப்பம்."

"என்னத்தை இனியும் கதைக்க இருக்குது? கிறிஸ்டிக்கு இப்படியான கெட்ட எண்ணம் மனதில இருக்குது எண்டு தெரிஞ்சிருந்தால் இப்படியான ஒரு நிலை ஏற்படுவதை தவிர்த்திருப்பன்."

"நடக்கக்கூடாதது நடந்து போச்சுது. இனி நடக்க வேண்டியதைப் பார்ப்பம்."

சுபோதினி ஒன்றும் கூறவில்லை.

மங்களேஸ்வரி எட்டிப் பார்க்க, அவளை நிர்மலனுக்கு அறிமுகப்படுத்தினாள் சுபோதினி.

"சுபோ உங்களைப் பற்றிச் சொல்லி இருக்கிறாள்" என்றபடி அங்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமர்ந்த மங்களேஸ்வரி, பல விடயங்கள் குறித்து நிர்மலனுடன் பேசினாள். வேலாயுதமும் அவர்கள் சம்பாஷணையில் ஈடுபட்டார். தர்ஷிகா தேநீர் நீட்டி விட்டு, அவர்களது சம்பாஷணையில் ஈடுபட்டாள். சுரேஷும் வந்து ஓரிரு வார்த்தைகளைப் பரிமாறிவிட்டுச் சென்றான்.

அவர்கள் யாவரிடமும் நிர்மலன் விடை பெற்று தனது 'கார்' வரை செல்லும் போது, சுபோதினி அவனுடன் கூடவே சென்றாள்.

"'சேர்', இந்த விசயம் 'ஓஃபிஸில' இருக்கிற எல்லாருக்கும் தெரியுமா?" என சுபோதினி கேட்க, "ஓ...... எல்லாருக்கும் தெரியும். எல்லாரும் உமக்காகப் பரிதாபப்படுகினம். கிறிஸ்டியைக் கொல்ல வேணும் எண்ட வெறியோட ஒருத்தர், ரண்டு பேர் இருக்கினம். சுசிலா நாள் முழுவதும் கத்திக் கொண்டிருந்தா" என்றான் நிர்மலன்.

"நான் நாளைக்கு 'ஓஃபிஸுக்கு' வந்தால்.......?"

"வெட்கப் படாமல் வாரும். நடக்கக்கூடாத ஒண்டு நடந்து விட்டுது. ஆனால், அதுக்காக கோழை மாதிரி வீட்டிலேயே அடைஞ்சு கிடக்கப் போறீரா? நீர் வாரும். நான் இருக்க மட்டும் ஒண்டுக்கும் பயப்படாதையும். உமக்கு இப்படி நடந்து விட்டுதே எண்டு இண்டைக்கு முழுவதும் நினைக்க எனக்கு ஒரே துக்கம். என்ன ஒரு அமைதியான குடும்பத்தில பிறந்த உம்மட வாழ்க்கையில ஒரு சூறாவளி வீசி விட்டுது. தென்றல் வீசுற மாதிரி நான் நடவடிக்கை எடுக்கிறனே."

"என்ன மாதிரி?"

"நாளைக்கு 'ஓஃபிஸுக்கு' வருவீர் தானே? அங்கை வைச்சு சொல்லுறன்."

நிர்மலன் போய்விட்டான்.

அவன் வார்த்தைகள் ஒரு வகையில் புதிராக விளங்கிய போதும், மற்றொரு வகையில் ஆறுதலாகவும், புண்பட்ட இதயத்திற்கு ஒத்தடமாகவும் விளங்கின.

அன்றிரவு சுபோதினியினால் அமைதியாகத் தூங்க முடிந்தது. அவள் மனதில் தெளிவு நிரம்பி இருந்தது.

**கா**லையில் வழமை போல் அலுவலகத்திற்குச் சென்றாள்.

பலரும் அவளைப் பரிதாபத்துடன் பார்த்தனர். சிலர் அவளிடம் வந்து பரிதாபத்தை வார்த்தைகளில் வெளியிட்டனர்.

சுசிலா தாறுமாறான வார்த்தைகளை உபயோகித்து கிறிஸ்டியை திட்டினாள். "அந்த மடையன் இஞ்ச வந்தால் அவனை உதைச்சே சாவடிப்பன்" என்று அவள் கத்தினாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்து மணி போல் நிர்மலன் வந்து, சுபோதினியை அழைத்துக் கொண்டு தனது அறைக்குப் போனான்.

"சுபோ, இரும். உமக்கு ஒரு அதிர்ச்சி தாற செய்தியைச் சொல்லப் போறன்" என்று கூற, "என்ன செய்தி 'சேர்'" என சுபோதினி 'பதை, பதைப்புடன்' கேட்கிறாள்.

"இப்பத் தான் 'டெலிபோன் கோல்' வந்தது. நேத்தைக்கு இரவு கிறிஸ்டி தற்கொலை செய்திட்டானாம். அளவுக்கு அதிகமான நித்திரைக் குளுசை போட்டு செத்திட்டானாம்."

அந்தச் செய்தி உண்மையிலேயே அவளுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தி விட்டது. "'சேர்'........" என்றவளால் மேலும் பேச முடியவில்லை.

"உண்மைதான். உமக்கு துரோகம் செய்ததை அவனால தாங்க ஏலாமல் போயிட்டுதாக்கும்."

"அதற்குத் தற்கொலை செய்யுறதா?"

"அவன்ரை மனம் மென்மையானது. உணர்ச்சிகளுக்கு கெதியிலேயே ஆளாகி விடுவான். நான் இதை எத்தனையோ தரம் கண்டிருக்கிறன். அவனை ஒருக்கால் வாய்க்கு வந்தபடி நான் ஏச, 'பாத்ரூமுக்கு' போய் அரை மணித்தியாலம் அழுதிருக்கிறான். அதால தான் அவனால கலியாண வாழ்க்கையைக்கூட சரிவர நடத்த முடிய இல்லை."

சுபோதினி ஒன்றும் கூறவில்லை.

"அவன் இண்டைக்கு வந்திருந்தால், அவனைக் கொண்டே உமக்கு பரிகாரம் காணலாம் எண்டு நினைச்சன். அவன் இப்படிச் செய்திட்டானே."

"பரிகாரமா? என்ன சொல்லுறீங்க?"

"அவன் உமக்குச் செய்த துரோகத்திற்கு உம்மைக் கலியாணம் கட்டும்படி வற்புறுத்த இருந்தன்."

"அவன் ஓமெண்டாலும் நான் அதை விரும்ப மாட்டன்."

"ஏன்?"

"நான் அவனை விரும்ப இல்லை."

"ஆனால், அவன் உம்மைக் கெடுத்து விட்டான். அவன் உமக்கு வாழ்க்கை தர வேணும்."

"அவன் என்னைக் கெடுத்ததுக்கு அவனுக்குத் தண்டனை குடுக்க வேணுமே தவிர, அவனை நான் கலியாணம் கட்டுறது தர்மமாகாது."

சுபோதினி கூறியதைக் கேட்டு நிர்மலனின் புருவங்கள் வில்லாக வளைந்து நிமிர்ந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# (13)

மதியம் சாப்பாட்டுக்கு யாவரும் வெளியே போய் விட்டார்கள். சுபோதினி மட்டும் சாப்பிடப் போகவில்லை.

சுசிலா வருந்தி அழைத்தும், மறுத்துவிட்டாள்.

அலுவலகம் 'வெறிச்' சென்றிருந்தது. நிர்மலனும் தனது அறையில் இருக்கவில்லை.

சுபோதினி அவன் அறைக்குள் சென்றாள். தொலைபேசி மூலம் பிரதீப்புடன் தொடர்பு கொண்டாள்.

"'ஹலோ' சுபோ...... நானே உமக்கு 'போன்' பண்ண வேணும் எண்டு இருந்தன். நீரே 'போன்' பண்ணிவிட்டீர். எப்படி சுகமா?" என பிரதீப் உற்சாகத்துடன் கேட்டான்.

"ஓ 'யெஸ்'......இப்ப சுகம்" என்றாள் சுபோதினி.

"என்ன விசயமாக 'போன்' பண்ணினீர்?"

"'ஈவினிங் கோல்பேஸில மீட்' பண்ணுவமா?"

"அதுக்கென்ன? நேத்தைக்கு உங்கட வீட்டுக்கு வந்ததைப் பற்றி உம்மட 'பேரன்ட்ஸ்' என்ன சொல்லிச்சினம்?"

"பெரிசா ஒண்டும் சொல்ல இல்லை."

சிறிது நேரம் அவனுடன் அளவளாவிவிட்டு 'ரிஸீவரை' வைக்க, நிர்மலன் அறைக்குள் வந்து விடுகிறான். இதை சுபோதினி எதிர்பார்க்கவில்லை. துணுக்குற்று விடுகிறாள்.

"'கோல்' எடுத்தீரா? 'நோ புரப்ளம்'. உமக்குத் தேவையான நேரம் வந்து எடும். 'ஐ ஹாவ் நோ ஒப்ஜெக்ஷன்" என்று கூறிவிட்டு, தனது ஆசனத்தில் அமர்கிறான் நிர்மலன்.

சரி என்று தலையாட்டி விட்டு, அவள் அங்கிருந்து அகல முற்பட, "'வெயிட்' சுபோ, உம்மோட ஒரு முக்கிய விசயம் பேச வேணும். 'சிட்டவுன்'" என்று நாற்காலியைக் காட்டினான் நிர்மலன்.

சுபோதினி அமர்ந்தாள்.

"நேத்தைக்கு உம்மட வீட்டுக்கு வந்தன். உம்மட அப்பா, அம்மா, தங்கச்சி, தம்பி எல்லாரையும் கண்ட பிறகு, எனக்கு ஒரு சின்ன ஏக்கம் வந்திட்டுது. என்ன ஏக்கம் எண்டு தெரியுமா? இப்படியான ஒரு குடும்பத்தில ஒரு பொம்பிளை எடுக்க வேணும்."

நிர்மலன் கூறியதைக் கேட்டு, சுபோதினிக்கு 'திக்'கென்றிருந்தது.

"உண்மையைச் சொன்னால் என்ன, உம்மை 'இன்டர்வியு' செய்த அண்டைக்கு கண்ட உடனேயே எனக்கு உம்மில ஒரு அன்பு பிறந்திட்டுது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறொரு 'கேர்ளை' 'எம்.டி செலக்ட்' பண்ண இருந்த போதும், நான் தான் உம்மை 'செலக்ட்' பண்ணினால் நல்லது எண்டு சொல்லி 'செலக்ட்' பண்ணிவிட்டன்."

நிர்மலன் பேசுவதை நிறுத்தினான். சுபோதினியை ஆழமாக நோக்கினான்.

"நீர் இஞ்ச வந்தாப் பிறகு உம்மில, இருந்த அன்பு கூடிச்சுது. உம்மட ஒவ்வொரு நடவடிக்கையையும் கூர்ந்து கவனிச்சன். நீர் ஒவ்வொரு விசயத்தையும் நளினமாக, வடிவாக, நேர்த்தியாக செய்யுறதைப் பார்த்தாப் போல எனக்கு உம்மில ஒரு 'லவ்வே' வந்திட்டுது. சந்தர்ப்பம் வரக்கிள்ளை இதைப் பற்றி சொல்லுவம் எண்டு இருந்தன். ஆனால், சந்தர்ப்பம் வர முந்தி நடக்கக் கூடாதது நடந்திட்டுது. எண்டாலும்.........." என்றவன் மீண்டும் பேசுவதை நிறுத்தினான்.

நிர்மலன் வெளியிட்ட தகவல் சுபோதினியை ஆச்சரியத்துக்குள் தள்ளி விடவில்லை. அவனது ஒவ்வொரு செயலையும் அவதானித்து வந்தவள், அவன் இப்படியானதொரு எண்ணத்துடன் இருப்பான் என்று எண்ணியிருந்தாள். அதற்கு ஏற்றாப் போல அவன் கதைக்கவே, அவளுக்கு அது அதிசயமாக விளங்கவில்லை.

"சுபோ, கிறிஸ்டி உமக்கு கெடுதல் செய்திட்டான். அது எனக்குத் தெரியும். அது நடக்கிறதுக்கு நானும் ஒரு காரணமாக இருந்திட்டன். என்ர வேலையை நீர் செய்யப் போய்த்தான் உமக்கு இப்படி ஒரு கதி ஏற்பட்டுவிட்டது. அண்டைக்கு வழமை போல வீட்டுக்குப் போய் இருந்தால் இண்டைக்கும் நீர் சுத்தமாகத் தான் இருப்பீர்.........எண்டபடியால நான் உமக்கு வாழ்வு தர வேண்டும் எண்டு நினைக்கிறன். நீர் சரி எண்டால் நான் உம்மைக் கைப்பிடிக்கத் தயார்."

இப்படி நிர்மலன் கூறியதும் சுபோதினியின் மனம் அவனுக்காக நெகிழ்ந்தது. உண்மையான அன்புக்கு அவன் எவ்வளவு ஆழம் கற்பிக்கிறான் என்று எண்ணியபோது, அவள் விழுமிய உணர்ச்சியின் உச்சக் கட்டத்தை அடைந்தாள். அவளது கைகளின் ரோமங்கள் சில்லிட்டு நின்றன.

"இதைப் பற்றி என்ன சொல்லுறீர்?"

சுபோதினி தன் நிலையை விளக்குவதற்கான வார்த்தைகளைத் தேடினாள்.

"சொல்லும் சுபோ."

"நான் ஒருத்தரை 'லவ்' பண்ணுறன்."

"ஓ....." என்று கூறிய நிர்மலன், அவளை நம்ப முடியாதவன் போலப் பார்த்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உண்மை தான் 'சேர்'. பிரதீப் எண்டு ஒருத்தரை 'லவ்' பண்ணுறன். 'பேரண்ட்ஸ்' எங்கட கலியாணத்துக்கு 'ஓம்' எண்டு சொன்னாப் பிறகு தான் இந்தச் சம்பவம் நடந்திருக்குது" என்ற சுபோதினிக்கு வேதனை தொண்டையை அடைத்தது. அவளால் மேலும் வேதனையைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. குலுங்கிக் குலுங்கி அழுதாள்.

"அழாதையும்....... அழாதையும்."

"கடவுள் இவ்வளவு கெட்டவராக இருக்கிறாரே! என்னை ஏன் இந்தக் கதிக்கு உள்ளாக்கி இருக்கிறார்? நான் என்ன பாவம் செய்தன்?" அழுகைக்கிடையே சுபோதினி வெடித்தாள்.

"அது தான் விதி" என்று நிர்மலன் பொதுப்படையாகச் சொன்னான்.

"விதி?" சுபோதினி விரக்தியாகப் புன்னகைத்தாள்.

"சுபோ, நடந்த எல்லாத்தையும் பிரதீப்பிட்டை சொல்லப் போறீரா?"

"ஓமோம். சொல்லப் போறன். அவரைத் தான் நான் கலியாணம் கட்டப் போறன். அவரிட்டை உண்மையை மறைக்க விரும்ப இல்லை."

"எல்லாத்தையும் கேட்டு விட்டு அவர் உம்மைக் கலியாணம் கட்ட ஏலாது எண்டு சொன்னால்......?"

"அவருக்கு என்னில உண்மையான அன்பு இருந்தால் அப்படிச் செய்ய மாட்டார்."

"தற்செயலாக அவர் உம்மை ஏற்றுக் கொள்ள மறுத்தால்.......?"

"தற்கொலை செய்ய மாட்டன். வாழுவன்."

"தனியாகவா?"

"அதைப் பற்றி நான் இன்னும் முடிவு எடுக்க இல்லை. இப்ப ஒரு முடிவும் எடுக்க நான் விரும்ப இல்லை."

"பிரதீப் உம்மை ஏற்றுக் கொள்ள ஏலாது எண்டால் என்னைக் கலியாணம் கட்ட உமக்கு விருப்பமா?"

"உங்களை.......? 'சேர்' நீங்க என்ன சொல்லுறீங்க......?"

"நான் உம்மை விரும்புறன். உம்மைக் கலியாணம் கட்ட விரும்புறன்."

"எனக்கு நடந்தது தெரிஞ்சுமா?"

"தெரிஞ்சும் நான் விரும்புறன். என்ர உண்மையான அன்புக்குள்ளை உமக்கு நடந்தது ஒரு சின்ன விஷயம் போல எனக்குத் தெரியுது. நீர் கெடுக்கப்பட்டிருக்கிறீர். நீராகக் கெடவில்லை."

"'சேர்', நீங்க என்னை விரும்புறீங்க. 'லவ்' பண்ணுறீங்க. நான் உங்களை விரும்புறன். ஆனால் 'லவ்' பண்ண இல்லை. அப்படி இருக்கக்கிள்ளை எப்படி உங்களை கலியாணம் கட்டுறது?"

"சரி ஒத்துக் கொள்றன். நீர் பிரதீப்பை 'லவ்' பண்ணுறீர். அவரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உம்மை 'லவ்' பண்ணுறார். முதல்ல ஆர் ஆரை லவ் பண்ணினது?"

"அவர் தான் என்னை 'லவ்' பண்ணினார்."

"பிறகு நீர் அவரை 'லவ்' பண்ணினீர். அப்படித்தானே?"

"அப்படித்தான்."

"அது மாதிரி நான் இப்ப உம்மை 'லவ்' பண்ணுறன். நீர் இனி என்னை 'லவ்' பண்ணலாம் தானே?"

"பிரதீப்பை நான் உள்ளூர 'லவ்' பண்ணினனான். ஆனால், நீங்கள் என்னை 'லவ்' பண்ணினாலும், நான் உங்களை 'லவ்' பண்ண வேணுமே!"

இதைக் கேட்டதும் நிர்மலனுக்கு வாயடைத்து விட்டது.

## (14)

காலிமுகத் திடலின் சீமெந்து வாங்கில் ஒன்றில் பிரதீப்பும், சுபோதினியும் நெருங்கி அமர்ந்திருக்கிறார்கள்.

சூரியன் கடலுக்குள் இறங்கி விட்டது. இருள் தயார் நிலையில் விளங்கியது. குளிர்காற்று வெப்பத்தைத் துரத்தி விட்டது.

பிரதீப்பின் கை சுபோதினியின் கையுடன் சேர்ந்திருந்தது.

சுபோதினி ஓரிரு வார்த்தைகளை வெளியிட்டு, அவனுடன் தனது சம்பாஷணையை வளர்த்தாள்.

திடீரென பிரதீப் அவளின் நாடியில் கையை வைத்து, அவள் முகத்தை நிமிர்த்தினான்.

"சுபோ, நானும் வந்த நேரம் துடக்கம் பார்க்கிறன். நீர் ஒரே 'மூடி' யாக இருக்கிறீர். ஏதோ சொல்லிப் போட்டு வந்து, ஒண்டுமே சொல்லாமல் இருக்கிறீர்."

"அதை எப்பிடி சொல்றது எண்டு தெரியாமல் தடு மாறுறன்."

"நான் தானே? சொல்லுமன். எங்கடை கலியாணத்தைப் பற்றியா கதைக்கப் போறீர்?"

"கலியாணத்தைப் பற்றித்தான். அது நடக்குமா, இல்லையா எண்ட ஒரு நிலைக்கு வந்திட்டன்."

"நடக்குமா......? நீர் என்ன சொல்லுறீர்?"

"பிரதீப், நான் சொல்லப் போறதைக் கேட்கிற மனோபலம் உங்களிட்டை இருக்குதா தெரிய இல்லை."

"சொல்லுறதைச் சொல்லும். என்ர மனோபலத்தில எனக்கு நம்பிக்கை இருக்குது."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நேரடியாகவே சொல்லுறன். என்னை ஒருத்தன் கற்பழிச்சுப் போட்டான்."

இதைக் கேட்டதும் பிரதீப் வாய்விட்டுச் சிரித்தான். "சுபோ, 'ஜோக்' அடிக்கிறீரா?" அவன் சிரிப்பைத் தொடர்கிறான்.

"'நோ' பிரதீப். நான் உண்மையைத் தான் சொல்லுறன். இது சத்தியம்." சுபோதினி இப்படிக் கூறியவுடன் பிரதீப்பிடம் இருந்து சிரிப்பு விலகுகிறது. அவன் முகம் விகாரமடைகிறது. "நீர் உண்மையைத் தானே சொல்லுறீர்?"

"ஓமோம்."

"'நோ! ஐ வோண்ட் பிலீவ் இற்'...... நீர் பொய் சொல்லுறீர்?"

"இல்லை பிரதீப்..... சத்தியமாகத் தான் சொல்லுறன்."

"ஆர் உ..... உம்மைக் கற்பழிச்சது?"

சுபோதினி நடந்தவற்றைச் சுருக்கமாக விபரித்தாள்.

"ஓ! ஜீசஸ்......" என்ற பிரதீப் தலையில் கை வைத்தான். "உயிரை விட மேலான கற்பை இழந்திட்டீரே!" என்ற பிரதீப் தலையைத் தொங்கப் போட்டான்.

"இனி என்ன செய்யுறது எண்டே தெரிய இல்லை. நடந்ததை ஒண்டும் விடாமல் உங்களிட்டை சொல்லிப்போட்டன். நீங்கதான் ஒரு முடிவு சொல்ல வேணும்."

"என்ன முடிவு?"

"என்னைக் கலியாணம் கட்டுற முடிவு."

"அதைப் பற்றி நான் யோசிக்க வேணும்."

"யோசிக்கப் போறீங்களா?"

"'யெஸ்'..... உமக்கு நடந்ததைப் பற்றி உம்மட 'ஓஃபிஸில' இருக்கிற எல்லாருக்கும் தெரியும். நாளைக்கு நான் உம்மை கலியாணம் முடிச்சால் அவையள் என்னைப் பகிடி பண்ணுவினம் தானே? எண்டபடியாலை எல்லாத்தையும் யோசிச்சுப் பார்த்துத்தான் நான் ஒரு முடிவை சொல்லலாம். ஒரு கொஞ்சம் அவகாசம் தாரும்."

பிரதீப்பின் விளக்கத்தைக் கேட்டு சுபோதினியின் மனதினில் புதைந்திருந்த கொஞ்ச நஞ்ச நம்பிக்கையும் கரைந்து விட்டது. முடிவு சொல்வதாகக் காலக்கெடு கேட்டு ஏதாவது சாக்குப்போக்குக் கூறித் தன்னைக் கைவிடப் போகிறான் என்பதை சுபோதினி புரிந்தாள்.

சுபோதினி மேலும் எதையும் யோசிக்கவில்லை. 'பட்'டென்று எழுந்தாள்.

"போகப் போறீரா?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஓமோம். நீங்களும் மற்ற ஆம்பிளையள் மாதிரித்தான் நடக்கிறீங்க. நீங்கள் யோசிச்சு ஒரு முடிவை எடுக்கிறதாகச் சொன்னாலும், அது எந்த மாதிரியான முடிவாக இருக்கும் எண்டு என்னால 'கெஸ்' பண்ண ஏலும்" என்று சுபோதினி வெறுப்புடன் வார்த்தைகளை வெளியிட்டபடி அங்கிருந்து அகன்றாள்.

"சுபோ, சுபோ" என்றபடி சிறிது தூரம் வந்த பிரதீப், நின்று விட்டான்.

**வீ**ட்டை அடைந்த சுபோதினியின் மனம் கனத்திருந்தது. பிரதீப் ஒரு மண் குதிரை என்ற எண்ணம் அவளுள் இறுகிவிட்டது. அவன் தனக்கு இழைக்கப்பட்ட கொடூரத்தை மன்னித்து வாழ்வு கொடுப்பான் என்ற நம்பிக்கை அவளிடமிருந்து அறவே அகன்று விட்டது.

"அக்கா, பிரதீப்போட உன்ர விஷயத்தைப் பற்றி கதைச்சியா?" என்று தர்ஷிகா 'கேட்' டடியில் வைத்து கேட்டாள்.

"கதைச்சன், ஆனால், அதால ஒரு பிரயோசனமும் இல்லை. ஒரு முதுகெலும்பு இல்லாத ஆம்பிளையைத் தான் 'லவ்' பண்ணி இருக்கிறன்."

"அப்படி எண்டால் உனக்கு விமோசனம் இல்லை."

"சாகமட்டும் அழுந்த வேணும் போல....."

"இதைப் பற்றி அப்பா, அம்மாவுக்கு சொன்னால் என்ன?"

"இப்போதைக்கு வேண்டாம் எண்டு நினைக்கிறன். பிரதீப் என்னை ஏற்றுக் கொள்ள ஏலாது எண்டு சொன்னாலும், அவையளுக்கு அதை மறைக்கத் தான் விரும்புறன். என்னில நம்பிக்கை வைச்சிருக்கினம்."

"ஆனால், இந்த மாதிரி விசயம் எல்லாம் அவையளின்ர காதுக்கு எட்டிவிடும். நீ உண்மையை ஒரு கொஞ்ச நாளைக்குத் தான் ஒளிக்கலாம்."

"உண்மை தான்."

"வேறை ஆரும் சொல்லுறதை விட நீயே சொன்னால் அவையளுக்கு அதிர்ச்சியாக இருக்காது."

"அவையளுக்கு சொல்லக்கூடிய துணிவு என்னட்டை இல்லை. நீயே சொல்லு."

"நான் சொல்லுவன். ஆனால், இதைத் தாங்கிக் கொள்ளுற பக்குவம் அப்பா, அம்மாவுக்கு இருக்குதா?"

"அதுதான் எனக்கும் தெரிய இல்லை. காலம் தான் மறுமொழி சொல்ல வேணும்" என்றபடி சுபோதினி வீட்டினுள் பிரவேசித்தாள்.

அன்றைய இரவும் சுபோதினியால் சரிவரத் தூங்க முடியவில்லை. பலவித கெட்ட கனவுகள் கண்டாள்.

காலையில் எழுந்தவள் சகல காரியங்களையும் இயந்திர கதியாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA LIBRARY

முடித்துக் கொண்டு அலுவலகத்திற்குச் சென்றாள்.

நிர்மலன் கூப்பிட்டு அனுப்பினான்.

"பிரதீப்பை நேற்று 'ஈவினிங்' சந்திச்சீரா?"

"சந்திச்சன்."

"என்ன சொல்லி இருப்பார் எண்டு சொல்லட்டுமா?"

'சரி' என்பது போல் சுபோதினி தலையாட்டினாள்.

"தனக்கு கொஞ்சம் 'டைம்' தரும்படி சொல்லி இருப்பாரே!"

"'யெஸ்', நீங்க சொல்றது சரி."

"அவர் இனி என்ன சொல்லுவார் எண்டும் சொல்லட்டுமா? 'சுபோ, உம்மைக் கலியாணம் கட்டினால் நான் நிம்மதியாக வாழ ஏலாது. எண்டபடியால என்னை மறந்திடும்' எண்டு சொல்லுவார். இல்லாட்டி 'என்னை மன்னிச்சுவிடும்' எண்டு சொல்லுவார்."

"இதே மறுமொழியைத் தான் நான் அவரிட்டை இருந்து எதிர்பார்க்கிறன்."

நிர்மலன் தலையை ஆட்டியபடி புன்னகைத்தான். "இப்பவும் ஒண்டும் 'லேட்'டாக இல்லை. நீர் சரி எண்டு சொன்னால் நான் உம்மைக் கைப்பிடிப்பன்."

"'நோ சேர்'. நேத்தைக்கு சொன்னதைத் தான் இப்பவும் சொல்லுறன். நான் உங்களை 'லவ்' பண்ண இல்லை."

"அது சரி தான். இனி 'லவ்' பண்ணும். நான் வேண்டாம் எண்டா சொன்னனன்" என நிர்மலன் குரலை உயர்த்தினான்.

"கிறிஸ்டி என்ர உடலைப் பலாத்காரமாக அடைஞ்சார். நீங்க என்ர உள்ளத்தைப் பலாத்காரமாக அடையப் பார்க்கிறீங்களா? 'சேர், லவ்' வை மலினப்படுத்தாதீங்க."

நிர்மலனின் முகம் சிறுத்து விட்டது.

"பொம்பளையளுக்கு கொழுப்பு நிறைய இருக்குது" என்று அவன் முணுமுணுக்க, சுபோதினி அங்கிருந்து அகன்றாள்.

பத்து மணிபோல் பிரதீப் தொலைபேசியில் சுபோதினியுடன் தொடர்பு கொண்டான்.

"'சொரி' சுபோ" என்று பிரதீப் பேச்சை ஆரம்பிக்க, "'சொரி'" என்று சொல்லி அவள் ரிஸீவரை கீழே வைத்து விட்டாள்.

## (15)

**வே**லாயுதம் எரிமலையான நிலையில் கண்கள் சிவக்க, சுபோதினியைப் பார்த்தபடி நின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மங்கலேஸ்வரி கைகளைப் பிசைந்தவண்ணம், கணவனை மருட்சியுடன் பார்க்கிறாள். பின் மகளைப் பரிதாபத்துடன் பார்க்கிறாள்.

"சீ! உன்னால எங்கட குடும்ப மானமே போயிட்டுது. நான் இனி எந்த முகத்தோடை வெளியில உலாவுறது?" என்று உச்சத் தொனியில் வேலாயுதம் கத்தினார்.

"ஏதோ அவளின்ர கெட்ட காலம் நடந்திட்டுது. அதைப் போய் பெரிசு பண்ணி......" மங்கலேஸ்வரி மகளுக்காகப் பரிந்து பேசினாள்.

"நடந்த உடன எங்களுக்கு சொல்லி இருந்தாலும் நாங்கள் ஏதாவது மாற்று ஒழுங்குகளைச் செய்திருக்கலாம். சம்பவம் நடந்து இன்றோடை இரண்டு மாசம் முடிஞ்சு போச்சு. இண்டைக்கு இவ மயங்கி விழுந்து ஆஸ்பத்திரியில 'ஓஃபிஸ்'காரங்கள் சேர்த்திருக்காவிட்டால், இண்டைக்கும் எங்களுக்கு தெரிஞ்சிருக்காது. வயித்தைத் தள்ளிப் பிடிச்சுக் கொண்டு போகக்கிள்ளை தான் அறிஞ்சிருப்பம்."

சுபோதினி எவ்வித உணர்ச்சிகளையும் வெளிக்காட்ட முடியாத நிலையில் கதவு நிலையில் சாய்ந்தபடி நின்றாள்.

மதியம் சாப்பாட்டுக்கு முன் அந்தச் சம்பவம் நிகழ்ந்து விட்டது. 'கம்பியூட்டரில் புரோகிராம்' ஒன்றை 'என்ரர்' பண்ணிக் கொண்டிருக்கையில் அவள் தலை சுற்றியது. நெற்றியில் வியர்வை துளிர்விட்டது. கை விரல்களை நடுக்கம் பற்றியது.

இதைக் கண்டு சுசிலா அங்கு வர முந்தி, சுபோதினியை மயக்கம் தழுவி விட்டது. உடனே சுசிலா வேறு மூன்று பெண்களின் உதவியுடன் அவளை 'விசிட்டர்ஸுக்கான' சோபா ஒன்றில் படுக்க வைத்தாள். பின் மட்டை ஒன்றை எடுத்து விசிறினாள். 'யாரோ' தண்ணீர் கொண்டு வந்து அவள் முகத்தில் தெளித்தார்கள். சுபோதினி கண் விழித்தாள்.

இதற்கிடையில் அங்கு நிர்மலன் வந்து விட்டான். சுசிலாவிடம் நடந்தவற்றைக் கேட்டு விட்டு, "சுபோவை 'ஹொஸ்பிட்டலுக்கு' கொண்டு போவமா" எனக் கேட்க, "அது தான் நல்லது" என்றாள்.

'கம்பனி வேனில்' சுபோதினி ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லப்பட்டாள். 'வேனில்' நிர்மலனும் சென்றிருந்தான்.

சுபோதினியை ஆஸ்பத்திரியில் அனுமதித்தார்கள்.

நிர்மலன் வெளியே காத்திருந்தான். டொக்டர் அவனுக்குத் தெரிந்தவர். சுபோதினியைச் சோதித்து விட்டு வெளியே வந்தார்.

"நிர்மலன், ஆர் 'கேர்ள்'?" எனக் கேட்டார் 'டொக்டர்.'

"என்ர 'கம்பெனியில' வேலை செய்யுறா."

"'ஷீ இஸ் பிரக்னன்ட்'. அது தான் மயக்கம் போட்டுட்டா. 'ஷீ இஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லிட்டில் வீக்'......" என்று 'டொக்டர்' சொல்லிக் கொண்டு போக, நிர்மலன் பேச்சை இழந்து விட்டான்.

கிறிஸ்டியின் கொடூரமான செயலின் சுவடு இன்னும் தொடர்கிறது என்று எண்ணிய போது நிர்மலனுக்கு சுபோதினி மீது பச்சாதாபம் ஏற்பட்டது.

'டொக்டரின்' அனுமதியுடன் அறையினுள் சென்றான் நிர்மலன். சுபோதினி கட்டிலில் சாய்ந்திருந்தாள்.

"நடக்கக் கூடாதது எல்லாம் ஒண்டு மாறி ஒண்டு நடக்குது போல. மனதைத் தைரியப்படுத்திக் கொண்டு இரும்" என நிர்மலன் சொன்னான்.

"என்ர மனத் தைரியம் என்னை விட்டு அகலவில்லை."

"ஆனால், உம்மட மனதில இருக்கிற வைராக்கியத்தைக் கொஞ்சம் இளக்க வேணும். அப்பத் தான் வாழ்க்கையைச் செழிப்பாக்கலாம்......"

சுபோதினி புன்னகைத்தாளே தவிர, ஒரு வார்த்தை கூட வெளியிடவில்லை.

"சுபோ, உமக்கு நடந்த கதியைப் பற்றி நீர் உம்மட 'பேரன்ட்ஸுக்கு' சொல்ல இல்லை. இனியும் இதை நீர் ஒளிக்கிறது பிழை. நான் உம்முடைய அப்பாவுக்கும் 'இன்போர்ம்' பண்ணப் போறன்" என்ற ஓர் ஏகாந்தத்தில் சொன்னான் நிர்மலன்.

"வேண்டாம் 'சேர்'...... என்னை இந்த நிலையில கண்டால் அப்பாவுக்கு 'ஹார்ட் அட்டக்' வந்து விடும்."

"எத்தனை நாளைக்குத்தான் இதை ஒளிக்கப் போறீர்? எண்டோ ஒரு நாளைக்கு இது வெளியில வரப் போகுது. அதை இண்டைக்கே சொல்லி விடுறது நல்லது."

"வேண்டாம் 'சேர்'....... இன்னும் கொஞ்ச நாள் போகட்டும். பக்குவமாக அவையளிட்டை சொல்லுறன்" என்று சுபோதினி சொல்லிக் கொண்டிருக்கையில் வேலாயுதமும், மங்களேஸ்வரியும் அங்கு வந்தார்கள்.

அதன் பின் அங்கு ஒரு பூகம்பமே வெடித்தது. ஆஸ்பத்திரி என்று யோசிக்காமல் வேலாயுதம் மகளைத் திட்டித் தீர்த்தார். நிர்மலன் அவள் சார்பு நியாயத்தை எடுத்துரைத்த போது, அவன் மீதும் அவர் எரிந்து விழுந்தார். "எல்லாரும் சேர்ந்து மகளைக் கெடுத்துப் போட்டியள்" என்று கத்தினார்.

ஆஸ்பத்திரியில் இருந்து 'கம்பெனி வேனில்' சுபோதினி யையும், அவள் பெற்றோரையும் இறக்கிவிட்டு, நிர்மலன் போய்விட்டான்.

வேலாயுதம் இறுதிவரை தன் நிலையில் இருந்து மாறவில்லை. அவர் கடுமையான வார்த்தைகளால் சுபோதினியை அர்ச்சித்தார். சுபோதினி தலை குனிந்த நிலையில் ஒரு வார்த்தை கூட வெளியிடாமல் நின்றாள்.

அவள் பக்க நியாயத்தை மங்களேஸ்வரியே எடுத் துரைத்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சரி இனி என்ன செய்யுறது" என்று வேலாயுதம் கேட்டார்.

மங்களேஸ்வரி ஒன்றும் கூறவில்லை. மௌனமாக நின்றாள்.

"சொல்லு..........." வேலாயுதம் உறுமினார்.

"நீங்க தான் ஒரு முடிவு எடுக்க வேணும்."

"நான் அவள் என்ர மகள் இல்லை எண்டு இண்டைக்கே தலை முழுகப் போறன்."

இதைக் கேட்டு மங்களேஸ்வரி அதிர்ந்தாள். அதே உணர்ச்சியை சுபோதினியும் அடைந்தாள்.

"அப்பா உங்களுக்கு விசரா? அக்கா தான் ஏதோ பிழை செய்திட்டா எண்ட மாதிரி கத்துறியள். துரதிர்ஷ்டவசமாக நடந்த ஒரு சம்பவத்துக்காக ஏன் அவவைத் தண்டிக்கிறீங்க?" என்று ஆக்ரோஷமாகக் கேட்டபடி தர்ஷிகா வந்தாள்.

அவளைச் சுட்டெரிப்பது போல் வேலாயுதம் நோக்கினார். "அவள் ஏன் அந்த உண்மையை மறைத்தாள்?"

"இதெல்லாத்தையும் என்னெண்டு ஒரு அப்பாவுக்கு, அம்மாவுக்கு சொல்லுறது எண்டு தெரியாமல் அக்கா தவிச்சா. என்னைத்தான் உங்களிட்டை சொல்லச் சொன்னா. ஆனால், நான் தான் சொல்ல இல்லை."

"ஏன்?"

"உங்கட 'ஹார்ட்டைப்' பற்றித் தானே எனக்குத் தெரியும்? ஒரு சின்ன அதிர்ச்சியூட்டுற சங்கதியைக் கூட உங்களால தாங்க முடியாதே."

"இப்ப கேட்டுக் கொண்டு மரமாட்டம் நிக்கிறனே. செத்துப் போட்டனோ?"

"அப்பா, அக்கா செய்யாத குற்றத்தை மன்னிச்சு அதற்கு ஏதாவது பரிகாரம் காணுங்க."

"என்னை என்ன செய்யச் சொல்லுறாய்? அவளை இந்தக் கதிக்கு ஆளான பெடியன் உசிரோடை இருந்தாலும் அவன்ர கையை, காலை கட்டிப் பிடிச்சு இவளைக் கட்டும்படி கேட்டிருப்பன். அவனும் செத்திட்டானே. இப்ப நான் என்ன செய்யுறது?"

"அப்பா, இவவின்ர 'ஒஃபிஸ் எக்கவுண்டன்' அண்டைக்கு இஞ்ச வந்தாரே நிர்மலன்..... அவர் இவவை விரும்புறாராம். அவரைக் கேட்டுப் பார்த்தால் என்ன?" என்று தர்ஷிகா சொல்ல வேலாயுதத்தினதும், மங்களேஸ்வரியினதும் பார்வைகள் வீச்சுடன் சுபோதினியின் முகத்தில் படிகின்றன.

"'நோ', அவரை என்னால கட்ட ஏலாது." சுபோதினி கத்தினாள்.

"ஏன்ரி?" வேலாயுதம் ஆவேசத்துடன் கேட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நான் அவரை விரும்ப இல்லை."

"அதுக்கு என்னடி? அவர் உன்னை இந்த நிலையிலையும் கட்டத் தயாராம்."

"சுபோ......" மங்களேஸ்வரி கனிவுடன் பேச்சை ஆரம்பித்தாள். "விதண்டாவாதம் புரியாதை. இது உன்ர வாழ்க்கை பிரச்சனை இல்லை. எங்கட குடும்ப மானம், மரியாதை, கௌரவம், தர்ஷிகாவின்ர கலியாண வாழ்க்கை எண்டு நிறையவே இதில அடங்கிக் கிடக்குது."

"அதுக்காக விரும்பாத ஒருவரை கலியாணம் கட்டச் சொல்லுறீங்களா அம்மா?"

"அவரில என்ன குறையைக் கண்டனி?"

"ஒரு குறையையும் காண இல்லை. ஆனால், அவரை நான் 'லவ்' பண்ண இல்லை. நான் பிரதீப்பை தான் 'லப்' பண்ணினனான்."

"அவன் தானே உன்னை இந்த நிலையில கட்ட ஏலாது எண்டு சொல்லுறானாம்."

"ஓமோம். அது உண்மை."

"உன்னை நிர்மலன் விரும்புறாராம். உன்ர மனதை மாத்தி அவரைக் கட்டுறதைப் பற்றி யோசி."

"'நோ'. நான் பச்சோந்தி இல்லை. ஒருத்தரை 'லவ்' பண்ணிவிட்டு இன்னொருத்தரைக் கலியாணம் கட்டுறதுக்கு."

"உன்ர வயித்தில வளர்றதுக்காகவாவது உன்ர நியாயத்தை மற. அவரே உன்னைக் கட்டத் தயாராக இருக்கக் கிள்ளை நீ உன்ர மனதை மாத்து. இஞ்ச இருக்கிற எல்லாரையும் ஒருக்கால் நினைச்சுப் பார்."

"முடியாது, முடியாது."

"அக்கா......" தர்ஷிகா தமக்கையின் இரு கரங்களையும் பற்றினாள்." நீ உன்ர வரட்டுப் பிடிவாதத்தைக் கைவிட வேணும். உனக்கு வாழ்க்கை தாறதுக்கு நிர்மலன் துடியாய் துடிக்கிறார். நீ உன்ர வயித்தில சுமக்கிற பாவப்பட்ட சின்னத்துக்காவது உன்ர முடிவை மாத்த வேணும்."

"ஓமோம் சுபோ...... 'பிளீஸ்' உன்ர பிடிவாதத்தை கைவிடு." மங்களேஸ்வரி கண்ணீருடன் இரந்தாள்.

வேலாயுதம் மகளை நெருங்கினார். "சுபோ, உன்ர அம்மா, தங்கச்சி சொல்லுறதைக் கேள். உன்ர நல் வாழ்க்கைக்காக அவையள் சொல்லுறதைக் கேள்" என்று வேலாயுதம் பதுமையாகக் கூறினார்.

"அக்கா, உன்ர மனதை மாத்தன். எங்களுக்காக இதை யாவது செய்ய மாட்டியா?"

சுபோதினிக்கு அவர்களது மன்றாட்டங்களும், கெஞ்சல் களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனதுக்குள் நிறைய உணர்ச்சிகளை வடிய விட்டன.

"என்னை யோசிக்க விடுங்கோ" என்று அவள் கூற, "அக்கா" என்றபடி தர்ஷிகா அவளைக் கட்டி அணைத்தாள்.

## (16)

தயங்கிய உள்ளத்துடன் நிர்மலனின் அலுவலக அறைக்குள் பிரவேசித்தாள் சுபோதினி.

'பைல்'களுக்குள் முகத்தைப் புதைத்திருந்த நிர்மலன், தலையைத் தூக்கினான்.

"'சேர்', உங்களோடை ஒரு முக்கிய விஷயம் பேச வேணும்."

"இரும்."

"நேத்தைக்கு இரவு முழுவதும் யோசிச்சன். என்ர வாழ்க்கையை மாற்றி அமைக்கிறது எண்டு முடிவு எடுத்திருக்கிறன்."

"என்ன மாதிரி?"

"அப்பா, அம்மா, தங்கச்சியின்ர ஆசையை நிறை வேற்றுறது எண்டு."

"விளக்கமாகச் சொல்லுமன்."

"உங்களைக் கலியாணம் முடிக்கிறது எண்டு."

நிர்மலனின் முகத்தில் மகிழ்ச்சி பரவியது. "கடைசியாக உம்மட மனதை மாத்திப் போட்டீர் போல........"

"ஓமோம். மாத்த வேண்டிய கட்டாயம். எல்லாருமே விடாப் பிடியாக தங்கட மரியாதை, கௌரவத்துக்காக உங்கள நான் கலியாணம் முடிக்க வேணும் எண்டு அன்புக் கட்டளையிட, என்னால மறுக்க ஏலாமப் போயிட்டுது. என்ர மனச்சாட்சிக்கு எதிராக நான் ஒரு முடிவை எடுத்திருக்கிறன். ஆனால்........." என்றவள் பேசுவதை நிறுத்தினாள்.

"ஆனால்.......?"

"ஆனால், உங்களுக்கு உண்மையான 'வைஃபாக' நடப்பன். உங்கட ஆசாபாசங்களை விளங்கி அதுக்கேத்த மாதிரி நடப்பன். உண்மையைச் சொன்னால் என்ர மனதில பிரதீப்பை..... என்ர கற்பை அநியாயமாக இழந்திட்டன் எண்டு ஒரு துக்கம் கிடந்தாலும், அதைப் பெரிதுபடுத்தாமல், சந்தோஷமாக வாழுவன் எண்டு எனக்கு நம்பிக்கை இருக்குது" என்று உறுதிமிக்க குரலில் சுபோதினி கூறிக்கொண்டு போக, புன்னகை மாறாமல் தலையாட்டியபடி நிர்மலன் அமர்ந்திருந்தான். ஆனால், அவன் ஒன்றுமே கூறவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஒரு பக்கம் நான் துரதிர்ஷ்டசாலியாக இருந்தாலும், இன்னொரு பக்கம் நான் அதிர்ஷ்டசாலியாகத் தான் இருக்கிறன். என்னைச் சுற்றி என்னை நேசிப்பவர்கள் இருக்கிறதை நினைக்கக்கிள்ளை எனக்கு சந்தோஷமாக இருக்குது. என்னில இருந்த ஒரு தலைக் காதலை – நான் உங்களை உதாசீனம் செய்த போதும் நீங்கள் இன்னும் அந்தக் காதலுக்காக, உங்கட வாழ்க்கையைத் தியாகம் செய்யப் போறதை நினைக்கக்கிள்ளை என்ர முழு உடலும் சந்தோசத்தை அடையுது" என்றவளின் கண்கள் ஆனந்த மிகுதியால் நீரைச் சொரிந்தன.

நிர்மலன் தொண்டையை ஒரு முறை சொறிந்தான் "நீர் சந்தோஷம் அடையக்கிள்ளை எனக்கும் சந்தோஷமாகத்தான் இருக்குது. உம்மில எனக்கு ஏற்பட்ட ஊமைக் காதல் இன்னும் எனக்குள்ளை அடங்கி கிடக்குது. உம்மில எனக்கு இருக்கிற அன்பு இன்னும் குறைய இல்லை. உம்மை நான் கைப் பிடிக்கப் போறது நான் செய்யப்போற தியாகம் இல்லை. உம்மில எனக்கு ஏற்பட்டிருக்கிற காதல் இன்னும் என்னை விட்டு அகல இல்லை. அது இன்னும் எனக்குள்ளை அடங்கிக் கிடக்குது" என்றான் நிர்மலன்.

சுபோதினி கண்களைத் துடைத்தாள். "நான் உங்களுக்கு ஏற்ற ஒரு 'வைஃப்பாக' வாழுவன் எண்ட நம்பிக்கை எனக்கு இருக்குது. நீங்கள் செய்யப் போறது உங்களைப் பொறுத்தளவில வேறு அர்த்தம் இருந்தாலும், என்னைப் பொறுத்தளவில அது ஒரு மாபெரும் தியாகம். நீங்கள் உங்கட முழு வாழ்க்கையையே எனக்காகத் தியாகம் செய்து விட்டீங்கள்" என்றவள் 'பட'ரென ஒரு எட்டில் அவனை அடைந்து, அவன் கால்களைக் கட்டிப் பிடித்தாள்.

இதை நிர்மலன் சற்றேனும் எதிர்பார்க்கவில்லை. அவன் ஆசனத்தில் இருந்து எழுந்து அவள் கைகளைத் தன் கால்களில் இருந்து விடுவித்து, அவளை எழுப்பி விட்டான். "என்னைக் கடவுளாக்கி விடாதையும். நான் வெறும் மனிதன் தான்" என்றவன், அவளை அணைத்தபடி ஆசனத்திற்கு இட்டுச் சென்று அமரச் செய்தான்.

பின் நிர்மலன் தனது ஆசனத்தில் அமர்ந்தான். இருவரும் ஒருவரை ஒருவர் சிறிது நேரம் பார்த்துக் கொண்டிருந்தனர். சுபோதினியின் கண்கள் நிறையவே 'படபட'த்தன. புன்னகை களும் அடிக்கடி வெளிப்பட்டன.

"சரி இனி எங்கட கலியாணத்தைப் பற்றிக் கதைப் போமா?" என்று நிர்மலன் அந்த அமைதியைக் கலைத்தான்.

'கதையுங்களேன்' என அவள் கண்களால் அன்பு வேண்டுகோள் ஒன்றை விடுத்தாள்.

"அடுத்த வருஷம் தான் கலியாணம்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சரி."

"அதாவது உமது பிள்ளை பிறந்து ஆறு மாதங்கள் கழிய."

"சரி."

"பிள்ளை பிறந்து மூன்று மாதங்கள் கழிய, அதை விவேகானந்தா அனாதை ஆசிரமத்தில விட்டுட்டு வந்து விட வேணும். அதுக்குப் பிறகு உமக்கும், அந்தப் பிள்ளைக்கும் இடையில ஒரு தொடர்பும் இருக்கக் கூடாது."

நிர்மலன் அமைதியாக கூறி முடிக்கவும், சுபோதினியின் முகத்தில் கோபம் தொக்கி விட்டது.

"நீ...நீ...நீங்கள் என்ன சொல்லுறீங்க?"

"நீர் எப்படி கெட்டுச் சீரழிந்தாலும் பரவாயில்லை. ஆனால், நான் உம்மைக் கலியாணம் முடிக்கக்கிள்ளை நீர் தனியாக இருக்க வேணும்."

"'சேர்', ஏன் எனக்கும், என்ர பிள்ளைக்கும் இடையில இருக்கப் போற பாசத்தை உடைக்கப் போறீங்க?"

"அப்ப தான் நான் என்ர அன்பை உம்மில காட்டலாம். ஒரு பாவச் சின்னத்தை பார்க்க நான் விரும்ப இல்லை. அதை நீர் பார்ப்பதையும் நான் விரும்ப இல்லை."

"பாவச் சின்னம்?"

"ஓமோம். ஆரோ ஒருவன் உம்மைக் கற்பழிச்சதால வந்த ஒரு சின்னம் தானே? அது பிறக்க முந்தியே அதின்ர தகப்பனை சாகடிச்சிருக்குது."

"'சேர்', வார்த்தைகளை அளந்து பேசுங்க."

நிர்மலனின் முகம் சிவந்து விட்டது. "நான் வார்த்தைகளை அளந்து தான் பேசுறன். என்ர விருப்பப்படி என்னோடை வாழ்க்கையைப் பிணைக்க விருப்பம் எண்டால் என்ர வீடு என்டெண்டைக்கும் திறந்து இருக்கும். இல்லாவிட்டால் நீர் உம்மட வழியைப் பாரும்."

"எல்லா ஆம்பிளையளுமே ஒரு மாதிரித்தான்" என்று கறுவிய சுபோதினி, அங்கிருந்து வெளியேறினாள்.

சுபோதினி அன்றைய தினம் முழுவதும் யோசனையில் மூழ்கி இருந்தாள். நிர்மலனை நினைக்க, நினைக்க ஆத்திரம் நிறையவே அவளைச் சூழ்ந்தது.

அவளுக்குப் பிறக்கப் போற பிள்ளையை மறக்கும்படி சொல்கிறானே! அந்தப் பிள்ளை தானே அவனைத் திருமணம் செய்வது என முடிவு எடுத்ததிற்கு முக்கிய காரணமாகும். அவளைப் பொறுத்தளவில் குடும்பக் கௌரவம், தங்கையின் வாழ்வு எல்லாம் அடுத்த கட்டங்கள் தான்.

நிர்மலனை இனியும் நம்புவது அர்த்தமற்றது என்ற முடிவுக்கு அவள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தாள். அதே வேளை, தனது வாழ்க்கையை மாற்றி அமைக்க வேண்டும் என நினைத்தாள்.

என்ன மாதிரி மாற்றுவது?

தனித்து வாழ்வதென்றால், அந்தப் 'பாவச் சின்னத்தை' அவளால் சுமக்க முடியாது. அதற்கு உயிர் கொடுக்க முடியாது. அவள் தந்தையே அவள் குரல் வளையில் கையை வைத்து விடலாம்.

அந்த நிழலில் அவள் வாழ விரும்பவில்லை. புதிய நிழலை நாட வேண்டும். அது எங்கேயுள்ளது?

'திடுதிப்'பென அவள் இதயத்தை அந்த தகவல் அழுத்துகிறது. நிர்மலன் தான் அந்த நிழலை உச்சரித்திருந்தான்.

விவேகானந்தா அனாதை ஆசிரமம்...... அங்கே போய் பிறக்கப் போகும் பிள்ளைக்கு அனாதை அந்தஸ்தைப் பெற்று, அங்கே வாழ முடியுமென்றால்..........!

ஒரு குருட்டு நம்பிக்கை அவளுள் பிறக்கிறது. அந்த நம்பிக்கை தூரத்து நட்சத்திரமாகத் தோன்றினாலும், அதை அடைய வேண்டும் என்ற ஓர் உத்வேகம் அவளுள் அடைக்கலம் புகுந்து விடுகிறது.

நம்பிக்கை தானே வாழ்க்கையின் அத்திவாரம்? அந்த அத்திவாரத்தைத் தேடி அவள் செல்கிறாள்.

இருட்டு மட்டும் தான் துணை.

வீட்டில் யாவரும் தூங்கி வழிகின்றனர். மனத் தைரியத்தை நிறைய வரவழைத்தபடி நடக்கிறாள்.

மின்னல் வெட்டுகிறது.

இடியும் இடிக்கிறது.

இயற்கைக்கும் அவள் நிலை துயரை அளித்து விட்டதோ!

மழைத் தூறல் போடுகிறது.

தூறலை அவள் பொருட்படுத்தவில்லை.

நடையை விரைவுபடுத்துகிறாள்.

மழை பெலத்துப் பெய்கிறது.

அவள் தெப்பமாக நனைந்து விட்டாள்.

அவள் முன்னேற்றத்தில் தயக்கம் இல்லை. 'விறுவிறுப்பே' நிறைந்திருந்தது.

அவளுக்குக் களைக்கிறது.

வயிறு உளைகிறது.

உடல் 'வெட,வெட'க்கிறது. பற்கள் தாளமிடுகின்றன.

நடக்கிறாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் தலை சுற்றுகிறது.

விவேகானந்தா அனாதை ஆசிரமம் தெரிகிறது.

அவள் தைரியத்துடன் நடக்கிறாள். தலை ஒரு பக்கம் சரிய முற்படுகிறது.

சுய நினைவு அவளை விட்டு அகல முற்படுகிறது. ஆனால், அவள் தலையை எப்படியோ நிமிர்த்தி விடுகிறாள்.

ஆசிரமத்தை அண்மிக்க, மனத் தெம்பு கிளர்ந்தெழுகிறது. ஆனால், உடல் பலம் அவளை விட்டு அகல........

மீனாட்சியம்மாளின் பார்வைக்குள் அவள் உருவம் சிக்கி விடுகிறது.

புதியதொரு நிழல் அவளுக்காகக் காத்திருக்கிறது.

களங்கமற்ற நிழல். □□□□

UNIVERSITY OF ... LIBRARY 2000 - 5 -



515251
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
2000 -5- 31
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதாசிரியர் சோ. ராமேஸ்வரனின் பதினாறாவது நூல் இதுவாகும். இவரது முதலாவது குறுநாவலும் இதுவாகும். இதுவரை அதாவது 1992க்குப் பின் பதினைந்து நூல்களை அவர் வெளியிட்டுள்ளார். இவற்றில் நாவல்கள், சிறுகதைத் தொகுப்புகள், சிறுவருக்கான கதைகள் ஆகியன அடங்கும்.



பருத்தித்துறை, ஆத்தியடியைச் சொந்த ஊராகக் கொண்ட ராமேஸ்வரன் கொழும்பு 7 இல் உள்ள ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி பயிற்சி நிறுவகத்தில் தகவல்; வெளியீட்டு உத்தியோகத்தராகக் கடமையாற்றுகிறார். தமிழ் வாசகர் மத்தியில் பிரபல்யமான இவர் சமூக நாவல், சிறுகதை, நகைச்சுவைக் கதை, நகைச்சுவைத் தொடர்கள், கட்டுரைகள், பேட்டிக் கட்டுரைகள், மொழிபெயர்ப்புகள் என்று சகல துறைகளிலும் பிரகாசிக்கின்றார். இவர் எழுதிய பல சமூக, நகைச்சுவை நாடகங்கள் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தேசிய சேவையில் ஒலிபரப்பப்பட்டுள்ளன.

இவரது ஒரு சிறுகதைத் தொகுப்பு சிங்களத்திற்கும், அதே சிறுகதைத் தொகுப்பு ஆங்கிலத்திற்கும் மொழிபெயர்க்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன.

வெளிநாடுகளிலும், இலங்கையிலும் நடைபெற்ற சிறுகதை, நாவல் போட்டிகளில் பரிசுகளை ஈட்டியுள்ள ராமேஸ்வரன் 1980க்கு முன்னர் 'வீரகேசரி' நிறுவனத்தில் உதவி ஆசிரியர், விவரண ஆசிரியர் ஆகிய பதவிகளை வகித்தார். வவுனியாவில் இருந்த காலத்தில் முழு நீள நகைச்சுவை நாடகங்களை மேடை யேற்றியுள்ளார்.

**ISBN No. 955-96039-3-0**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org